Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

பக்கம் 24
ரூபா: 30.00
டிசம்பர் 31, 2015 - ஜனவரி, 06, 2016
முரசு 1150







குற்றச்செயல்களில் அகப்படும் அப்பாவிச் சாரதிகள்

கண்ணுக்கு மை தீட்டலாமா? காதலன் ஓடிவிடுவானா?



முகாம் மக்களும் நிலவுடமையும்

மன அழுத்தத்தை குறைப்பது எப்படி ?



பதற்றமடைய வைக்கும் பருவ வயது



## துக்கங்களை விரட்டும் கோபூஜை

ஆலய வழிபாட்டில் பசுக்களுக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. பசுக்கள் நமக்குப் பொருள் செல்வத்தையும் அருட்செல்வத்தையும் ஒரு சேர அளிக்கும் சிறப்புக்கொண்டது. காமதேனுவின் வழித்தோன்றலாகவே பூமியில் பசுக்கள் தோன்றின.

பூமியில் உள்ள அனைத்து புண்ணிய தீர்த்தங்களில் இருந்தும், புண்ணிய சேத்திரங்களில் இருந்தும் அழகும் புனிதமும் பரிசுத்தமும் உள்ள வஸ்துக்களிலுள்ள தேஜசை (ஒளியை) எடுத்து இறைவன் பசுவைப் படைத்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. பசுவை ஒருமுறை பிரதட்சணம் செய்தால் மூன்று உலகங்களையும் வலம் வந்த புண்ணியம் கிடைக்கும்.

பசுவின் உடலில் முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்கிறார்கள். எனவேதான் பசுவினை எங்கு கண்டாலும் அதனைத் தொட்டு வணங்கவேண்டும் என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. பசுவின் உடலில் எந்தப் பகுதியைத் தொட்டு, வணங்கினாலும் நமக்கு தெய்வத்தின் அருள் கிடைக்கும்.

## குழந்தைகள் என் சாட்சிகள்

குழந்தைகள், இவர்கள்தான் இயேசுவின் அன்புக்கு உரியவர்கள். "குழந்தைகளை இயேசு தொடவேண்டும்" (லூக் 18 :15) "ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினார்" ( லூக்10 :21)

"பாலகரின் மழலையிலும் குழந்தைகளின் மொழியிலும் உம்மைப் புகழ ஏற்பாடு செய்தீர்" (மத் 21 :16). இயேசுவுக்காக இரத்தம் சிந்தி முதல்முதலில் மறை சாட்சியம் தந்தவர்களும் இக்குழந்தைகளே.

இரண்டு வயது குழந்தைகள் தங்கள் உயிரைக் கொடுத்து இயேசுவைப் பாதுகாத்தனர். இன்றும் கொல்லப்படுகின்ற குழந்தைகள் ஒவ்வொன்றும் இயேசுவைப் பாதுகாக்கின்றது. உண்மை, நீதி, தூய்மை, இறைச்சார்பு இவைபோன்ற ஆண்டவனின் பண்புகளைப் பாதுகாக்கின்றனர். குழந்தைகளே அன்பு, எளிமை, அமைதி, மகிழ்ச்சி, நல்மனது இவைகளை இன்றும் உலகுக்கு அவ்வப்போது அறிமுகம் செய்கின்றனர், நினைவூட்டுகின்றனர்.

## முதலாளி, தொழிலாளர் கடமைகள்

முதலாளி முதலாளி என்ற நிலையிலும், தொழிலாளி தொழிலாளி என்ற நிலையிலும் சில கடமைகளைப் பேணிவர இஸ்லாம் கட்டளையிடுகிறது.

தொழிலாளியின் கூலியைக் கொடுப்பதில் தாமதம் செய்தல்கூடாது.

நபியவர்கள் நவின்றதாக அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அறிவிக்கிறார்கள்:- தொழிலாளிக்கு அவரது வியர்வை உலருமுன் கூலியை கொடுத்துவிடுவீர்களாக. (இப்னுமாஜா)

ஒரு ஊழியரை நியமனம் செய்தால் அவரது ஊதியத்தை முன்னதாகவே நிர்ணயம் முறை ஆகும்.

தமது ஊழியரிடம் தவறு ஏதும் நிகழ்ந்து விடின் அதனை மன்னித்துவிடுவது சிறந்த பண்பாடு என்பது மொழியாகும்.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

# தேன் கிண்ணம்



## புதுவருட வாழ்த்துக்கள்

வாழ்க்கை எனும்
பயணத்தை
வளமுடனே பயணித்திட
புத்தாக்கம் அளித்திட
புதிதாய் பிறக்கிறது
துன்முகி புதுவருடம்.
மங்களம் பொங்கும்
இந்நாளில்
புது பானையில்...
புதிய எண்ணங்கள்
புதிய முயற்சிகள்
புதிய நம்பிக்கைகள்
புதிய திட்டங்களை
அறிவு எனும்
அகப்பையை கொண்டு
உழைப்பு எனும்
தீயை மூட்டி
பொங்கட்டும் புதுவாழ்வு.

பிரஷா



## இதயம்



அவ்வப்போது
அவள்
அள்ளித் தந்த
அன்பினை
சேமித்து வைக்கும்
உடைக்கப்படாத
உண்டியல்.

ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.

## வேலையில்லை...



கொட்டிக் கிடக்கும்
காட்சிகளெல்லாம்
கற்பூர வாசனையாய்
கருவாட்டுக் கூடையில்...

சிந்திக்க மறந்து
சந்திகளும் சிரிக்க
சாக்கடைகளிலெல்லாம்
சல்லாபங்கள்....

நாகரிகமென்று
நாடகமாடி
நாற்றமடிக்கும்
ஊத்தைகள்...

கட்டிக் கிடக்கும்
கோவணத்தையும்
கழற்றிப் போடும்
கைங்கரியங்கள்...

பிறப்புக்கள்கூட
திரை மறைவில்...
நளினங்கள் மட்டும்
நிர்வாணமாய்...

கட்டிய தடங்களுக்கும்
வட்டியை கேட்குது...
வேட்டி அவிழ்ந்தபோதும்
வேசம் போடும் வர்க்கம்...

தம்முலை திருடியே
தலைமுறை திரியுது
தலைகள் கழற்றி
விலைகள் கேட்பதால்....

இழந்தவைகளுடன் – எம்
'வேலை'களும் சேருது...
இருட்டறையின் – உள்
ஒட்டடைகளாய்...

வே.முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.

## புத்தாண்டு!

தீமைகளை மறந்து
நல்லதை செய்திட
சோதனைகளை மறந்து
சாதனைகளை செய்திட
தோல்வியை மறந்து
வெற்றியை அடைந்திட
புதுப்பொலிவோடு
புத்தொளி வீசிட
துன்பங்கள் நீங்கி
இன்பங்கள் பொங்கிட
புன்னகை முகத்தோடு
புதுவருடத்தை வாழ்த்தி
வரவேற்போம்.

எஸ்.எஸ்.

## வெங்காயம்



இது கறி தேடி அலைந்த
கற்கால மனிதனின்
கண்ணில் அகப்பட்ட
காய்கறி!!!

பயிர்களில்
இவள் ஒருத்திதான்
பத்தினி!!!

உரிக்க உரிக்க
உடம்பினைக் காட்டமாட்டேன்
என அடம்பிடிக்கும்
தெய்வ பத்தினி!!!

தன்னைத் தொட்டவனை
கண்ணைத் தொடவைக்கும்
ஏக புத்திரி!!!

சமையல் உலகின்
முடிக்குரிய
இளவரசி இவள்!!!

ருசிக்கத்தான்
சிலபேர் இவளை
ரசிப்பதுண்டு!!!
ஆனால் - வெறும்
பசிக்காகவும்
ஏழை குடிசைகளில்
இவள் புசிக்கப்படுகிறாள்!!!

கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262, 0774150799**



**டிசெம்பர் - 31**

"எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளே குடிகொண்டிருக்கின்றன. உன்னால் எதையும் சாதிக்கமுடியும்."

சுவாமி விவேகானந்தர்

## நல்லை ஆதீன முதல்வருடனும், யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாருடனும்

# செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு!





யாழ். நல்லை ஆதீனத்திற்கு சென்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆதீன குருமுதல்வரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன் ஆசியும் பெற்றுக்கொண்டார்.

கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற இந்த சந்திப்பில் சமகால அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். முன்னதாக யாழ்.மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டுள்ள ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து ஆயருடன் சமகால அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்மை குறிப்பிடத்தக்கது. இந்த சந்திப்புகளில் வடக்கு மாகாண-சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா முன்னாள் மா நகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட்ட குழு வினரும் கலந்துகொண்டனர்.

## மஹிந்தவை நிராகரித்தார் சந்திரிக்கா!




எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் கட்சியின் வெற்றிக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நிராகரித்துள்ளார்.

ராஜபக்சவின் நடவடிக்கைகள் காரணமாகவே இரண்டு முக்கிய தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்விகண்டது. எனவே மஹிந்த ராஜபக்ச கட்சியில் இருந்து அகற்றப்படவேண்டும் என்று சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் இந்த இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இடையிலான சமரச முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபாலவுடனும் சந்திப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன.

## தமிழ் மக்கள் பேரவையின் ஜனநாயகரீதியான கருத்துக்களுக்கு செவிசாய்க்க வேண்டும்!

-மாவை தெரிவிப்பு-



தமிழ் மக்கள் பேரவையினரின் ஜனநாயகரீதியான கருத்துக்களுக்கு நாங்கள் செவிசாய்க்க வேண்டுமென தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்நிலையில், முதல்வர் விக்கினேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக மாவை சேனாதிராசாவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


## நாட்டை ஆள்வதில் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் போட்டி!



பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் எந்தவகையிலும் கருத்து ஒற்றுமை கிடையாது என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் திறப்புவிழாவில் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் என்னைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கிலேயே ரணிலும் மைத்திரியும் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கினர். மற்றபடி அவர்கள் இருவருக்கும் எந்த விடயத்திலும் கருத்து ஒருமைப்பாடு இல்லை. நான் எப்போதும் கூறுவதைப் போன்று ஒரேநேரத்தில் இரண்டு தலைவர்களால் நாட்டையாள முடியாது. ஒன்றில் ரணில் இந்நாட்டை ஆளவேண்டும். இல்லையேல் மைத்திரிபால நாட்டையாளவேண்டும். ஆனால் என்னைத் தோற்கடிப்பதில் ஒன்றுபட்டு செயற்பட்டதைப் போன்று இந்த விடயங்களில் எல்லாம் அவர்களால் ஒரு முடிவில் இணக்கத்தை எட்டமுடியாது. சுதந்திரக் கட்சி எங்கள் அனைவருக்கும் சொந்தமான கட்சி. அதனை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் பிரதமரால் குழு ஒன்று அமைக்கப்படுகிறது



அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் பிரதமரால் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழு ஒன்றை அமைக்கிறார். இந்தக் குழுவை அமைப்பதற்காக அவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. இந்தக் குழுவில் சட்டத்தரணி லால் விஜயதிலக்கவின் தலைமையில் 24 உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்.

பிரதமர் அலுவலக தகவல்படி இந்தக் குழுவில் அரசியல்வாதிகள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவுள்ளனர். இந்தக் குழு அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் மக்களிடம் இருந்து வாய்மூல எழுத்துமூல யோசனைகளை பெற்றுக்கொள்ளவுள்ளது. அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழு ஒன்றை அமைக்கிறார். இந்தக் குழுவை அமைப்பதற்காக அவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தக் குழுவில் சட்டத்தரணி லால் விஜயதிலக்கவின் தலைமையில் 24 உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர். பிரதமர் அலுவலக தகவல்படி இந்தக் குழுவில் அரசியல் வாதிகள் மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவுள்ளனர். இந்தக் குழு அரசியல் யாப்பு மீளமைப்பு தொடர்பில் மக்களிடம் இருந்து வாய்மூல எழுத்துமூல யோசனைகளை பெற்றுக்கொள்ளவுள்ளது.




## 5000 பட்டதாரிகளுக்கு எதிர்வரும் ஒரு சில தினங்களில் புதிய நியமனங்கள்!

எதிர்வரும் ஒரு சில தினங்களில் முதற்கட்டமாக பட்டதாரிகள் 5000 பேருக்கு புதிய நியமனங்கள் வழங்க உள்ளதாக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினை நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் சவாலாக இருந்துவருகின்றது.

இதனை கவனத்திற் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் எதிர்வரும் சில தினங்களில் முதற்கட்டமாக 5000 பட்டதாரிகளுக்கு புதிய நியமனங்களை வழங்க தீர்மானித்துள்ளது.

ஏனைய பட்டதாரிகளுக்கும் மிகவிரைவில் நியமனக் கடிதங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற ஒரு தொகை நிதியையும், அரச ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து பெறப்படுகின்ற ஒரு தொகை நிதியையும் வைத்து அமைக்கப் படுகின்ற பங்களிப்பு ஓய்வூதிய முறையினூடாகவே எதிர்வரும் காலங்களில் ஓய்வூதியம் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். 100 நாட்கள் வேலைத்திட்டம் என்பது தேசிய கொள்கைகளின் ஒரு செயற்பாடாக மேற் கொள்ளப்பட்டது. இதன்மூலம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் உள்ள மக்கள் பலவகையான நன்மைகளை பெற்றுக்கொண்டனர். நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களுக்கும் நாட்டுக்கும் தேவையான சகல அபிவிருத்தி திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில் வீதி, மின்சாரம், சுகாதாரம், கல்வி என பல துறைகளை குறிப்பிடமுடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். அதேவேளை இன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மனித வளங்களாக பயன்படுத்தும் (Man Power) ஊழியர்களின் எதிர்காலம் குறித்தும் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தினமுரசு வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## வஞ்சக முன்றலில் நின்று வெஞ்சினங்களை சுமக்கின்றோம்

காலத்திற்குக் காலம் இலங்கைத் தமிழர் அரசியல் பரப்பில் பல மாற்றங்கள் வந்தும்கூட ஏற்றங்கள் இல்லாத மாற்றங்களாகவே அது மடியுண்டு போகின்றது. அதற்கென்ன காரணம் என்பதுதான் இன்றுள்ள பிரச்சினையாகும்.

ஏனைய நாடுகளில் ஏனைய இனங்களில் இல்லாத இழுபறிநிலைகள் எமது இனத்திற்கான சாபமாக இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. விகிதாசார அரசியல் கட்சிரீதியான அரசியலாக அன்று மாறியது. அது பின்னர் அகிம்சைவழி அங்கீகாரக் கோரல்களாக வளர்ந்தது. எதுவும் சாத்தியப்படவில்லை என்ற எடுகோளின் அடிப்படையில் ஆயுதவழிப் போராட்டமாக அது பேர் உருவம்பெற்றது. முள்ளிவாய்க்காலில் முழுவதையும் இழந்தபின்னர் அது கட்சி வழி அரசியலிற்குள் மீண்டும் சிக்கியது.

தென்னிலங்கை சர்வாதிகாரத்தின் மத்தியில் தேடி எதையும் பெறமுடியாது என்கின்ற கட்டத்தில் நல்லாட்சிகூட நம்மைத் தேடிவந்தது. இருந்தும் இல்லை ஒரு ஏற்றம். தற்போது கட்சியரசியலிற்கப்பால் பேரவை எனும் பெயர்சொல்லி சில அரசியல் பக்கங்கள் புறப்பட்டுள்ளன. அதுவும் எங்கு போய் முடியுமோ! பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆகையால் மாற்றங்கள் இல்லையென்று மறுக்க முடியாது. அந்த மாற்றங்களில் ஏற்றங்கள் இல்லை. அதற்கென்ன காரணம் என்றால் வஞ்சகமுன்றலில் நின்று வெஞ்சினத்தை எமது தமிழ்த் தலைமைகள் சுமக்கின்றனர் என்பதே அடிப்படையாகும்.

மக்கள் நலனிற்கு எது சாத்தியப்படும் என்ப தற்கப்பால் சுயநல கொள்கைகள் அரங்கேறவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். மக்களிற்கு சாதகமான வழி சாத்தியப்படக்கூடிய வழி என்பது தெரிந்தும்கூட தமது வழியில் இருந்து இது விலகிப்போகின்றது என்பதற்காக எதிர்க்கின்றனர். எக்காளமிடுகின்றனர். அரசியலில் கில்லாடிகளாகி தமது பாதைக்கு வீதி போடுகின்றனரே தவிர தமிழர் தலைவிதியை எவரும் சிந்திப்பாரில்லை.

பொய்மைக்குள் அரசியல் நடாத்திப் பழகிப்பழகி மெய்மைக்கான சமூகசிந்தனைகள் எதுவும் எமது அரசியல்பரப்பில் இல்லாது போய்விட்டன. இதையே ஊடகங்களும் இன்று செய்கின்றன.

பேனாவை எடுத்து வைத்துக்கொண்டு சுவாரசியம் எனும்பெயரில் சூடு சூறணை கொஞ்சமும் இன்றி எழுதித் தள்ளுகின்றார்கள். அது அல்ல ஊடகம். இரு துருவங்களை இணைத்து சமூகநீதியை நிலைநாட்ட ஊடகங்கள் எத்தனிக்கவேண்டும்.

மாற்றங்கள் தேவை எங்கள் மனங்களில். இல்லையேல் எம் இனத்திற்கு என்றுமே விடிவு கிடைக்காது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை பற்றி பலவாறு விமர்சிக்கின்றோம். அது தொடர்பாக எமக்கு என்ன தெரியும். அதை விமர்சிக்க அங்குரார்ப்பணத்தைவிட, எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை ஆனால் நல்லன, தீயன என்று ஆயிரம் விமர்சனங்கள் வந்துவிட்டன.

மக்களிற்கு நன்மை பயக்குமானால் நல்ல வற்றை விமர்சிப்போம். தவறுகள் இருப்பின் திருந்துவதற்கு விமர்சிப்போம். அதைவிடுத்து எம்மை மீறிவிட்டது என்பதற்காக எதிர்வாதம் பேசுவது சிறுபிள்ளைத்தனமல்லவா...? எதையும் எங்கும் நாம் இறுதியில் கொண்டுபோவதில்லை. எம் சந்ததிக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதே எமது இலக்காகட்டும். நல்லதை வரவேற்போம், தீயதை எதிர்ப்போம், வஞ்சகமுன்றலில் நிற்கும் வெஞ் சினங்களை நிராகரிப்போம்.



# ஏமாற்றத்தின் எதிரொலி இது

யார் எதைச் சொன்னாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் போக்குகளில் காணப்பட்ட அதிருப்தியே தமிழ் மக்கள் பேரவை உருவாக காரணமானது என்பதை எவரும் மறுக்க முடியாது. முரண்பாடுகளைத் தணிப்பதற்காக உருமாற்றிப் பேசும் இணைத்தலைமைகளின் ஊடக அறிக்கைகள் தமிழ் மக்கள் பேரவையின் பாதை யையே மாற்றும்போல் இருக்கின்றது. தமிழ்மக்கள் பேரவை எதைச் சாதிக்கப் போகின்றது. என்பதற்கப்பால் எதையும் எப்படியும் தாம் நினைத்தபடி செய்துமுடிக்கலாம் எனும் கூட்டமைப்புத் தலைமை களின் நினைப்பிற்கு ஓர் உலைவைப்பு இடம்பெற்று உள்ளது என்பதை இப்பேரவை உருவாக்கம் உணரவைக்க வேண்டும்.

அதை இத்தலைவர்களிற்கு உணரவைத்தாலே அது மிகப்பெரிய வெற்றியை தமிழர் அரசியல் பரப்பில் பெற்றுத்தரும். தயவுசெய்து அந்த எண்ணக்கருவைக் குழப்பாதீர்கள். தற்போது இதன் பாதை மாறுகின்றது. விரைவில் சம்பந்தரின் சதிவலைக்குள் இப்பேரவை யும் அகப்பட்டுவிடும் என்பதே எமது கருத்து. அவ்வாறு அகப்பட்டால் அதன் உருவாக்கம்கூட அர்த்தமற்றுப்போகும்.

நிதானமான ஓர் நிழல் எல்லையை பேரவைக்குள் போடுங்கள். எதை எப்படிப் பேசுவது, அதை யார் பேசுவது, எவரை இதற்குள் உள்வாங்குவது, எதற்காக இது ஆரம்பித்தது, அதற்குள் எப்படி இருந்து செயற்படுவது என்பதைத் தெளிவாக திட்டமிடுங்கள். உங்கள் உறுப்பினர்களின் வெட்டிப் பேச்சு வேடிக்கையாக இருக்கின்றது.

வேதனைகளையும் சோதனைகளையும் சுமந்த தமிழ் மக்களின் அரசியல் தீர்வு எனும் விடயத்தில் தமிழ் தலைமைகள் சுய இலாபத்திற்கு அப்பால் நிதானமாக இருக்கவேண்டியது கட்டாய கடமையல்லவா...? முரண்பாடுகளிற்கப்பால் முன்னோக்கி நகரவேண்டியது இன்றைய தேவையல்லவா...? “விக்னேஸ்வரனோடு நேரில் நான் பேச இருக்கின்றேன்” என்று அன்றுகூறிய சம்பந்தன் பேரவை உருவாக்கம் பெற்றிராவிட்டால் இன்றுவரை பேசி இருக்கமாட்டார், 2016 இல் தீர்வு என விஞ்ஞாபனத்தில் கூறினீர்கள். இதுதொடர்பாக தற்போதைய நிலைப்பாடு என்ன? என அன்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சம்பந்தன். “இது தொடர்பாக அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இது எமது சக்திக்கு அப்பாற்பட்டது” என்று கூறியவர். பேரவை உருவாக்கத்தின் பின்னர் தாம் உருவாக்கிவரும் அரசியல் தீர்வுத்திட்டத்தைப் பேரவை குழப்பக்கூடாது என பிளேற்றை மாத்துகின்றார்.

தமக்கு எதிராக யாரும் தலைதூக்கக்கூடாது எனும் வெஞ்சினத்தை மனதுக்குள் வஞ்சகமாய் வைத்துக் கொண்டு ஜனநாயக நாட்டில் யாரும் கூடுவதற்கு உரிமையுண்டு என வெட்டிப் பேச்சு வெளிப்படையாகப் பேசுகின்றார். இப்பேச்சுக்கள் தான் தமிழர்க்கு மிச்சமாகப் போகின்றது. உண்மையை உலகறியச் சொல்லுங்கள். அரசியல் மழுப்பல் பேச்சுப் பேச ஆடம்பர அரசியல் பரப்பல்ல இது. முள்ளி வாய்க்காலில் முழுவதையும் தொலைத்த இனவிடுதலை அரசியல் பரப்பு.

நாலு பேச்சுக்குள் யாரையும் தம்வசம் இழுக்கும் வல்லமை சம்பந்தருக்கு உண்டு. இதன்மூலம் தற்போது விக்னேஸ்வரனையும் தம்வசம் இழுத்துவிட்டார் சம்பந்தன். பேரவையின் உருவாக்கத்தின் அர்த்தம் இருந்து பாருங்கள் வேரோடு அழியப்போகின்றது. சுயமாகத் தொழிற்படுவதற்கு பேரவைக்குள் பல தடைகள் இருக்கின்றன. விக்னேஸ்வரன் எதற்கும் துணிந்தவரல்ல. பதில் சொல்லக்கூடப் பயந்த மனிதன் அவர். கூட்டமைப்பின் பாதைகள் பயனற்றுப் போனமையால்தான். பேரவையின் பயணங்கள் ஆரம்பமானது என்பதைத் தலைநிமிர்ந்து சொல்ல ஒரு தமிழன் பேரவைக்குள் இல்லை. இதுதான் யதார்த்தம் என்பது அனைவரிற்கும் தெரியும். ஏன் அஞ்சுகின்றீர்கள்...? எவரும் வந்து இணையலாம் என்றால் சுமந்திரன், சம்பந்தரிடமே இப்பேரவையைக் கொடுத்திருக்கலாமே. ஏன் அதற்கு அப்பால் என்று ஆரம்பித்தீர்கள்...?

நிதானமான ஓர் நிழல் எல்லையை பேரவைக்குள் போடுங்கள். எதை எப்படிப் பேசுவது, அதை யார் பேசுவது, எவரை இதற்குள் உள்வாங்குவது, எதற்காக இது ஆரம்பித்தது, அதற்குள் எப்படி இருந்து செயற்படுவது என்பதைத் தெளிவாக திட்டமிடுங்கள். உங்கள் உறுப்பினர்களின் வெட்டிப் பேச்சு வேடிக்கையாக இருக்கின்றது.

அன்று உங்கள் உறுப்பினர் சுரேஸ் பீரேமச்சந்திரன் இது தொடர்பாக கருத்து வெளியிடும் போது; “தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனே காரணமாகும். இதுவரை தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் நிறைவேற்றத் தவறியுள்ளது. இதுவே இப்பேரவை உருவாக்கத் திற்குக் காரணம்” என்கின்றார்.

இதுதொடர்பாக இணைத் தலைவர் ரி.வசந்தராசா கருத்து வெளியிடும்போது, “தமிழ் மக்கள் பேரவையானது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பு அல்ல எனவும் அது தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துகின்ற, பக்கபலமாக செயற்படவுள்ள அமைப்பு எனவும் சம்பந்தரை இதற்குள் சேர்த்துக் கொள்ள விரைவில் முடிவெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

விக்னேஸ்வரன் கருத்து வெளியிடும்போது “இது தொடர்பாக எதுவும் எனக்குத் தெரியாது. அழைத்தார்கள் வந்தேன்” என்று முன்பு சிறுபிள்ளைத்தனமாகக் கூறினார். பின்பு “எவரும் வந்து இணையலாம். இதற்கு ஓர் எல்லை இல்லை” என்கின்றார். என்னய்யா நாடகமிது...? எல்லாம் செப்படி வித்தை முழுவதும் உண்மை யாரறிவார்...!



WikiLeaks

பகுதி -13

# புலிகள் சயனைட் தடவப்பட்ட கத்திகளைப் பயன்படுத்தினர்

1990-களில் புலிகள் பல சந்தர்ப்பங்களில் கைத்தொழில் பேட்டைகள்மீது இரசாயனக் கழிவு களை பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். போரியல் திறனை வெளிப்படுத்தி எதிரியை குழப்பமடையச்செய்கின்ற உத்தி யாக இதை முன்னிறுத்தினார்கள்.

1995ஆம் ஆண்டு இலங்கைப் படையினர்மீது புலிகள் இரசாயன வாயு தாக்குதல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டனர். இது ஒரு கடுமையான சமர். இதில் இருதரப்பிலும் 80 பேர் வரை கொல்லப்பட்டனர்.

புலிகள் 1990ஆம் ஆண்டு முதல் நச்சு ஆயுதத்தை பயன்படுத்தி உள்ளனர். மட்டக்களப்பில் இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் குளோரின் வாயு சிலிண்டர்களை வெடிக்க வைத்தனர்.

புலிகள் 2001 ஆம் ஆண்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் இராணுவ தளங்கள்மீது தாக்குதல்கள் நடத்தினர். அதிகாலை 3.30 இற்கு முதலாவது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. விமான நிலையத்தில் இருந்த கைத்தொழில் மற்றும் எரிபொருள் நிலையங் களே இலக்குவைக்கப்பட்டன.

விமான நிலையத்தை நெருப்பாலும், புகையாலும் சூழச்செய்வதை நோக்கமாகக் கொண்டு தாக்கியிருக்கின்றனர். பின்பு மோட்டார் தாக்குதல்கள் நடத்தினர். இத்தாக்குதலில் 12 விமானங்கள் அழிக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. இவற்றின் பெறுமதி பல மில்லியன் டொலர். அத்துடன் 20 நாட்களுக்கு விமான நிலையம் பூட்டப்பட்டது. சேதங் களை ஏற்படுத்தவும், படையினரை ஏமாற்றவும் கடற்புலிகள் இத்தாக்குதலில் புகையை பயன்படுத்தி இருந்தனர்.

யாழ்ப்பாணத்தை வந்தடைந்த கப்பல் ஒன்றின்மீது 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கடல் புலிகள் அடுத்த தாக்குதலை நடத்தினர். விமானநிலைய தாக்குதல் இடம்பெற்று ஒரு மாதத்துக்கு பின்னர் நடத்திய இத்தாக்குதலில் 225 தொன் குறைந்த சல்பர் உடைய டீசல், 160 தொன் மண்ணெண்ணெய், 275 தொன் ஓட்டோ டீசல் ஆகியவற்றால் நிரப்பப்பட்டு இருந்த கப்பல் எரிபொருள் தாங்கிக்கு தீ வைத்தனர்.

இரசாயனப் பொருட்களை விற்கின்ற முகவர்களுடன் புலிகள் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தனர். மலையக தேயிலை தோட்டங்கள்மீது 1986 இல் பொட்டாசியம் சயனைட் தாக்குதல் நடத்தினர் என்று புலிகளே உரிமைகோரி இருந்தனர். ஆனால் இத்தாக்குதல் நடத்தப்பட்டதற்கு வேறு ஆதாரங்கள் எதுவும் கிடையாது.

1990-களில் புலிகள் நச்சுத் தாக்குதல்களை பல சந்தர்ப்பங் களிலும் மேற்கொண்டுள்ளனர். சயனைட் நஞ்சுதடவப்பட்ட கத்திகளை பயன்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கன. அத்துடன் சயனைட் கொண்ட குப்பிகளுடன்கூடிய நிலக் கண்ணிவெடிகளை உருவாக்கி பயன்படுத்தினர். இதே காலப் பகுதியில் மட்டக்களப்பில் கிரானில் உள்ள இராணுவ தளம்மீது இவர்கள் குளோரின் வாயு தாக்குதல் நடத்தியபோதிலும் சேதவிபரங்கள்



வெளிவரவில்லை.

1990-களில் புலிகளுக்கு ஆயுத தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. இத்தட்டுப்பாடு காரணமாக புலிகள் இரசாயனத் தாக்குதல்கள் நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்துடன் இயக்கத்தில் உயிர் இழப்புக்கள் அதிகம் நேரம்கூடிய சந்தர்ப்பங்களிலும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி இழப்புக்களை குறைத்துக் கொண்டார்கள்.

## விக்கி – சிங்கள பத்திரிகை நடத்திய புலிகள்!

விடுதலைப் புலிகள் நடத்திய சிங்கள பத்திரிகை குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திலிருந்து வொஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சு தலைமைக் காரியாலய த்துக்கு 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அனுப்பப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இப்போது பார்ப்போம்.

புலிகள் வெளியிட்டு உள்ள சிங்கள பத்திரிகை ஒன்றை குறித்தே அண்மைய வாரங்களில் கொழும்பு அடங்கலாக நாடுமுழுவதும் பரவலாகப் பேசப்படுகின்றது.

தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு விடுதலைப் புலிகளின் கதையை சொல்வதே இப்பத்திரிகை யின் நோக்கம் ஆகும். பத்திரிகை யின் பெயர் DEDUNNA. தமிழில் இதன் அர்த்தம் வானவில் என்பது ஆகும்.

இது கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் வெளியிடப்படுகின்றது என்று தெரிகின்றபோதிலும் கடந்த வாரம் வரை இப்பத்திரிகையின் பிரதிகளை எம்மால் பெறவே முடியவில்லை. செப்டெம்பர் மாத பத்திரிகை கிடைக்கப் பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ சிங்கள மாத பத்திரிகை என்று இதில் உள்ளது. கிளிநொச்சியில் உள்ள நீலா பதிப்பகத்தால் அச்சிடப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாத பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரபாகரனின் மாவீரர் தின உரை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு உள்ளது. தலைப்பு நாங்கள் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என்பதாகும். ஆசிரியர் தலையங்கத்தில் தாயகக் கோட்பாடு பற்றி எழுதப்பட்டு உள்ளது.

வன்னியில் நிலக் கண்ணிவெடி அகற்றும் குழுவினருக்கு பாராட்டு...

மீன்பிடி தடைக்கு எதிராக மட்டக்களப்பு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்...

மன்னார் அகதிகள் திரும்பி வர அனுமதியுங்கள்...

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் பெற்றோர் சட்ட நடவடிக்கை...

போன்ற தலைப்புக்களில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டு உள்ளன. அத்துடன் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

காரைநகர் மக்கள்மீது தாக்குதல் நடத்தும் கடல் படை....

தொண்டமானாறு மீனவர்கள் மீது மீன்பிடித் தடை...

தோப்புக்காட்டு பிரதேசத்தில் வீழ்த்தப்படும் பனைகள்....

கவனிப்பார் அற்று கிடக்கும் 400 ஏக்கர் விவசாய நிலம்...

வடமராட்சியில் சிவில் வாழ்க்கைக்கு இராணுவத்தால் முட்டுக்கட்டை...

வன்னியில் 20 சதவீத மாணவர்களுக்கு மனஅழுத்தம்...

மாதகலில் மீண்டும் குடியேறும் மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள்...

போன்ற தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

புலிகளின் கருத்துக்களையும், கொள்கைகளையும் சிங்கள பெரும்பான்மை மக்களுடன் பகிர்ந்து கொள்வதே இப்பத்திரிகையின் நோக்கம் என்று வெளியீட்டாளர்கள் தெரிவித்து உள்ளனர். குறிப்பாக தமிழ் - சிங்கள இனங்களுக்கு இடையிலான உறவுகளில் இயல்புநிலையை ஏற்படுத்த புலிகள் எடுக்கின்ற நடவடிக்கைகளை இப்பத்திரிகை சொல்ல விளைகின்றது. அத்துடன்

ஊடுருவி


தேவையேற்படுகின்றபோது அரசாங்கத்தின் கடந்த கால, நிகழ்கால தவறுகளையும் சுட்டிக் காட்டுகின்றது.

ஆனால் துரதிர்ஷ்டமாக பத்திரிகையின் விநியோகம் திறமை அற்ற முறையிலேயே மேற்கொள் ளப்படுகின்றது. உதாரணமாக, எம்மைப்போன்ற பெரிய தூதரகம் கூட இப்பத்திரிகையின் பிரதியைப் பெற மிகுந்த சிரமப்படவேண்டி உள்ளது. எனவே இது சாதாரண சிங்கள வாசகர்களை சென்றடைவதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவுதான்.



**(யாத்திரை தொடரும்)**

# அடக்குமுறை வரவழைத்த வன்முறை ISIS




**ஈரான், சிரியா கூட்டுக்கட்சி**

சிரியாவின் ஷீஆ ஆட்சியை ஒழிக்க உருவானவர்கள்தான் இவர்கள். ஆனால், இவர்கள் திட்டமிட்டுத் தவறாக வழிநடாத்தப்பட்டு கிலாபத்தை அறிவித்தனர். இவ்வாறு தனிப்பட்ட சூழ்ச்சிகளால் இஸ்லாமியக் கலீபா தெரிவுசெய்யப்படுவது இஸ்லாமிய வழிமுறையல்ல.

இந்தக் கிலாபத் அறிவிப்பின் பின்னர் இவர்களுக்கு ஷீஆ அரசை ஒழிப்பதைவிட தமது கிலாபத் ஆட்சியைப் பாதுகாப்பதும், பரப்புவதுமே இலக்காக மாறிவிட்டது. இதன்மூலம் அவர்களது இலக்கு திசைமாறிவிட்டது. இதனால் சிரியாவும் ஈரானுமே பயனடைந்துள்ளன.

அடுத்து, இவர்களின் கிலாபத் அறிவிப்பை ஏற்காத ஏனைய போராளி அமைப்புக்களுடன் இவர்கள் இப்போது மோத ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் சிரியாவில் ஷீஆ எதிர்ப்புப் போராட்டம் இன்னும் பலவீனப்பட்டுள்ளது.

அடுத்து, இந்தக் குழுவினர் தாம் ஈராக்கைப் பிடித்துவிட்டு அடுத்து ஷீஆ அரசான ஈரானையும் பிடிப்போம் என்று கூறாமல் சவூதியைப் பிடிப்போம்! ஜோர்தானைப் பிடிப்போம் என அறைகூவல் விட்டுள்ளனர். இதுவும் இவர்களை ஷீஆக்களே இயக்குகின்றனர் என்ற சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது. அத்துடன் ஷீஆக்களை எதிர்க்களம் கண்டவர்கள் தவறான கிலாபத் அறிவிப்பால் ஸுன்னத் வல் ஜமாஅத்தையே எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். இவற்றைப் பார்க்கும்போது இந்த இயக்கத்தின் செயற்பாட்டால் ஈரானும் சிரியாவுமே அதிக இலாபம் அடைந்துள்ளனர்.

எனவே. இது ஷீஆக்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு குழு என சில இஸ்லாமிய அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

**அமெரிக்கா:**

அடுத்து, இன்றைய உலக நாடுகள் பலவும் தமக்கு எதிராகச் செயற்படும் சில தீவிரவாதக் குழுக்களைத் தாமே உருவாக்கி வழிநடாத்துகின்றது. இத்தகைய தீவிரவாதக் குழுக்கள் மூலம் தம்மை நியாயப்படுத்திக் கொள்ளவும் நீண்டகால நலன்களை நல்கக்கூடிய ஆயுதத் தாக்குதல்களை நடாத்துவதற்காகவும், அரசியல் அபிலாசைகளை அடைந்துகொள்வதற்காகவும் பயன்படுத்துகின்றன. செப்டம்பர் - 11 தாக்குதலைத் தானே நடத்திவிட்டு அல்கைதாவின் பெயரில்போட்டு ஆப்கான்மீதான போரை அமெரிக்கா தொடங்கியதை இதற்கு உதாரண-மாகக் கூறலாம். அவர்களின் அரசியல் இலக்குகளை அடைய அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.



**ISIS இன் வெற்றிகள்:**

ஐ.எஸ்.ஐ.எஸ் இற்குப் புகழையும் அதேநேரம் நபிகளாரினால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட அமைப்பு என்ற எண்ணத்தையும் தேடிக்கொடுத்தது அதன் திடீர் வெற்றிகளே! இந்த வெற்றிகள் திட்டமிட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களாகத் தென்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ் -இனர் ஈராக் வசமுள்ள பல பகுதிகளைக் கைப்பற்றுகின்றனர்.

**(தொடரும்)**




# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

"எனக்கு இதுவரை அரசியலில் ஒரு சிறுதுளிகூட ஆர்வமில்லை" என்று கூறியதும் சிடெல்ஸ்கி புன்னகைத்துவிட்டு மண்டேலாவை தோளோடு தோள் அணைத்து "உன் இலட்சியத்தில் வெற்றிபெற இப்போதே என் வாழ்த்துக்கள். நிர்வாகப் பணி-களை கவனிப்பதோடு சட்டப்படிப்பிலும் உன் தீவிர கவனத்தை செலுத்து என்று அறிவுறுத்திவிட்டு சென்றார்.

கோரின் விடுதலை உணர்வுநீர் பெற்ற வேர்போல வளர்ந்து கொண்டே சென்றது. ஒருமுறை சிடெல்ஸ்கி அவரது இருக்கையில் காலுக்குமேல் கால்போட்டு அமர்ந்துகொண்டு மண்டேலாவுக்கு சில ஆவணங்களை கையில் கொடுத்து நிர்வாகம் பற்றிய சில தீர்மானங்களை சொல்லிக் கொண்டிருந்தார். அந்த அறைக்குள் தற்செயலாக நுழைந்த கோர் உதடுகள் துடிக்க ஆவேசத்தில் கத்திவிட்டான். "நீங்கள் எவ்வளவு உயர்ந்த இடத்தில் அமர்ந்து கொண்டு எங்கள் ஆட்களை வேலை வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள். எங்கள் ஆட்களும் கைகட்டி நீங்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஏன் இவ்வாறு நடக்கவேண்டும் என்று கேட்டால் அதற்கு ஒருவரிடமும் தகுந்த பதிலில்லை.

என்னால் இதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒருநாள் நிலைமை மாறத்தான் போகிறது. பார்த்துக்கொண்டே இருங்கள். நாங்கள் அந்தப் பக்கம் அமர்ந்து கொண்டு உங்களை வேலை வாங்கும் இனிய நாள் உதயமாகும். நீங்கள் அனைவரும் நாங்கள் சொல்வதை நீங்கள் கை கட்டி வாய்பொத்தி நின்று செய்யத்தான் போகிறீர்கள். ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்" என்று ஆக்ரோஷமாக உரத்து கத்தினான். மண்டேலாவுக்கோ தர்மசங்கடமாகிப் போய்விட்டது. சிடெல்ஸ்கியோ அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டார். செய்வதறியாது திகைத்து நின்றார்.

மண்டேலாவோ "கோர் ஆத்திரப்படாதே, எம் உயர் அதிகாரி சிடெல்ஸ்கி பற்றி நான் சொல்லித் தான் உனக்கு தெரியவேண்டிய அவசியமில்லை. அவர் நிறத்தில் வெள்ளையராக இருந்தாலும் அவர் ஒரு யூதர். அவர்களும் வெள்ளையர்களால் வஞ்சிக்கப் பட்டவர்கள். அதனால்தான் நம் சுதந்திர தாகம் தீர்க்க உறுதுணையாக அவர் இருப்பதை நீ மறந்துவிட்டாயா? அவர் மற்றவர்களைப் போல் நம்மை அடிமைகளாகவா நடத்துகிறார்? இல்லையே, எவ்வளவு தோழமையோடு எம்முடன் அனுசரணையாக நடந்துகொள்ளும் ஒரு நல்ல மனிதர். அவரைப் போய் நீ குற்றம் சுமத்தாதே. நன்றி கெட்டதனமாக பேசுவதை முதலில் நிறுத்து" என்று காரசாரமாக பொரிந்து தள்ளினான். கோர் அப்படியே அடங்கி வெட்கித்துப் போனான். ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு சிடெல்ஸ்கி யிடம் மன்னிப்பு கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டான்.


அன்றிரவு மண்டேலா, சிசுலு, கோர் மூவரும் ஒன்றுசேர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சின் நடுவே கோர் சிடெல்ஸ்கியுடன் நடந்துகொண்ட பேச்சும் அங்கு அரங்கேறியது. கோர் மண்டேலாவை பார்த்து "நான் இன்று அதிகாரியுடன் நடந்து கொண்டவிதம் தவறு என்று இப்போது எனக்கு நன்றாகவே புரிகிறது. நீ நின்றுகொண்டும் அவர் கால்மேல் கால்போட்டு ஆட்டிக்கொண்டும் இருந்த காட்சியை கண்டதும் ஏனோ தெரியவில்லை என்னை அறியாமலே உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். அதனால்தான் அப்படி கத்திவிட்டேன். பாவம் அவர் என்னை பற்றி என்ன நினைத்தாரோ தெரியவில்லை" என்று தவறுதலாக நிகழ்ந்த தவறுக்காக மனம் வருந்தினான். மண்டேலாவோ "ஆமாம், நீ நடந்துகொண்ட முறை முற்றுமுழுதாக முட்டாள்தனம். வேறு யாராவதாக இருந்தால் உன்னை வேலையில் இருந்து இன்றே

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)**
**யாழ்ப்பாணம்**

நீக்கியிருப்பார்கள். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.

அவர் நல்ல உள்ளம்கொண்ட நல்ல மனிதராக இருப்பதாலும் நம் விடுதலை உணர்வுக்கு உறு-துணையாக இருப்பதாலும் அவர் அமைதியாக இருந்துவிட்டார். இந்த அவமானத்தை பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டார்" என்றதும் சிசுலுவும் மண்டேலாவிடம் "சபாஷ், நண்பா விட்டால் சிடெல்ஸ்கியை தூக்கி வைத்து கொண்டாடுவாய் போல, அந்தளவுக்கு அவருக்கு வக்காலத்து வாங்குகிறாயே" என்று கேலி செய்தான். மண்டேலாவோ உரத்து சிரித்துவிட்டான்.

**(தொடரும்)**



# இந்தியா - பாகிஸ்தான் சச்சரவில் சமரசம் ஏற்படுமா?

> 1971இல் இந்தியாவின் கை ஓங்கியது மட்டுமல்ல ஏராளமான பாகிஸ்தானியர்கள் சரண டைந்தனர். இப்பின்னணியில் 1972ஆம் ஆண்டு சிம்லா நகரத்தில் இருநாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத் திட்டனர். இதன்பிரகாரம் பாகிஸ்தான் வங்காள தேசம் (முன்னைய கிழக்கு பாகிஸ்தான்) என்கின்ற புதிய நாட்டை அங்கீகரித்தது. அத்துடன் காஸ்மீர் விவகாரம் இருதரப்பு விவகாரம் என்றும் மூன்றாவது தரப்பு தலையிட முடியாதென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் ஐ.நா எல்லைக் கோடும் உத்தியோகபூர்வ கோடாக இருநாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் நடைமுறையில் சிம்லா ஒப்பந்தம் எத்தகைய மாற்றத்தை, இந்தியா – பாகிஸ்தான் உறவுகளில் எந்த தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மார்கழி வழமைபோல் உலக கிறிஸ்தவ மக்களும் கிறிஸ்தவர் அல்லாதோரும் யேசு கிறிஸ்துநாதர் எனும் மாமனிதரின் ஜனனத்தை கொண்டாடிமகழும் தினமாகும். இவ்வாண்டு மார்கழி 25 இல் இடம்பெற்ற அரசியல் நிகழ்வு இந்திய - பாகிஸ்தான் மக்களில் சமாதானத்தை நேசிக்கும் மக்களுக்கும் விசேடமாகவும் வேற்றுநாட்டு மக்களுக்கும் பொதுவாக நம்பிக்கையை ஏற்படுத்திய ஒளித்தினமாகும். பாரத நாட்டு பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் திடீரென பாகிஸ்தானுக்கு, இரகசிய விஜயம்! ஒன்றினை மேற்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்  அவர்களை நேரில் சந்தித்து அவருடைய பிறந்த தினமான (25.12.2015) அன்று பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். உலகம்பூராகவும் இலத்திரனியல் அச்சு ஊடகங்களில் பிரதான இடம்பெற்றுள்ளது.

பாரத நாட்டில் எதிர்க்கட்சியினர் கண்டிப்பது, விமர்சனம்செய்வதுபோன்ற வழமையான அரசியல் நடவடிக்கைக்களை புறந்தள்ளி மோடியின் விஜயம் நம்பிக்கையுடன் உற்றுநோக்கப்படுகிறது. பிரிட்டிஸ், இந்தியா என அழைக்கப்பட்ட பிரதேசம் இன்று இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம் என மூன்று சுதந்திர நாடுகளாக பரிணமித்துள்ளன. இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று முறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தங்களில் ஈடுபட்டுள்ளன. 1947, 1948, 1965, 1971ஆம் ஆண்டுகளில் இந்த யுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. 1999இல் கார்கில்ஸ் யுத்தம், முன்னைய யுத்தங்கள் போன்று நடைபெறாவிட்டாலும், பாரிய சேதங்களை இரண்டு நாடுகட்கும் ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு நாடுகளும் முரண்பாடுகளால் உறவுநிலை மோசமாக இருந்தாலும், உயர் அதிகாரமட்டங்களில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. ஆனால் பம்பாயில் பாகிஸ்தானில் பயிற்றுவிக்கப்பட்ட பயங்கரவாதிகளால் 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதலின்காரணமாக 2008ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய - பாகிஸ்தான் தகராறின் வரலாற்றினை அறிந்துகொள்வது பிரதானமான தேவைப்பாடாகும். முற்பந்திகளில் கூறப்பட்டவாறு மூன்று பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தங்களையும் பிரகடனப்படுத்தாத கார்கில்ஸ் யுத்தப் பின்னணியையும் சற்று விரிவாகப் பார்ப்போம். 1947, 1948களில் அதாவது பிரிட்டன் - இந்திய உபகண்டத்தை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளாகப் பிரித்து சுதந்திரத்தை வழங்கியது. பிரிக்கப்படும்போது காஸ்மீர் பிரதேசம் பெரும்பாலான முஸ்லிம் மக்களைக் கொண்டிருந்தது. அதேநேரம் இந்து மகாராஜா அரசனாக இருந்தார். இந்து மகாராஜா இந்தியாவுடன் இணைந்துவிடுவாரோ என்ற அச்சத்தினால் பாகிஸ்தான் பழங்குடியினர் காஸ்மீர் மகாராஜாவுக்கு எதிராக கலவரங்களை ஏற்படுத்தினர்.

இந்த மகாராஜா இந்திய அரசிடம் உதவிகோரினார். இந்தியப் படைகள் மகாராஜவுக்கு ஆதரவாக கிளர்ச்சியை அடக்கமுற்பட்டனர். இதுவே முதலாவது யுத்தமாகும். இதனை காஸ்மீர் யுத்தம் எனவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இந்திய - பாகிஸ்தான் படைகள் உக்கிரமாகப் போரிட்டன. இந்தியாவின் அழைப்பின்பேரில் ஐ.நா. சபை தலையிட்டு யுத்த நிறுத்தத்தை மார்கழி 1948 இல் ஏற்படுத்தியது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின்படி கட்டுப்பாட்டு எல்லைக்கோடு (line of control) அமைக்கப்பட்டது. இந்திய - பாகிஸ்தான் எல்லைகளை ஊடுருவி இக்கோடு செல்கின்றது. காஸ்மீர் பகுதிகள் இந்தியா - பாகிஸ்தான் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தன. ஜம்மு காஸ்மீர் இந்திய பகுதியாகவும் ஆசாத் காஸ்மீர்  பகுதியாகவும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அடுத்த யுத்தம் 1965இல் இடம்பெற்றது. பாகிஸ்தான் படைகள் இந்திய கட்டுப்பாட்டுப் பகுதியான ஜம்மு காஸ்மீர் பகுதிக்குள் ஊடுருவலை ஏற்படுத்தி இந்திய படைகளுக்கு எதிரான காஸ்மீர் மக்களின் கலகத்தை ஏற்படுத்துவதே ஊடுருவலின் நோக்கமாகும். இந்தியா, மேற்கு பாகிஸ்தான் பக்கமாக தாக்குதலில் தொடுத்தது. பதினேழு நாட்கள் நடைபெற்ற உக்கிரமான யுத்தத்தினால் பெரியளவில் டாங்கிகள் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்காவும் சோவியத் ரஸ்யாவும் தலையிட்டு 'டாஸ்கன்ட்" ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதால் யுத்தம் தணிந்தது.

மூன்றாவது யுத்தம் 1971இல் இடம்பெற்றது. முன்னைய யுத்தங்களைவிட இந்த யுத்தம் வேறுபட்டது. ஏனெனில் பாகிஸ்தானின் கிழக்கு பிரதேசமான கிழக்கு பாகிஸ்தானில் மேற்கு பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து தனிநாடு அமைக்கும் முஸ்தீபுடன் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. பாகிஸ்தான் பெரும்பாடு கொண்டு கலவரங்களை அடக்கமுற்பட்டது. ஒரு கோடிக்கு மேற்பட்ட கிழக்கு பாகிஸ்தானின் வங்காளிகள் இந்தியாவின் எல்லை மாநிலமான மேற்கு வங்காளத்தில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர். இந்தியப் படைகளும் முக்தி பாகினி எனப்படும் கிழக்கு பாகிஸ்தானின் முஜிபுர் ரஹ்மானின் படைகளோடு சேர்ந்து பாகிஸ்தான் படைகளை எதிர்த்துப் போரிட்டன. இந்திய - பாகிஸ்தான் யுத்தங்களில் மிகக் கூடுதலான சேதங்கள்  இந்த யுத்தத்தால் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பாகிஸ்தான் படைகள் பெருமளவில் இந்தியப் படை-களிடம் சரணடைந்தது. கிட்டத்தட்ட 90,000 படையினர் சரணடைந்தனர். வங்காளதேசம் எனும் புதிய நாடு உதயமாகியது. பாகிஸ்தானுக்கு பெரும் இழப்பினை ஏற்படுத்திய யுத்தமாகும்.

பிரகடனப்படுத்தப்படாத காகில்ஸ் யுத்தம் 1999இல் நிகழ்ந்தது. 1999களின் ஆரம்பத்தில் பாகிஸ்தான் படைகள் ஐ.நா எல்லைக்கோட்டினைத் தாண்டி சில பகுதிகளை கைப்பற்றியது. குறிப்பாக காகில்ஸ் மலைப் பகுதியில் இவ்வூடுவல் நடைபெற்றது. இந்தியாவும் பதில் தாக்குதல்களை நடாத்தி இழந்த பிரதேசங்களை கைப்பற்றியது. இந்தியா இராஜதந்திரரீதியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. அமெரிக்கா பாகிஸ்தானை நிர்ப்பந்தப்படுத்தியதால் 1999 இறுதியில் யுத்தம் தணிந்தது. ஏனைய இந்திய - பாகிஸ்தான் யுத்தங்களை போலல்லாது இந்த யுத்தம் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே அமைந்தது. இவைகளைத் தவிர அடிக்கடி ஆங்காங்கே மோதல்கள் நடைபெறுவது வழமையானதொரு விடயமாகும்.

1971இல் இந்தியாவின் கை ஓங்கியது மட்டுமல்ல ஏராளமான பாகிஸ்தானியர்கள் சரணடைந்தனர். இப்பின்னணியில் 1972ஆம் ஆண்டு சிம்லா நகரத்தில் இருநாடுகளும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இதன்பிரகாரம் பாகிஸ்தான் வங்காளதேசம் (முன்னைய கிழக்கு பாகிஸ்தான்) என்கின்ற புதிய நாட்டை அங்கீகரித்தது. அத்துடன் காஸ்மீர் விவகாரம் இருதரப்பு விவகாரம் என்றும் மூன்றாவது தரப்பு தலையிட முடியாதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் ஐ.நா எல்லைக்கோடும் உத்தியோகபூர்வ கோடாக இருநாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் நடைமுறையில் சிம்லா ஒப்பந்தம் எத்தகைய மாற்றத்தை, இந்தியா - பாகிஸ்தான் உறவுகளில் எந்த தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. 1999இல் பாகிஸ்தான் காகில்ஸ் பிரதேசத்துள் ஊருடுவி மோதல் ஏற்பட்டமை சிம்லா ஒப்பந்தத்தின் பலவீனத்தையே காட்டுகிறது.

அமெரிக்க - பாகிஸ்தான் விவகாரத்தில் வல்லரசுகளான அமெரிக்க சோவியத் யூனியன் ஆகியவற்றின் நிலைப்பாடுகள் ஆராயப்படவேண்டிவை. அமெரிக்கா, பாகிஸ்தானுக்கும் சோவியத் யூனியன் இந்தியாவிற்கும் ஆதரவுவழங்கின. சோவியத் யூனியன் 1997இல் உடைந்த பின்னர் அமெரிக்கா ஏகவல்லரசாக மாறியபின்னர் இந்தியாவுடன் நெருக்க மாக உறவுகளை  பேணியது. சீனா எப்போதும் பாகிஸ்தானுக்கு ஆதரவான நாடாக விளங்குகிறது.

பிரதமர் மோடியின் திடீர் விஜயம் இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் முன்னேற்றம் காணுமா என்பது நிச்சயமற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்தால் ஹிட்லரின் ஜேர்மனி அயல்நாடுகளில் பெரும் கொடுமைகளை விளைவித்த போதும் சமாதானத்துக்கு பின்னர் ஜேர்மனியும் அயல்நாடுகளும் நெருக்கமான உறவினை பேணிவருவது இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. பாகிஸ்தான் உள்நாட்டுப் பிரச்சினையால் இந்தியா தலையிட்டு கிழக்கு பாகிஸ்தானை உடைத்து தனிநாடாகவே மாற்றியமை உறவுகளில் இன்றும் பெரிய தடையாகவே கருதப்படுகிறது. இந்தியா என்னும் நாகரிகத்தின் தொட்டிலில் பெரும் சிந்தனையாளர்கள் வாழும் நாட்டில் தமது சகோதரர்களுடன் மீண்டும் உறவாடவேண்டும் என்ற எண்ணம் செயல்வடிவம் பெற்றால் மாத்திரமே இந்திய - பாகிஸ்தான்  உறவுவிரிசலில் சமன்படுத்தப்படும்.

—— தேவ தர்மா ——

# இலங்கையில் சூழலை அச்சுறுத்தும் பொலித்தீன் பாவினை

(ஏ.எச்.ஏ ஹுஸைன்)

இலங்கையில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும்வகையில் பொலித்தீன் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக 2016 ஜனவரி மாதம் முதல் கடுமையான நடைமுறைகள் அமுலுக்கு வரவுள்ளன.

20 மைக்ரோனுக்கு குறைவான அடர்த்தியைக்கொண்ட பொலித்தீனை தயாரிப்பது, விற்பனைசெய்வது, பயன்படுத்துவது மற்றும் வைத்திருப்பது போன்றவை இலங்கையில் 2007ஆம் ஆண்டிலிருந்தே தடைசெய்யப்பட்டு விட்ட நிலையில், அந்த சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப் படாததால் தொடர்ந்தும் பொலித்தீன் பாவினை இலங்கைக்கு ஒரு சவாலாக இருந்துவருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே பொலித்தீன் பாவனைமீதான கட்டுப்பாடுகளை கடுமையாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்கம் தற்போது கூறுகின்றது.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருப்பதாக சுற்றுச்சூழல் நிபுணரான வழக்கறிஞர் ஜகத் குணவர்தன தெரிவிக்கின்றார்.

அந்த சிக்கல்களை தீர்க்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறின்றார்.

"பொலித்தீன் பாவனைக்கான கட்டுப்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒரு சில நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதனால் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது" என்கிறார் ஜகத் குணவர்தன.

"தேசிய சுற்றுச்சூழல் அதிகார சபையின் அதிகாரிகளால் மட்டும் பொலித்தீன் பாவனையை கண்காணிப்பது சுலபமான காரியமல்ல" என்றும் கூறுகிறார் வழக்கறிஞர் ஜகத் குணவர்தன.

ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ள பொலித்தீன் பாவனைக்கு எதிரான நடவடிக்கைகளுடன், பொலித்தீனுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படவேண்டிய பொருட்கள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். "பொலித்தீனுக்குப் பதிலாக பாவனைக்கு வரும் பொருட்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அவை சுகாதாரத்திற்கு கேடு ஏற்படுத்தாத, குறைந்த விலையில், இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்" என்கிறார் ஜகத் குணவர்தன.

பொலித்தீனை பயன்படுத்தும் போதும் அவற்றை அழிக்கும்போதும், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து பொதுமக்களும் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இதுதவிர பொலித்தீன் பாவனையை ஒழிக்க வேண்டும் அன்றேல் குறைந்தபட்சம் கட்டுப்படுத்தவேண்டும் என்ற விடயத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் காலத்துக்குக் காலம் அக்கறை காட்டிவந்துள்ளனர்.





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் திருகோணமலை மாவட்டத்தில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி 05.06.2015 திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

### பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள்

இலகுவான பயன்பாடு மற்றும் குறைந்த செலவுகாரணமாக பொலித்தீன் பாவனையின்பால் மக்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். பொருளாதார செயற்பாடுகளை கருத்திற்கொண்டு நோக்குகையில் இறக்குமதி செய்யப்படும் பொலித்தீனில் ஏறக்குறைய 50 சதவீதம்மேல் மாகாணத்தில் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனையின் காரணமாக மனிதர்களுக்கு மட்டுமன்றி சுற்றுச்சூழலுக்கும் உயிரினங்களின் வாழ்விற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மேலும் பொலித்தீன் இற்று அழிந்துபோவதற்கு 50 - 400 ஆண்டுகள்வரை காலம் எடுக்கும். எனவே பாவனைக்கு உட்படுத்தப்பட்ட பொலித்தீன் மண்ணில் சேர்வதால் மண் வளமற்றுப்போவதுடன் மண்ணில் அது ஒரு படலமாக தங்கியும் விடுகின்றது. இதனால் மண்ணில் மழைநீர் உறிஞ்சப்படுவதை அது தடைசெய்கின்றது.

மேலும் நகர்ப்புற வீதிகளிலும் குடியிருப்புப் பிரதேசங்களிலும் நீர் வழிந்தோடும் குழாய் வழிகளில் பொலித்தீன் தங்கிவிடுவதால் அவை-களில் அடைப்பு ஏற்படும். இதனால் சிறியளவிலான மழைபெய்யும் சந்தர்ப்பங்களில்கூட நகர்ப்புற மற்றும் ஏனைய பிரதேசங்களில் நீர் வழிந்தோடமுடியாமல் வெள்ளம் ஏற்பட்டுவிடுகின்றது.

அதேபோன்று பொலித்தீனை எரிக்கும்போது வெளியேறும் தீங்கு விளைவிக்கக்கூடிய வாயுவை மனிதர்கள் சுவாசிப்பதால் பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுகின்றன. இளைப்பு, புற்றுநோய் கண்பார்வைக் குறைவு போன்ற உபாதைகள் முக்கியமாக மனிதர்களைப் பாதிக்கக்கூடும். மனிதர்களால் அக்கறையற்றவிதத்தில் கண்ட கண்ட இடத்தில் வீசி எறியப்படும் பொலித்தீன்கள் விலங்குகளாலும் உட்கொள்ளப்படுகின்றன. இதன்காரணமாக அந்த வளர்ப்புப் பிராணிகள் இறக்கவும் நேரிடுகின்றது. இதனையும்விட பொலித்தீன் பாவனையின் விளைவு உயிர்க்கொல்லியான டெங்கு நுளம்பு உற்பத்திக்கும் உசாத்துணையாய் அமைந்துவிடுகின்றது.

பொலித்தீன் உறைகளின் மேல் நீண்டநாட்களுக்கு நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகுகின்றன. இதனால் டெங்கு, மலேரியா மற்றும் யானைக்கால் நோய் போன்ற ஆபத்தான நுளம்புப் பெருக்கத்திற்கும் இந்தப் பொலித்தீன் பாவனை ஏதுவாய் அமைந்து விடுகின்றது. வருடாவருடம் டெங்கு நோயினால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்தே வந்துள்ளது. இறப்புக்களும் அதிகரித்துள்ளன.

நச்சுத்தன்மையான கழிவுகளின் முகாமைத்துவம் பற்றிய விடயங்களை தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் 47ஆவது சரத்தும் அதன் திருத்தங்களும் குறிப்பிடுகின்றன.

மேற்படி காரணங்களை கருத்திற் கொண்டு நாட்டு மக்களுக்கு சூழலோடிணைந்த வாழ்க்கை வாழும் முறையினைப் பற்றி விழிப்புணர்வூட்டவேண்டும்.

அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் எல்லா வகையான அபிவிருத்தித் திட்டங்களிலும் சூழலை மாசடையாமல் பாதுகாப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக மாணவர் மத்தியில் இந்த விழிப்புணர்வூட்டல் இடம்பெற வேண்டும். மாணவர்களுக்குக் கொடுக்கின்ற அந்தச் ஒவ்வொரு வீட்டுக்கும் போய்ச்சேரும்.

திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் என்பது எமது நடத்தைகளோடு சம்பந்தப்பட்ட விடயம். திண்மக் கழிவு முகாமைத்துவம் என்பது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால் பாடசாலை மட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல் அவசியமாகின்றது. மாணவப்பருவத்திலேயே சிறந்த நடத்தைப் பண்பியல்புகளை பழக்கத்தில்கொண்டு வந்தால் நாம் வாழும் சூழலையும் இயற்கைக்குக் கேடுவராமல் தூய்மையாகப் பேணமுடியும். பொலித்தீன் பாவனையையும் குப்பைகளையும் குறைக்கவேண்டும் என்று வெறும் வார்த்தைப் பிரயோகத்தோடு மட்டும் நின்றுவிடாது அதனை நாமெல்லோரும் சேர்ந்து நமது நாளாந்த வாழ்வின் செயன்முறையிலும் மெய்ப்பிக்க வேண்டும். ●



# முகாம் மக்களும் நிலவுடமையும் நிலமற்றதன்மையும்...

**பரம்சோதி தங்கேஸ்**
கலாநிதி ஆய்வு மாணவன்,
மானிடவியல் துறை, கிழக்கு லண்டன் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

இலங்கை அரசினாலும் அதன் இராணுவத்தினாலும் பலாத்காரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகின்ற "உயர் பாதுகாப்பு வலயம்" என அழைக்கப்படுகின்ற நில அபகரிப்பினால் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக உள்ளூரில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் பெருந்துயருக்கு ஆளாகிவருகின்றமை இன்றுவரை தொடர்கின்றது. பலாலி, மயிலிட்டி, தையிட்டி, வீமன்காமம் மற்றும் காங்கேசன்துறை போன்ற யாழ்ப்பாணத்தின் வடக்கின் கரையோரப் பிரதேசங்களைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் அங்கிருந்து விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்குமிடையே ஏற்பட்ட ஆயுத யுத்தத்தினால் 1990ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டனர். கொடூர உள்ளூர் யுத்தம் முடிவடைந்து இன்றுடன் கிட்டத்தட்ட ஆறரை ஆண்டுகள் முடிவடைகின்ற சூழ்நிலையிலும் இம்மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றம் செய்யப்படாது உள்ளமை கண்கூடு.

உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் சாதிப் பின்புலம், அதனோடு நெருங்கிய தொடர்புள்ள நிலவிவகாரம் முதலியவை தொடர்பாக கருத்துரைப்பதற்கு முன்னர், இவ்வாறு இடம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாண மக்களை மிகச் சுருக்கமானதொரு வகைப்பாட்டுக்குள் உட்படுத்துவது, அவர்கள் தொடர்பாக பொதுவானதொரு விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு துணையாக இருக்கும். தமது சொந்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை நான்கு பிரதான பிரிவுக்குள் உட்படுத்தமுடியும். முதல் பிரிவினர் 1990இல் ஏற்பட்ட இடப்பெயர்வினைத் தொடர்ந்து தென்மராட்சி மற்றும் வடமராட்சி பகுதிகளில் தோற்றம்பெற்ற உள்ளூரில் இடம்பெயர்ந்த முகாம்களில் வசிக்கின்றனர். இரண்டாவது குழுவினர் நண்பர்களது அல்லது உறவினர்களது வீடுகளிலும் அவர்களால் வழங்கப்பட்ட நிலங்களிலும் அல்லது வாடகை வீடுகளிலும் வாழ்கின்றனர். மூன்றாவது பிரிவினர் யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் வேறு பிரதேசங்களில் நிலத்தினைச் சொந்தமாக வாங்கியும் வீடுகள் கட்டியும் குடித்தனம் நடத்துகின்றனர். நான்காவது வகையினைச் சேர்ந்த கணிசமானளவு தனிநபர்களும் குடும்பங்களும் தமது உள்ளூர் இடப்பெயர்வினைத் தொடர்ந்து, தமக்கிருந்த பொருளாதார, கல்வி மற்றும் சமூக மூலதனத்தைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இந்த கட்டுரையில் தற்பொழுது உள்ளூரில் இடம்பெயர்ந்து மொத்தம் 32முகாம்களில் வாழும் மக்களே ஆய்வுப் பொருளாக எடுக்கப்பட்டனர்.

முகாம்களில் வாழும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு வாழ்வியல்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். போதிய உட்கட்டுமான வசதிகள் இல்லாமை, வரையறைக்குட்பட்ட அந்தரங்கம், மட்டுப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்பு, வறுமை, நிலம், தண்ணீர் மற்றும் இந்துக் கோயில்களைப் பயன்படுத்துவதிலுள்ள கட்டுப்பாடுகள், "அகதிகள் அல்லது முகாம் ஆக்கள்" என்ற அடையாளத்தோடு ஒட்டியுள்ள சமூக களங்கம் முதலியவற்றை அவர்கள் நாளுக்கு நாள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக பட்டியல்படுத்த முடியும். இப்பிரச்சினைகள் அனைத்தும் இங்கு ஆராயப்படவில்லை. உள்ளூரில் இடம்பெயர்ந்து குறிப்பாக முகாம்களில் வாழும் மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பயன்பாடு அல்லது நிலப்பயன்பாடு அற்றதொரு விவகாரமே இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றது. நிலமற்றதன்மை (landlessness) என்பது ஏனைய பிரச்சினைகளை தூண்டி நிற்பதனால் நான் இதனை மூலவிவகாரம் (core issue) என்று அழைக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏழு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 32 உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. 2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இந்த ஆறு பிரதேச செயலகத்திலிருந்தும் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், உள்ளூரில் இடம்பெயர்ந்த மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 11,500 (38,500 நபர்கள்) ஆகும். உள்ளூரில் தற்பொழுது எஞ்சியுள்ள 32 முகாம்களிலும் வாழும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 1,158 (4,238 நபர்கள்) ஆகும். தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறி நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தின் வெளிப்பிரதேசங்களில் வாழ்வதனால் பல இளம்குடும்பங்கள் தோன்றியுள்ளன. இதனால் குடும்பங்களினதும் தனிநபர்களினதும் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதும் கவனிக்கப்பட வேண்டியதே.

### சாதியும் உள்ளூரில் இடம்பெயர்ந்த முகாம் மக்களும்

நிலவுடமையினையும் சாதியுடனுள்ள அதற்கான ஒட்டுறவினையும் தொடர்பு படுத்தி பார்ப்பதற்காக மொத்தம் 32 அகதி முகாம்களிலுமுள்ள மக்களின் சாதியடையாளம் சேகரிக்கப்பட்டது. வியக்கத்தக்கவகையில், நிலைக்குத்தாக(vertical) கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதி அடுக்கமைவிலுள்ள வேறுபட்ட சாதிக் குழுக்களைக் கலக்காது, குறிப்பிட்ட சில சாதிகளை மையமாகவைத்தே அனைத்து உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் முகாம்களும் உருவாகியுள்ளன. மொத்தம் 32 முகாம்களில் தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், நல்லூர், கோப்பாய் மற்றும் கரவெட்டி செயலகப் பிரிவுகளில் தோன்றிய 25 முகாம்களும் ஒடுக்கப்பட்ட மக்களான நளவர், பள்ளர் மற்றும் பறையர் ஆகிய மூன்று சாதியினரையும் மையமாக வைத்தே உருவாகியுள்ளன. இம்மூன்று குழுவினரதும் சாதியடிப்படையிலான தொழில்கள் முறையே சீவல், விவசாயக் கூலி அல்லது சீவல், இறந்த வீடுகளுக்கு மேளம் அடித்தல் அல்லது சுத்தம் செய்தல் என்றவாறு இருந்தது. பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவின்கீழ் உருவாகிய மிகுதி 6 முகாம்களும் மீனவர் என அடையாளம் காணப்பட்ட கரையார் சாதியினரின் பின்புலத்தில் உருவாகியுள்ளன. எவ்வாறாயினும், இச்சாதிக் குழுவினைச் சேர்ந்தோர் தமது சாதியடிப்படையிலான தொழில்களை மட்டும் செய்யாது பல்வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர் என்பது வெளிப்படை. இச்சாதிப் பின்புலத்தினைக் கொண்டிருக்கும் பலரும் தாம்பெற்ற உயர்கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் வேறுபட்ட தொழில்களில் ஈடுபடுவதனால், இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் அவர்கள் செய்யும் தொழில்களைக் கொண்டு சாதியினைக் கண்டுபிடிப்பதென்பது கடினமானதொரு காரியமாகியுள்ளது.

2015ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் "மாற்றம்" என்ற நிறுவனத்தினால் "நிலமும் நாங்களும்: இலங்கையின் வடக்கில் போருக்குப் பின்னரான நில விவகாரங்களைப் புரிந்துகொள்ளுதல்" (Understanding Post-war Land Issues in Northern Sri Lanka) என்று தலைப்பிடப்பட்ட ஆய்வு அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இவ்வாய்வறிக்கை நிலப்பயன்பாட்டைப் பாதிக்கும் ஒருவிடயமாக சாதியினை அடையாளம் கண்டுகொண்டது. எவ்வாறாயினும், அதனை மிகவும் சுருக்கமானதொரு விளக்கத்திற்கே இவ்வாய்வறிக்கை உட்படுத்தியது. நிலத்தினைப் பயன்படுத்துவதில் அல்லது அதனை சொந்தமாக்கிக் கொள்வதிலுள்ள சாதிய இயங்கு நிலையின் மிக நுணுக்கமாக பக்கங்களை இவ்வறிக்கை விவாதப்பொருளாக எடுத்துக்கொள்ளவில்லை. இடம்பெயர்ந்த பெரும்பாலான வெள்ளாளச் சாதியினைச் சேர்ந்தவர்களும் ஏனைய வசதிபடைத்தோரும் யாழ்ப்பாணத்திலும் இலங்கையில் ஏனைய பிரதேசங்களிலும் தமக்கான அமைவிடத்தினை உருவாக்கிக் கொள்ளும்பொழுது, குறிப்பிட்ட சில சாதியினைச் சேர்ந்தோர் மட்டும் ஏன் அகதி முகாம்களில் முடங்கவேண்டும் என்பதற்கு பல்வேறு காரணங்களைக் கூறமுடியும்.

முதலாவதாக, ஒடுக்கப்பட்ட சாதியினரில் பெரும்பாலானோர் பரம்பரை பரம்பரையாக தாம் சீவியம் நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட நிலங்களைத் தவிர, யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலோ அல்லது இலங்கையின் வேறுபாகங்களிலோ நிலவுடமைகளைக் கொண்டிருக்கவில்லை. இவர்களில் அதிகமானோர் யாழ்ப்பாணத்தின் வேறு பிரதேசங்களில் சொந்தமாக நிலத்தினை வாங்குவதற்கும் வீடு கட்டுவதற்கும் போதுமான பணவசதியினைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு நலிவடைந்தோர் தமது சொந்த நிலங்களிலிருந்து அகற்றப்படும்போது, வசதிபடைத்தவரும் ஆதிக்க சமூகத்தினரும் வாழ்வதுபோல், தமக்கான பிரத்தியேக அமைவிடங்களை உருவாக்கமுடியாததொரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்கள் அரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவியிலேயே பெரும்பாலும் தங்கிவாழவேண்டிய நிலையிலுமுள்ளனர்.

இரண்டாவதாக, ஆதிக்கசாதியினர் தமக்கிருந்த பொருளாதார, கல்வி மற்றும் விஸ்தரிக்கப்பட்ட வலைப்பின்னல்சார் சமூக மூலதனங்களைப் பயன்படுத்தி இலங்கையின் வேறு பிரதேசங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லும்போது, நலிவடைந்த இம்மக்கள் தம்மோடு வாழும் உறவினர்களுக்கு அப்பால் ஒரு விஸ்தரிக்கப்பட்ட சமூக மூலதனம்சார் வலைப்பின்னலைக் கொண்டிராமையினாலும், அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட வசதியுடன் முகாம்களில் வாழவேண்டி ஏற்பட்டது.

மூன்றாவதாக, ஒவ்வொரு சாதியினரும் மீண்டும் மீண்டும் தாம் அனுபவித்த இடப்பெயர்வுகளுக்கு அப்பாலும், தமது சொந்தச் சாதிச் சமூகத்தோடு வாழ்வதற்கு தம்மை தயார்படுத்திக்கொள்கின்றனர். யுத்தம் மற்றும் அழிவுகள் இடம்பெற்ற சூழ்நிலைகளில் ஒவ்வொரு சாதிக் குழுமத்தின் அமைவிடம் சார்ந்ததொரு ஒழுங்கமைவு தற்காலிகமாகவும் விபத்துரீதியாகவும் பாதிக்கப்பட்டது. யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காலங்களிலும் மேற்கத்தேய நாடுகளுக்குச் சென்ற ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரு பகுதியினரால் அடையப்பட்ட பொருளாதார வசதியினாலும் பாரம்பரியமாகத் தொடர்ந்து வந்த யாழ்ப்பாணச் சாதிப் புவியியலில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும் தமது சொந்த நிலங்களுக்கு வெளியே நீண்டகால அடிப்படையில் வாழும் சூழமைவில் ஒரு சாதிக்குழுவினர் ஏனைய சாதிக் குழுவினரை விலக்கி பிறிதொரு வாழ்விடத்தினைத் தெரிவுசெய்கின்றனர். சிறிதளவில் ஆங்காங்கே நிலஉரிமைசார் மாற்றங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றத்தினால் இடம்பெறுகின்ற போதிலும், பழைய சாதிசார் நில எல்லைப் பிரிப்புகள் யுத்தத்திற்கு பின்னர் அல்லது நீண்டகால அடிப்படையில் ஏற்பட்டுள்ள இடப்பெயர்வின் பின்னணியில் தோன்றியுள்ளது. இவ்வாறு பல காரணங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை முகாம்களில் வாழவைத்துள்ளது,

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு அப்பாலும், தாம் செய்துவந்த பரம்பரைத் தொழில்களைத் தொடர்ந்தும் செய்யவேண்டும் என்ற நோக்கத்தினை இலகுபடுத்தும் முகமாகவும் முகாம்கள் உருவாகின. இதற்கு நல்ல உதாரணம் "உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து" வெளியேற்றப்பட்ட கரையார் சாதியினைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தமக்கான வாழ்விடங்களாக பருத்தித்துறைக் கடற்கரைப் பிரதேசங்களைத் தெரிவுசெய்து கொண்டனர். இவ்வாறு உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் காலவோட்டத்தில் தமது அயல் சமூகத்தோடு தொடர்புகளை கட்டியெழுப்பியபோதிலும், இவர்கள் நிலம், நீர், கோயில் மற்றும் தொழில் வாய்ப்பினை பங்கீடு செய்யும்பொழுது, சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்ட சாதி அந்தஸ்து அடிப்படையிலும் வளங்கள்மீதுள்ள போட்டிகாரணமாகவும் சில பாகுபாடுக்கு உள்ளாகின்றனர் என்பதை அவர்களோடு மேற்கொண்ட சம்பாசணைகள் மூலமாகப் பெறமுடிந்தது.

(தொடரும்..)

# காதலோ! காதல்!

## கண்ணுக்கு மை தீட்டலாமா? காதலன் ஓடிவிடுவானே!

**- காத்தார் -**

**"பாயு மொளி நீ யெனக்கு,**
**பார்க்கும் விழி நானுனக்கு**
**தோயுமது நீயெனக்கு,**
**தும்பியடி நானுனக்கு,**
**வீணையடி நீ யெனக்கு,**
**மேவும் விரல் நானுனக்கு**
**பூணும் வடம் நீயெனக்கு,**
**புது வயிரம் நானுனக்கு,**
**வானமழை நீ யெனக்கு**
**வண்ணமயில் நானுனக்கு**
**பானமடி நீ யெனக்கு,**
**பாண்டமடி நீ நானுனக்கு**
**வெண்ணிலவு நீ யெனக்கு,**
**மேவு கடல் நானுனக்கு**
**பண்ணுசுதி நீயெனக்கு,**
**பாட்டினிமை நானுனக்கு,**
**நல்லவுயிர் நீயெனக்கு,**
**நாடியடி நானுனக்கு**
**செல்வமடி நீயெனக்கு,**
**சேமநிதி நானுனக்கு."**

பாரதியாருடைய இப்பாடலில் அமைந்திருக்கும் சிறப்பு என்னவென்றால், ஒன்று இல்லாவிட்டால் மற்றொன்று இல்லை என்று எண்ணக்கூடிய இரண்டினை இணைத்துச்சொல்வதும், ஒன்றையும் அதனால் இயங்கக் கூடியதான மற்றொன்றையும் இணைந்துச் சொல்வது ஆகும். விழி இல்லையெனில் ஒளியை உணரமுடியாது. குருடனுக்கு இரவும் ஒன்றுதான்; பகலும் ஒன்றுதான் இருட்டினை வெளிச்சத்தினின்று பிரித்து உணர்வதற்குக் கண்வேண்டும். அது போலவே வீணையினின்றும் நாதம் எழ வேண்டுமானால் அதன் நரம்புகளை விரல்கள் இயக்கவேண்டும். பானம் ஒன்று இருப்பதற்குப் பாண்டம் வேண்டும். பூவிலே மணம்பிரியாமல் பொருந்தியிருக்கிறது. சொல்லினின்றும் பொருளைப் பிரிக்கமுடியாது. உடலிலே உயிர் இருக்கும்வரைக்கும் இதயம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த இதயத்தின் துடிப்பை அறிய உதவுவது நாடி. அந்த நாடி ஓட்டம் நின்றுவிட்டால், உயிர் பிரிந்துவிட்டது என்கிறோம். இத்தகையை அலங்காரங்களின்மூலமாக காதல் உணர்வுகளான இருவருடைய ஒன்றிய தன்மையை மிக அழகாக விளக்குவார் பாரதியார்.

அதுபோலவே ஒருவருடைய பிரிவி னாலும் நினைவினாலும் மற்றவர் படும் துன்பத்தை மிக்க அழகாக பாடிக் கொண்டே போவார்.

**" தூண்டிற் புழுவினைப் போல் -வெளியே**
**சுடர் விளக்கினைப் போல்,**
**நீண்ட பொழுதாக - எனது**
**நெஞ்சந் துடிக்குதடி!**
**கூண்டுக் கிளியினைப் போல் - தனிமை**
**கொண்டு மிகவும் நொந்தேன்;**
**வேண்டும் பொருளையெல்லாம் - மனது**
**வெறுத்து விட்டதடி"**

தூண்டிற் புழு, வெளியே சுடர் விளக்கு என்ற உவமையின் பொருள் மிகமிகப் பராட்டத்தக்கது. தூண்டிலில் மாட்டிக்கொண்ட புழு உயிருக்குத் துடிக்கும். காற்றிலே அகப்பட்டுக் கொண்ட சுடர் தத்தளிக்கும். காதல் வயப்பட்டுவிட்ட நெஞ்சமும் அப்படியே. காதலன் - காதலி ஆகியவர்களுடைய உறவைத்தவிர பிற அனைத்தும் வெறுப்பையே தரும். மேலும் பாடுவார்.

**"உணவு செல்லவில்லையே - ஸகியே;**
**உறக்கங் கொள்ளவில்லை!**
**மணம் விரும்பவில்லை; - ஸகியே;**
**மலர் பிடிக்கவில்லை;**
**குண முறுதியில்லை; - எதிலும்**
**குழப்பம் வந்ததடி!**
**கணமும் உள்ளத்திலே - சுகமே**
**காணக் கிடைத்ததில்லை"**

இப்படியாகப் பாலும் கசக்கிறது; படுக்கையும் நோவைக் கொடுக்கிறது. ஆனால் காதலுக்கு உரியவனோ உரி யவளோ உள்ளத்தைத்தொட்டுவிட்டாலோ, உடலை அணைத்துவிட்டாலோ மனதில் மகிழ்ச்சி தோன்றும்; உச்சி குளிரும்; உடம்பும் நேராகும். முன்னைப்போல் எல்லாம் மனதிற்கு ஒத்தவையாகும்.

பொருளீட்டுவதற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து போய்விடுகிறான். அவன் விரைந்துவராமை பற்றித் தலைவி கவலையுறுகிறாள். பிரிந்த தலைவனின் நினைவினால் தலைவிக்குத் தூக்கமே வரவில்லை. ஆனால் ஊரோ அவளுடைய துக்கத்தையும், தூக்கமில்லாமல் அவள் தவிப்பதையும் சிறிதும் இலட்சியம் செய்யாமல் தூங்குகிறது. அப்படித் தூங்குகின்ற ஊரின்மேல் தலைவிக்கு ஆத்திரமும் கோபமும் பொங்குகிறது. அந்த ஆத்திரத்தில் அவள் அப்படித் தூங்கிக்கொள்கிற ஊரை, "முட்டுவேனோ? தாக்குவேனோ? கூவுவேனோ? வேறு என்ன செய்வேன்?" என்று கேட்கிறாள். காரணம், தலைவனைப் பிரிந்து தவித்துக்கொண்டிருக்கும் அவளிடம் சிறிதும் அனுதாபமில்லாமல், ஊர் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வூரின் தூக்கத்தைக் கலைத்தால் என்ன என்று, தலைவனைப் பிரிந்த தவிப்பிலே தத்தளிக்கும் தலைவியின் மனம் எண்ணுகிறது. இவள் தூங்கவில்லை என்பதற்காக வேறு யாருமே தூங்கக் கூடாதா? ஊர்முழுவதுமே இவளைப் போல விழித்துக் கொண்டிருந்துவிட்டால் தலைவன் வந்துவிடுவானா? பிறர் விழித்துக் கொண்டிருப்பதனால் இவளுடைய பிரிவாற்றாமையும் தவிப்பும் தீர்ந்துவிடுமா? இவற்றையெல்லாம் அவள் மனம்சிந்திக்க அவளுடைய பிரிவாற்றாமை இடம்கொடுக்கவில்லை. தலைவனுக்கும் தலைவிக்குமிடையே இருந்த பிணைப்பு, இப்போது அவர் களிடையே நிகழ்ந்துவிட்ட பிரிவினால் உண்டான துன்பம் ஆகியவை அவ்வளவு அழுத்தமானவை; ஆழமானது. தலைவியின் இந்த நிலையை,

**"முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்**
**ஓரேன் யானு மோர் வெற்றிமேலிட்டு**
**ஆ அ ஒல் எனக் கூவுவேன் கொல்**
**அலமரல் அசைவாரி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.**

இப்பாடல் எடுத்துக்காட்டும் (குறுந்தொகை) 'ஓரேன்' என்ற சொல் 'இன்னது செய்வதென்று அறியேன்' என்று பொருள்படும். 'அலமரல் அசைவளி அலைப்ப' என்ற சொற்றொடர், சுழல் தலையுடைய அசைந்துவருகின்ற தென்னற்காற்று அவளுடைய பிரிவுத்துயரை மிகைப்படுத்துவதை உணர்த்தும். "ஆ! அ! ஒல் எனக் கூவுவேன் கொல் என்ற சொற்றொடர் அவளுடைய ஆற்றாமையை தெளிவாகக் காட்டும். இப்படிக் கூச்சல்போட்டு ஊரைக்கூட்டினால் தன் தலைவன் வந்து விடுவான் என்ற எண்ணம் அவளுக்கு இருந்ததோ, என்னவோ?

தலைவனுடைய பிரிவினால் தலைவி தூக்கமின்றித் தவிப்பதை இன்னொரு பாடல் வேறுவிதமாகக் குறிப்பிடும். பிரிந்துபோன தலைவனோ 'மெல்லப் புலம்பன்' அதாவது மெல்லிய அழகிய கடற்கரையையுடைய தலைவன். அந்தக் கடற்கரை எப்படிப்பட்டது என்றால், தன்னிடத்தில் தங்கியிருக்கும் குருகு எனப்படும் பறவை உறங்குவதற்குக் காரணமான இனிய நிழலையுடைய புன்னை மரத்தைக் கொண்டது. அந்தப் புன்னை மரமோ கரையைச் சாரச்சார உடைகின்ற அலைகள் தெறிக்கின்ற நீர் திவளைகளால் அரும்புகின்ற புன்னை மரம். தன் கணவன் பிரிந்ததனால் பல இதழ்களையுடைய தாமரையைப் போன்ற தன்னுடைய கண்கள் இமை மூடவில்லை என்று தலைவி தன் தோழியிடம் சொல்கிறாள்.



தலைவனுடைய பிரிவை தலைவி உணர்கிறாள். அந்தப் பிரிவினால் தன்னுடைய கண்கள் மூடமறுப்பதையும் உணர்கிறாள்.

ஆகையால்தான் காமநோயாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறாள். தன் தோழியிடத்து "காமநோய் என்பது இத்தன்மைத்தோ?" என்றும் கேட்டுவிடுகிறாள். தலைவனைப் பற்றிக் குறிப்பிடும்போது அவன் எத்தகையவன் என்று சொல்வதில் சில கவிநயங்கள் அடங்கியிருக்கின்றன. "மெல்லிய அழகிய கடற்கரையையுடைய தலைவன்" என்று பொருள்படும். 'மெல்லப் புலம்பன்' என்ற சொற்றொடரில் அடங்கியிருக்கும் மென்மைத் தன்மை தலைவனைச் சாருமேயன்றிக் கடற்கரையைச் சாராது. ஆக, தலைவனைப் பற்றிக் குறிப்பிடும் போது மென்மைத் தன்மையுடையவன் என்றே குறிப்பிடுகிறான்.

அந்த மென்மைத் தன்மையுடையவன் என்றே குறிப்பிடுகிறாள். அந்த மென்மை தன்மையை விளக்குவதுபோல, ""வதி குருகு உறங்கும் இன்னிழற் புன்னை" என்ற சொற்றொடர் அமைந்திருக்கிறது. ஆக, புன்னை மரத்தின் நிழல் இன்மையாக இருப்பதனால் குருகுகள் உறங்குவதற்கு வசதியாக இருக்கிறது. ஆனால் தன் நாட்டிலே வசிக்கின்ற குருகுகள் உறங்குவதற்கென்றே வாய்ப்பையளித்த மென்மைத் தன்மையுடைய தலைவனோ, தன் நெஞ்சத்தில் வதிகின்ற தலைவியின் தாமரைக் கண்கள் துயிலுறாதபடி பிரிந்துவிட்டான்! இதனைத்தான்

**"அது கொல் தோழி காம நோயே**
**வதிகுருகு உறங்கும் இன் நிழல் புன்னை**
**உடை திரை திவலை அரும்பும் தீம் நீர்**
**மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்**
**பல்லிதழ் உன்கண் பாடு ஒல்லாவே"**

இப்பாடலுக்கு வேறுவிதமாகப் பொருள் சொல்பவர்களும் உளர். அத்தகைய பொருளிலும் ஓர் அருமை இருக்கிறது. "என்னுடைய கண்கள் தம் அகத்திலேயே என் தலைவன் இருக்க அதனையறியாமல் அவன் பிரிந்து சென்றுவிட்டான் என்று எண்ணி உறங்காமல் இருக்கின்றன. காமநோய் இத்தகைய மடமையைச் செய்யத் தூண்டுவதோ?" என்று தலைவி தன் தோழியிடத்துக் கூறுவதாக அவர்கள் பொருள் கொள்கிறார்கள். காதலன் தன் காதலியின் கண்ணகத்தே இடம்பெற்று விடுகிறான் என்று சொல்வது மரபு. வள்ளுவரும்,

**கண்ணுள்ளால் காத லவராகக் கண்ணும்**
**எழுதேம் கரப்பாக்கு அறிந்து.**


என்று கூறுவதை அவதானிக்கலாம். இந்தக் குறள், "காதலர் கண்ணினுள்ளே இருப்பதனால் நான் கண்ணுக்கு மை எழுதுவதில்லை; ஏனெனில் எப்படி எழுதுவது, அந்த நேரத்திற்கு காதலரை மறைக்கும் என்ற காரணத்தினால்" என்று நாயகியார்கூறுவதாக அமைந்துள்ளது. காதலர் கண்ணுக்குள்ளேயே இருக்கும் பொழுது அவர் பிரிந்துபோய்விட்டார் என்ற எண்ணத்தினால் கண்கள் உறக்கத்தை இழந்திருப்பது மடமைதானே!

தலைவனைப் பிரிந்து தலைவியின் நிலையும் தலையைப் பிரிந்து தலைவன் படும் அவஸ்தையும் இலக்கியங்கள் காட்டும் சுவையாகும். பழையவற்றைப் படிக்கும்பொழுது ஏற்படும் உணர்வு அலாதியானது. ஆனால் இன்று நம் பண்பாடு என்னவாகி நிற்கிறது.



(தொடரும்)

## வாரமொரு வாழ்வியற் சிந்தனை




# மன அழுத்தத்தை குறைப்பது எப்படி?

இறுக்கமான சூழலில் சுழன்று கொண்டிருக்கிறது உலகம். எல்லாத் துறையிலும் எல்லா பணிநிலைகளிலும் அனைவரும் ஒருவிதமான மன இறுக்கத்துடனேயே உழன்றுகொண்டு இருக்கிறார்கள். மனிதனுக்குவரும் நோய்களில் 75 முதல் 90 வரை நோய்கள் அழுத்தமான சூழல் காரணமாக வருபவையே என சமீபத்திய ஆராய்ச்சி ஒன்று அதிர்ச்சித் தகவல் சொல்லியிருக்கிறது. இதுவே மனஅழுத்தத்தைக் கையாள்வதன் தேவையை நமக்கு எடுத்துக்கூறுகிறது. சக மனிதன்மீதான் கரிசனையும், ஆத்மார்த்தமான அக்கறையும் விலகி சுயநலச் சிந்தனைகள் விஸ்வரூபம் எடுக்கும்போது இத்தகைய இறுக்கமான சூழல்கள் உருவாகின்றன. மேலதிகாரிகளின் கெடுபிடிகளால் தொல்லைகளுக்கு ஆளாகும் ஊழியர்கள், வாழ்க்கைத்துணையின் விட்டுக்கொடுத்தல் அல்லது புரிந்து கொள்ளல் இல்லாத சூழலில் உருவாகும் மனஅழுத்தம், சாதீய, மத, இனரீதியாக அழுத்தமான சூழலுக்கு உள்ளாகும் பொதுமக்கள். என எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும், அல்லது எந்த ஒரு சூழலை எடுத்துக் கொண்டாலும் இன்று மக்கள் ஒருவித மனஅழுத்தத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனஅழுத்தம் மிகவும் கொடுமையானது. இயல்பான வாழ்க்கையைப் பறித்து நிம்மதியற்ற பொழுதுகளையும், நோய்களையும் தந்து செல்லும் இந்த மனஅழுத்தம் களையப்படவேண்டியது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

**ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம் இவையெல்லாம் மனஅழுத்தத்தைத் தோற்றுவிக்கும் சில காரணிகள். சிலருக்கு அதிக வெளிச்சம், அதிக சத்தம் இவைகூட மனஅழுத்தத்தை அதிகரிக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். பிறப்பு, இறப்பு, போர்கள், திருமணங்கள், விவாகரத்துகள், நோய்கள், பதவி இழப்பு, பெயர் இழத்தல், கடன், வறுமை, பரீட்சை, போக்குவரத்து நெரிசல், வேலை அழுத்தம், கோபம், நட்புமுறிவு, உறவு விரிசல், என நம்மைச் சுற்றி நிகழும் எல்லா விதமான காரணிகளும் மன அழுத்தத்திற்குள் நம்மை இட்டுச் செல்லமுடியும்.**

மனஅழுத்தத்தைக் குறித்து மருத்துவர்கள் குறிப்பிடுகையில், எதிர்பாராத சூழலுக்கு மனிதன் தள்ளப்படும்போதே அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகிறான் என்கின்றனர். எதிர்பார்ப்புகளைக் குறைக்கும்போது மனஅழுத்தம் பெருமளவில் குறைந்துபோவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். குழந்தைகள், எதிர்பார்ப்புகள் அதிகம் இல்லாதவர்கள், அவர்கள் எதையும் ஆனந்தத்துடன் பெற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள் எனவே அவர்களால் மனஅழுத்தம் இல்லாமல் வாழமுடிகிறது. ஆனால் பெரியவர்கள் எதிர்பார்ப்புகளை அதிகப்படுத்துவதும், கிடைப்பதில் திருப்தி பெறாதநிலையையும் கொண்டிருப்பதால் அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம் இவையெல்லாம் மன அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் சில காரணிகள். சிலருக்கு அதிக வெளிச்சம், அதிக சத்தம் இவைகூட மனஅழுத்தத்தை அதிகரிக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். பிறப்பு, இறப்பு, போர்கள், திருமணங்கள், விவாகரத்துகள், நோய்கள், பதவி இழப்பு, பெயர் இழத்தல், கடன், வறுமை, பரீட்சை, போக்குவரத்து நெரிசல், வேலை அழுத்தம், கோபம், நட்பு முறிவு, உறவு விரிசல், என நம்மைச் சுற்றி நிகழும் எல்லாவிதமான காரணிகளும் மனஅழுத்தத்திற்குள் நம்மை இட்டுச் செல்லமுடியும். புகைப்பிடித்தல், சரியான உணவுப் பழக்கம் இல்லாமை, போதைமருந்துப் பழக்கம், குடிப்பழக்கம், சரியான தூக்கம் இல்லாமை இவையெல்லாம் மனஅழுத்தத்தை நாம் விலை கொடுத்து வாங்கும் செயல்கள். புகைபிடிக்கும்போது உடலில் கலக்கும் நிக்கோட்டினுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கும் சக்தி இருப்பதாக ஆராய்ச்சிகள் நிரூபித்து இருக்கின்றன. முதுமைநிலையை அடைபவர்களிடமும், மாதவிடாய் காலத்தில் பெண்களிடமும் இந்த மன அழுத்தம் அதிகமாய் இருக்கும் என்றும் அத்தகையவர்களிடம் அன்புடன் உரையாடி மனஇறுக்கத்தைத் தணிக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

மனஅழுத்தம் நல்ல செயல்களில் கூட வரும் என்கிறது ஒரு ஆய்வு. திருமணம்போன்ற நிகழ்வுகள், பதவியுயர்வு, இவையெல்லாம் ஒருவகையில் மனஅழுத்தத்தை அதிகரிக்கும் என்றும் அதை சரியான விதத்தில் கையாள்வதில் நம்முடைய கவனத்தைச் செலுத்தவேண்டும் என்கிறது அதே ஆய்வறிக்கை. எல்லா பாதைகளையும் மெத்தைகளால் அலங்கரிப்பது இயலாது என்பதால் செருப்பு அணிகிறோம்.

அதுபோலவே மனஅழுத்தத்தை உண்டாக்கும் காரணிகளை ஒழிப்பது என்பது இயலாத காரியம். ஆனால் நம்முடைய மனதை திறமையாகக் கையாள்வதன்மூலமாக மன அழுத்தத்தில் மாட்டிக்கொள்ளாமல் இருக்கமுடியும். மனஅழுத்தத்தைக் கையாள்வதற்கு நம்முடைய மனதின் சிந்தனைகளை தூய்மைப்படுத்த வேண்டும். எதிர்மறைச் சிந்தனைகள் பெரும்பாலும் மனஅழுத்தத்தையே அளிக்கின்றன. எனவே நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதன் மூலம் மனஅழுத்தத்தைக் கையாள முடியும்.

தியானம், யோகா போன்றவற்றில் மனதை ஈடுபடுத்துவதும், ஆழமாக மூச்சை இழுத்துவிடும் மூச்சுப் பயிற்சியைச் செய்வதும் மன அழுத்தத்தைக் குறைக்கும் வழிமுறைகளில் சில என்கின்றனர் பயிற்சியாளர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகளும் நல்ல பலனைத் தருகின்றன.

(தொடரும்)

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 657

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 655 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 தி | 3 ம | 4 து | 5 ர | 6 ம் |
| 7 வ | 8 ரி | 9 க | | 11 அ | 12 க |
| 13 ன் | 14 நா | 15 ம் | 16 ப | | 18 சு |
| 19 கா | 20 ய | 21 த் | 22 தி | 23 ரி | |
| 25 ர் | 26 க | 27 வ | | 29 பி | 30 கு |
| 31 ட் | 32 ம் | 33 து | 34 ட் | 35 ட | 36 பா |

**மேலிருந்து கீழ்**

01. வால்மீகி இராமாயணம்.
02. ஒருவகை உலோகம்.
04. அரசன், வேளாளன். (குழம்பியுள்ளது)
05. கட்டாயம். தொந்தரவு. (குழம்பியுள்ளது)
06. கடமை, பிதிர்க்கடன். (குழம்பியுள்ளது)
27. ஒற்றை. (திரும்பியுள்ளது)

**இடமிருந்து வலம்**

01. இது. இராவணனிடம் இருந்து சீதையை மீட்க வானரங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டது.
7. ஒரு முறை சுவாசித்து 80 நிமிடங்கள் வரை சுவாசிக்காமல் இருக்கக்கூடிய கடல்வாழ் உயிரினம். (குழம்பியுள்ளது)
13. ஒரு வகை பலகாரம்.
19. இது பாத்திரங்கள் கழுவப் பயன்படும்.
22. சொல்லுரை. (குழம்பியுள்ளது)
29. மரம்.
31. உயர்கல்வியில் பயிலும் பாடநெறி ஒன்று. (குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 11.01.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 657
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.655 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எஸ்.நியான், நிந்தவூர், மட்டக்களப்பு.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. மு.சிலோசனா, பிரதான வீதி, பதுளை.
02. எஸ்.நிகேதன், தம்பலகாமம், திருகோணமலை.
03. மு.கீர்த்தனன், எட்டியாந்தோட்ட.
04. க.பவித்ரா, தீவுக்காலை, அக்கரைப்பற்று.
05. அ.அரவிந்தன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
06. இ.நிரஞ்சனா, புத்தூர்ச்சந்தி, கொடிகாமம்.
07. ஈ.சித்திரன், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
08. யோ.அம்பலவாணர், தும்பளை, பருத்தித்துறை.
09. என்.அஸ்மித், கோவில் வீதி, திருநெல்வேலி.
10. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.



# பசங்க–2 விமர்சனம்

ஏ.டி.ஹெச்.டி. என்று சுருக்கமாகச் சொல்லப்படும் அட்டென்ஷன் டெபிஷிட் ஹைபர் அக்டிவிட்டி டிஸ்ஆர்டர் என்கிற குழந்தைகளின் குறைபாட்டை பின்னணியாகக் கொண்டு இப்போதைய கல்வி முறை, பகட்டான நகரவாழ்வுக்கு ஆசைப்பட்டு இயல்புவாழ்க்கையைத் தொலைத்தவர்களின் நிலை, குழந்தை வளர்ப்பு முறை என பல விசயங்களை நெஞ்சில் தைக்கிற மாதிரி சொல்லியிருக்கிறார் இயக்குநர் பாண்டிராஜ்.

முனீஸ்காந்த் வித்யா, கார்த்திக் குமார் பிந்துமாதவி ஆகிய தம்பதியினருக்கு ஒரே சமயத்தில் குழந்தை பிறக்கிறது. அதற்கும் முன்னும் பின்னுமான சம்பவங்களின் உணர்ச்சிக் கோர்வைதான் படம். வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஆறுமாதம் ஆகும்போதே பள்ளிக்கூடத்தில் சேர்க்க விண்ணப்பம் வாங்குவது, நிறைமாதமான பிறகு, உங்கள் குழந்தை என்னவாக வரவேண்டும்? என்கிற மருத்துவரின் கேள்விக்கு உடனடி அவசர விவாதத்துக்குப்பின் டாக்டர் என்று பதில் சொல்கிறார்கள். உடனே அருகிலிருக்கும் சோதிடர் இந்தத் திகதியில் இத்தனை மணிக்கு அறுவைசிக்கிச்சை செய்து குழந்தைப் பிறப்பு வைத்தால் அது நடக்கும் என்று சொல்ல, அவர் சொன்ன நேரத்தில் பிரசவம் நடக்கிறது.

இப்படி வளரும் குழந்தைகள் மிகவும் சுட்டிகளாக இருக்கின்றன. வருடத்திற்கொரு பள்ளி மாறவேண்டியிருக்கிறது. வீடும் மாறவேண்டியிருக்கிறது. வீட்டிலும் அவர்களால் பல தொல்லைகள். இதனால் மனம் வெறுத்த அத்தம்பதியினர் குழந்தைகளை விடுதியில் சேர்க்கிறார்கள்.

அதன்பின் அவர்களுக்கு இதுதான் சிக்கல் என்பதை மருத்துவர் தமிழ்நாடனாக நடித்திருக்கும் சூர்யா கண்டுபிடித்துச் சொன்னபிறகு நடக்கும் விசயங்களே கதை.

முனிஸ்காந்த் வித்யா தம்பதியின் மகனாக நடித்திருக்கும் நிஷேஷும், கார்த்திக்குமார் பிந்துமாதவி தம்பதின் மகளாக நடித்திருக்கும் வைஷ்ணவி ஆகிய இருவரும் போட்டிபோட்டு நடித்து மனதைக் கவருகிறார்கள். விடுதியில் அவர்களை விட்டுவிட்டுப்போனதும் அவர்களுடைய தவிப்பு... உருக்கம்!

சென்னைப் பெருநநகரத்து உயர்நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அவர்கள், குழந்தை பிறப்பு முதல் வளர்க்கிறவரை எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பதை அவர்களுக்கே தெரியாமல் பின்தொடர்ந்து சென்று எடுத்தது போலக் காட்சிகள் அமைத்திருக்கிறார்கள்.

இரண்டு தம்பதிகளை வைத்துக்கொண்டு உயர்நடுத்தர மக்களின் அன்றாட நடைமுறை, அவர்களின் ஆசை ஆகியனவற்றை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முனீஸ்காந்துக்கு இருக்கும் பணக்காரவியாதி அவ்வப்போது வாய்விட்டுச் சிரிக்கவைக்கப் பயன்படுகிறது.

சூர்யா, அமலா பால் என்ற ஸ்டார் கேஸ்டிங்கை வீணாக்காமல் நல்ல மெசேஜ் சொல்ல பயன்படுத்தியிருக்கிறார்கள். முஷ்டியை முறுக்கும் அக்ஷன் ஹீரோவாக அசத்துவது சூர்யாவுக்கு கைவந்த கலை. ஆனால், இந்தப் படத்தில் குழந்தைகளைக் குதூகலப்படுத்தும் ஜாலி மருத்துவராகவும் ஸ்கோர் செய்திருக்கிறார். குழந்தைகளின் சுட்டித்தனத்தை ரசித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் கதைக்குள் அவர் வந்தாலும் அந்த ரசனை குறையாமல் பார்த்துக்கொள்கிறார். இயக்குநர்கள் சமுத்திரக்கனி, ஆர்.வி.உதயகுமார், ராமகிருஷ்ணன், இசையைமப்பாளர் சிற்பி, இமான் அண்ணாச்சி, நமோநாராயணா உட்பட பல கௌரவத் தோற்றங்கள். சமுத்திரக்கனி தன்னுடைய குழந்தையைப் பள்ளிக்குக் கூட்டிப்போகும் நேரத்தில், குழந்தையின் ஆசிரியர் தனியார் பள்ளியில் தன் குழந்தையைச் சேர்க்க விண்ணப்பம் வாங்க நெடிய வரிசையில் காத்திருக்கும் காட்சியும் அப்போது அரசுவேலைகளில் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளிகளிலேயே சேர்க்கவேண்டும் என்று அரசாணை வரவேண்டும் என்று சொல்லும்போதும் அப்ளாஸ் அள்ளுகிறது.

குழந்தைகள் கெட்டவார்த்தை பேசுவதில்லை கேட்டவார்த்தையைத்தான் பேசுகிறார்கள், மதிப்பெண்களை விதைக்காதீர்கள் மதிப்பான எண்ணங்களை விதையுங்கள் உள்ளிட்ட பல வசனங்கள் சாட்டையடி!

அமலா பாலை வைத்து தனியார் பள்ளிகளின் எண்ணம் மற்றும் செயற்பாடுகளை நறுக் சுருக்காகச் சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் நடக்கும் அனைத்துப் பள்ளி மாணவர்கள் போட்டியில் இந்தக் குழந்தைகள் பங்கெடுக்க அவர்களே வெற்றிபெறுகிறார்கள் என்று காட்சிவைக்காமல் வித்தியாசமாக வைத்து பாராட்டைப் பெறுகிறார் பாண்டிராஜ்.

இசையமைப்பாளர் அரோல்கெரோலி, ஒளிப்பதிவாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பங்களிப்பு படத்துக்குப் பலம். குழந்தைகள் சாலையில் அம்புலன்ஸ் போகும்போது அப்படியே நின்று அவர்களுக்காகக் கண்களை மூடிப் பிரார்த்தனை செய்யும் காட்சிகளில் சிலிர்க்கவைக்கிறார்கள். அப்படியான சிலிர்ப்பு அத்தியாங்கள் படம் நெடுக இருக்கின்றன. பசங்க-2... இது குழந்தைகள் படமென்று சொல்வதைக் காட்டிலும், இது பெற்றோருக்கான பாடம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்!





# அசினுக்கு டும் டும் டும்...

ஜெயம் ரவி ஜோடியாக எம்.குமரன் சன் ஒப் மகாலட்சுமி படத்தில் அறிமுகமானவர் அசின். தசாவதாரம் படத்தில் கமல்ஹாசன் ஜோடியாக நடித்தார். விஜய், அஜித், விக்ரம், சூர்யா போன்றோருடன் நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார். மலையாளம், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் அசின் நடித்த கஜினி படம் வசூலில் சாதனை படைத்தது.


இந்த படம் அமீர்கான் நடிக்க இந்தியில் மொழிமாற்றம் செய்தபோது அதிலும் அசினே நடித்தார். அந்த படம் வெற்றி கரமாக ஓடியதால் இந்தி திரையுல-கிலும் கலக்கினார். சல்மான்கான், அக்சய்குமார், அபிஷேக்பச்சன், அஜய் தேவ்கான், ஜோன் ஆபிரகாம் என முன்னணி நடிகர்களுடன் நடித்தார். இந்த நிலையில் அசினுக்கும் மைக்ரோ மேக்ஸ் செல்போன் நிறுவன உரிமை யாளர் ராகுல் சர்மாவுக்கும் காதல்மலர்ந்தது. இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவுசெய்தனர். இதனை அவர்கள் பெற்றோரும் ஏற்றுக்கொண்டனர். அசின் தற்பேது புதுப்படங்களில் அவர் ஒப்பந்தமாகவில்லை.




டிய
காட்சிகள்
பயந்தேன். பிறகு
விக்ராந்த் நடித்திருக்கிறார்.
நானும், விக்ராந்தும் சண்டை
உருவாக்கப்பட்டது. இதில் எ
இரண்டு பேரையும் ஸ்டண்ட் மாஸ்டர் ஒருவழியாக்கிவிட்டார். இரண்டு பேருக்கும் காயம் எல்லாம் ஏற்பட்டது. இப்படத்தின் கதைக்கு வில்லனாக, இந்தி நடிகர்கள் அல்லது பி-றமொழி நடிகர்களை நடிக்க வைக்கலாம் என்று இயக்குனர் கூறி-னார். ஆனால், நான் தான் இந்த கதாபாத்திரத்திற்கு விக்ராந்த் பொருத்தமாக இருப்பார் என்று சிபாரிசு செய்தேன். விக்ராந் த்தை கேட்ட போது, என்னை டம்மி வில்ல னாக்கி விட-ாதே என்று கேட்டார். அதற்கு நான், வில்லனை ஹீரோவாக காண்பித்தால் ஹீரோ
வேலை இருக்காது என்றே

கருணாகரனுக்கு இந்த
நன்றி தெரிவித்துக் கொள்
படப்பிடிப்பின்போது, எமிஜா
காப்பாற்றினார். சத்யராஜ் எ
அப்பாவாக நடித்திருக்கிறார்
அனுபவம்வாய்ந்த நடிகருட
மிகவும் சந்தோசமாக இருக்
என்றார்.





# யார் பேச்சையும் கேட்கமாட்டேன் தீபிகா படுகோனே

பொலிவூட்டின் முன்னணி நாயகியாக இருப்பவர் தீபிகா படுகோனே. இந்த ஆண்டு அவர் நடித்த படங்கள் அனைத்தும் ஹிட் படங்களாகவே அமைந்தன. அணிமையில் இவரது நடிப்பில் வெளியான பாஜிராவ் மஸ்தானி படமும் வசூலில் ரூ.100 கோடியை தொட்டுள்ளது.

இதுகுறித்து தீபிகா படுகோனே கூறும்போது, 2015ஆம் ஆண்டு எனக்கு சிறப்பாக அமைந்திருக்கிறது. 2013ஆம் ஆண்டு எனக்கு நல்ல ஆண்டாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு 3 சிறப்பு வெளியீடுகள், பல அருமையான நினைவுகள் என்று மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது.

நான் எந்த படத்தில் நடித்தாலும், டைரக்டர் கதையை சொல்லும்போது அது எனக்கு பிடித்திருந்தால் மட்டுமே நடிப்பேன். வேறு யார் பேச்சையும் கேட்கமாட்டேன். நான்தான் முடிவுவெடுப்பேன். பிறர் முடிவுகளை நம்பி ஏற்கமாட்டேன். என் படம் எவ்வளவு வசூல் என்று மட்டும் நான் பார்ப்பது இல்லை.

ஒரு படம் எத்தனை கோடி வசூலிக்கிறது என்பதை வைத்து அதன் வெற்றியை முடிவுசெய்வது வருத்தம் அளிக்கிறது. என தங்கை என் படங்களைப் பற்றி வெட்டு ஒன்று துண்டு இரண்டு என விமர்சிப்பார். குடும்பத்தினர் அருகில் இருந்தாலும் சரியான கருத்துக்களை சொல்வார். எந்த படத்தில் நடிப்பது என்பதை நான்தான் முடிவுசெய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.




# உதயநிதி நடிக்க பயந்த காட்சிகள்



உதயநிதி நடிப்பில் தற்போது உருவாகியுள்ள படம் கெத்து. இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் உதயநிதி, எமிஜாக்சன், ராஜேஷ், கருணாகரன், விக்ராந்த், இயக்குனர் திருகுமரன், இசையமைப்பாளர் ஹரீஸ் ஜெயராஜ் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்துகொண்டனர்.

இதில் உதயநிதி பேசும்போது, "நான் இதுவரை கமர்ஷியல், குடும்பப்பாங்கான படங்களில் மட்டும் நடித்திருந்தேன். முதல் முறையாக அக்ஷன் படத்தில் நடித்திருக்கிறேன். முதலில் படப்பிடிப்பு ஆரம்பித்தவுடன் காமெடியாக சென்றது. பின்னர் அக்ஷன் காட்சிகளில் நடிக்கும் போது மிகவும்
ந்தேன். பிறகு பழகிவிட்டது. வில்லனாக
திருக்கிறார். கிளைமாக்ஸ் காட்சிகளில்
தும் சண்டைபோடும் காட்சி ஒன்று
து. இதில் எங்கள்
ும்
ர்
ிட்டார்.
தும் காயம்
டது.
தைக்கு
ந்தி
லது பி-
களை
லாம்
ர் கூறி-
நான் தான்
த்திரத்திற்கு

த்தமாக
ப்பார் என்று
பாரிசு
செய்தேன்.
விக்ராந்
த்தை
கேட்ட
து,
னை
மி வில்ல
க்கி விட-
த என்று
ட்டார்.
ற்கு
, வில்லனை
ாவாக
த்தால் ஹீரோவுக்கு
காது என்றேன்.
வுக்கு இந்த நேரத்தில்
துக் கொள்கிறேன்.
பாது, எமிஜாக்சனை
சத்யராஜ் எனக்கு
த்திருக்கிறார்.
ந்த நடிகருடன் நடித்தது
சமாக இருக்கிறது"




# அதர்வா நடிப்பில் உருவாகும் கணிதன்

அதர்வா நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த ஈட்டி படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில், இவர் அடுத்து நடித்துக்கொண்டிருக்கும் கணிதன் என்ற படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கணிதன் படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக மெட்ராஸ் படப்புகழ் கேத்ரீன் தெரசா நடிக்கிறார். மேலும், இயக்குனர் கே.பாக்யராஜ், நரேன் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். டி.என்.சந்தோஷ் இயக்கியிருக்கிறார். டிரம்ஸ் சிவமணி இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. அடுத்த வருடத்தில் படம் வெளியாகும் எனத்தெரிகிறது.

இப்படத்தின் தலைப்பான கணிதன் என்றால், கணக்கு பார்ப்பவனாம். வீரத்துடன் இருக்கிறவர் களை வீரன் என்று சொல்வதுபோல், கணக்கு பண்ணி வாழ்கிறவனை கணிதன் என்று அழைப்பார்களாம். இப்படத்தில் அதர்வா எதையும் திட்டம்போட்டு கணக்காக செய்பவராம். அவரது கணக்கும் ஒரு இடத்தில் தப்பாகிறது. அதை அவர் எப்படி சரிசெய்தார் என்பதுதான் இப்படத்தின் கதையாம். இப்படத்தை கலைப்புலி எஸ்.தாணு பிரம்மாண்டமாக தயாரித்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பீப் பாடலால் இது நம்ம ஆளு படத்திலும் மாற்றம்

பீப் பாடல் விவகாரத்தில் பெரும் சிக்கலுக்கு ஆளாகியிருக்கிறார் சிம்பு. அவர் மட்டுமின்றி அவர் குடும்பமும் இதனால் பாதிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய பேச்சில் இருந்து தெரிகிறது.

அவருடைய தனிப்பட்ட சிக்கல் அவர் படத்துக்கும் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பாண்டிராஜ் இயக்கத்தில் அவர் நடித்திருக்கும் இது நம்ம ஆளு படம் பெப்ரவரியில் வெளியாவதாக இருந்தது.

அந்தப் படத்தின் வெளியிடும் உரிமையை தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தன. ஒன்றுக்குப் பலமுறை பேசிக்கொண்டிருந்தார்கள். இதனால் அந்தப்படத்தை அவர்கள்தான் வெளியிடவிருக்கிறார்கள் என்று செய்திகளும் வந்துவிட்டன. இந்நிலையில் இந்தச் சிக்கல் வந்துவிட்டதால் தேனாண்டாள் நிறுவனத்தினர் இந்தப் படத்தை வாங்கி வெளியிடும் முயற்சியில் இருந்து பின்வாங்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஏற்கெனவே தேனாண்டாள் உட்பட வேறு சில நிறுவனங்களிலும் சிம்பு தரப்பிலிருந்து பேசிவருவதாகச் சொல்லப்பட்டது. இப்போது தேனாண்டாள் நிறுவனம் இல்லை என்று முடிவாகிவிட்டதால் வேறு நிறுவனங்களிடம் பேசுகிறார்களாம்.

எப்படியும் பெப்ரவரியில் படத்தை வெளியிட்டு விடுவது என்று உறுதியாக இருப்பதாகவும் யாரும் வெளியிட முன்வராவிட்டால் சொந்தமாகவே படத்தை வெளியிடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.




மேற்குலகில் நடந்துமுடிந்த முதலாளித்துவப் புரட்சியானது நிலப்பிரபுத்துவ மன்னராட்சியை மேற்குலகில் முற்றாக அழித்தொழித்துவிட்டு ஓர் முழுமையான முதலாளித்துவ அரசை நிறுவியதோடு...! மன்னராட்சியைத் தாங்கிநின்ற நிலப்பிரபுத்துவ கலாசாரத்தையும் பண்பாட்டையும் முற்றுமுழுதாகத் தூக்கி வீசிவிட்டு முதலாளித்துவப் பண்பாட்டை மேற்கு நாடுகளில் முழுமையாக நிறுவிக் கொண்டது! அதனால்தான் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை முதலாளித்துவ நாடுகள் மிக இலகுவாகக் கண்டன. ஆனால் வர்த்தகநோக்கத்தோடு கீழைத்தேச நாடுகளைக் கைப்பற்றிக்கொண்ட முதலாளித்துவமானது அந்தந்த நாடுகளில் அதிகாரத்திலிருந்த நிலப்பிரபுத்துவத்தோடு சமரசம் செய்துகொண்டே தனது ஆட்சியை அந்தந்த நாடுகளில் நிறுவிக்கொண்டது. எனவே...

இலங்கைபோன்ற கீழைத்தேச நாடுகளில் உருவான அரசுகள் முதலாளித்துவ அரசுகளாகவோ, நிலப்பிரபுத்துவ அரசுகளாகவோ இல்லாமல் வர்த்தக நலன்சார்ந்த ஒரு கலப்பரசாகவே இருந்தது. இந்தக் கலப்பரசானது உலக ஏகாதிபத்தியத்தின் வர்த்தகநலனுக்குச் சாதகமான ஒரு நுகர்வுக் கலாசாரத்தையும் இலங்கையில் தோற்றுவித்தது. இவ்வாறு மேற்குலக ஏகாதிபத்தியமானது இலங்கையின் நிலப்பிரபுத்துவத்துடன் இணைந்துகொண்டு தமது இலாபநோக்கையே பிரதானமாகக் கொண்டு இலங்கையில் மேற்கொண்டு வரும் அசரியல் செயற்பாடுகளே இன்றைய எமது அவலமான வாழ்விற்கான அடிப்படை என்ற உண்மையை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்!

மேலே குறிப்பிட்டதுபோல் தமது வர்த்தகம்சார்ந்த இலாபநோக்கத்திற்காக யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி வர்க்கத்தோடு சமரசம் செய்துகொண்டு தமது இராச்சியத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவிக்கொண்ட அந்நியர்களுக்கு கிராமத்து வறிய விவசாய மக்களைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியம் எதுவும் அன்றிருக்கவில்லை. அதற்காக அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றவும் இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக் குடியினரின் ஆடம்பரமான வாழ்விற்காக பரம்பரை பரம்பரையாகத் தமது இரத்தத்தைச் சிந்தி உழைத்துவந்த கிராமத்து வறிய விவசாய மக்களைப் பற்றி அவர்களது எதிர்கால வாழ்வுபற்றி சிந்திக்கவேண்டிய யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினருக்கே இருந்தது. ஆனால் அவர்களோ தமது நிலங்களிலே கடுமையாக உழைத்து அந்த நிலங்களைப் பொன்விளையும் பூமியாக மாற்றிய கிராமத்து உழைக்கும் மக்களை மனிதப் பிறவிகளாகவே கருதிக்கொள்ளவில்லை. ஏனெனில் யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினரைப் பொறுத்தவரை கிராமத்து வறியமக்கள் அவர்களிற்காக உழைக்கவென்றே படைக்கப்பட்ட மனித உணர்ச்சிகள் ஏதுமற்ற அடிமைகள் என்பதே அவர்களது உறுதியான அபிப்பிராயமாக இருந்தது...!

பிரித்தானிய வெள்ளை ஏகாதிபத்தியத்துடன் காலப்போக்கில் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தி...! அவர்களிற்காக விசுவாசமாக உழைத்ததன் மூலம் அவர்களது செல்லப்பிள்ளைகளாக மாறிய தமிழ் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினரே அன்றைய இலங்கையின் அரசியல் அதிகாரத்தில் பிரதான பங்காளிகளாக மாறிக்கொண்டனர். இவ்வாறு இலங்கையின் அரசியல் அதிகாரத்தில் பிரதான பங்காளிகளாக மாறிய தமிழ் மேட்டுக்குடியினருக்கு தமது நிலம்சார்ந்த ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதில் எந்தவொரு சிரமமும் இருக்கவில்லை.

1940-களின் நடுப்பகுதியில் டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் வன்னிப் பகுதியில் குடியேற்றங்களை மேற்கொண்டபோது அந்தக் குடியேற்றத்தில் தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வழங்கினார். தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த முன்னுரிமையைப் பயன்படுத்தி நில உரிமையற்ற கிராமத்து வறிய தமிழ் மக்களை வன்னிப் பகுதியில் குடியேற்றம் செய்ய அன்றிருந்த தமிழ் தலைமை முயற்சிக்கவில்லை. மாறாக ஐம்பது ஏக்கர், நூறு ஏக்கர் என வன்னிநிலங்களை யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினர் தமக்கே சொந்தமாக்கிக் கொண்டு அந்த நிலங்களிலே யாழ்ப்பாணக் கிராமத்து வறிய கூலி மக்களையும் மலையகத்தைச் சார்ந்த தமிழ் மக்களையும் விவசாயக் கூலிகளாக குடியேற்றினார்கள்.

இவ்வாறு தமிழ் மேட்டுக்குடியினரின் நிலம்சார்ந்த அபகரிப்பானது... உற்பத்தியை பிரதான நோக்கமாகக்கொண்ட ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில் அன்று நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த அவர்களது பொருளாதார வாழ்வு அந்நியர்களின் யாழ்ப்பாண வருகையோடு முற்றுமுழுதாக மாறிவிட்டது. இப்போது அரசியல்சார்ந்த அதிகாரமும் பெரும்... பெரும்... அரச உத்தியோகங்களுமே அவர்களது பொருளாதார வாழ்வின் அடிப்படையாக மாற்றம் கண்டது. அப்படியானால் நிலத்தின்மீதான அவர்களது தீராத மோகத்திற்கான அடிப்படை என்ன?

அந்நியர்களது வருகைக்குப் பின் வெள்ளையர்களுடனான ஆழமான உறவை யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவம் கொண்டிருந்தபோதும் அவர்களது நிலப்பிரபுத்துவ கலாசாரப் பண்பாடு சார்ந்த சிந்தனையில் பெரியதோர் மாற்றம் ஏற்படவில்லை. அந்நியர்களும் அவர்களை முற்றுமுழுதான முதலாளித்துவ கலாசார சிந்தனைக்குள் கொண்டுவர விரும்பவில்லை. ஏனெனில் நிலப்பிரபுத்துவ சிந்தனைகளையும் கலாசாரப் பண்பாட்டையும் அவர்கள்மூலமாகப் பாதுகாக்கவேண்டிய தேவை அந்நியர்களின் வர்த்தகரீதியிலான சுரண்டலுக்கும் அவர்களது வர்த்தக மேம்பாட்டிற்கும் அன்று மிகமிக அவசியமானதாக இருந்தது. எனவே நிலப்பிரபுத்துவ கலாசாரப் பண்பாட்டுச் சிந்தனைகளை தமது மனங்களிலே சுமந்தவாறு வாழ்ந்துகொண்டிருந்த தமிழ் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினர் தம்மிடம் சொந்தமாக உள்ள நிலத்தின் அளவைக் கொண்டே தமது சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்படும் என உறுதியாக நம்பினர்.

எனவேதான் தொடர்ச்சியாகத் தமக்கிருந்த அரசியல்சார்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது நிலத்தின்மீதான ஆதிக்கத்தை தொடர்ந்தும் வளர்க்க முயன்றுகொண்டிருந்தார்கள். இவ்வாறு தமது நிலத்தின்மீதான உரிமையை பெருக்கிக்கொண்ட அவர்கள் பிற்காலத்தில் தமது மண்ணைப் பற்றியும் அந்த மண்ணிலே தமக்காக உழைத்த மக்களைப் பற்றியும் எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உள்ளூரில் இருந்த கோயில்களிற்கும் இந்தியாவில் இருக்கின்ற சிதம்பரத்தில் உள்ள கோயில்களிற்கும் எழுதி வைத்தார்களேதவிர கிராமத்து நிலமற்ற மக்களுக்கு வழங்க அவர்கள் எப்பவுமே தயாராய் இருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட அடிப்படையில் நாம் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள ஏக்கர் கணக்கான காணிகளிற்குச் சட்டப்படியான உறுதிப்பத்திரம் இருந்த போதும் அக்காணிகள் யாராலும் உரிமை கோரப்படாத நிலங்களாக இன்றுவரை இருக்கும். அதேவேளை தமிழ் தேசியத்தின் பொருளாதாரவளங்கள் பற்றி எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல் வளமான செம்மண் தோட்ட நிலங்களில் அழகான கல்வீடுகளையும் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் விவசாயத்தை நம்பிவாழும் கிராமத்து வறிய விவசாயிகளோ பாரிய நிலப் பிரச்சினைக்கும் தொழில் பிரச்சினைக்கும் முகங்கொடுத்து வருகின்றார்கள். அவ்வாறே வன்னிப் பெருநிலப்பரப்பிலும் பல ஏக்கர் கணக்கான காணிகள் மக்களுக்கு வழங்கப்பட முடியாமலும் காணிகளிற்கான உரிமை கோரப்படாமலும் இன்றுவரை இருந்து வருவதோடு பெரும் சமூகச் சிக்கல்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

மேற்கு நாடொன்றில் வாழும் பிரபல தமிழ்த் தேசியவாதப் பெரும் தலைவர் ஒருவரின் பூட்டப்பிள்ளை வெளிநாட்டில் இருந்துகொண்டே கொக்கிளாய் நாயாற்றுப் பகுதியில் உள்ள தனது பூட்டானின் ஏக்கர் கணக்கான காணிகளிற்குரிய உறுதிப்பத்திரத்தை எடுத்துக்கொண்டதாக ஒரு தகவல் உண்டு. அத்தோடு வெளிநாட்டிலிருந்து அண்மையில் வன்னிக்கு வந்த ஒருவர் தனது ஐம்பது ஏக்கர் காணி எங்கிருக்கென்று தெரியாமல் தனக்குச் சொந்தமான நிலத்தை தேடி அலைந்துவிட்டுச் சென்றுள்ளார். அதேவேளை மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் வன்னிப்பகுதியில் உறுதியோடு வழங்கப்பட்ட காணிகளில் புலிகள் காலத்தில் குடியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று நிலமும் இல்லாமல் வீட்டுத்திட்டத்தையும் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.


இந்த நிலையில் எமது தமிழ் தேசியமானது இந்த மண்ணிலே பெரும்பான்மை மக்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் கிராமத்து வறிய விவசாய மக்களின் நிலப்பிரச்சினை சம்பந்தமான எந்தவொரு தீர்வையும் இதுவரை முன்வைக்கவில்லை... மாறாக நகரம்சார் மேல் மத்தியதர வர்க்கத்தினர் முகங்கொடுத்து வரும் கல்விசார் தரப்படுத்தலையும் மொழிப் பிரச்சினையையுமே எமது தமிழ் தேசியம் தொடர்ந்தும் முதன்மைப்படுத்தி வருகின்றது. இப்படியான ஒரு சூழலில் தேசப்பற்றும் இனப்பற்றும் தமிழ் தேசியம் மீதான பற்றும் உணர்வுபூர்வமாக இல்லாத வெறும் மொழிப் பிரச்சினையையும் தரப்படுத்தலையும் மட்டும் முதன்மைப் படுத்திப் போராடும் ஒரு தேசிய இனத்தின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு சாத்தியப்படும்.

தமிழ் மண்ணில் வாழ்ந்துவரும் பெரும்பான்மை மக்களான கிராமத்து விவசாய மக்களின் தேசியம்மீதான பற்றையும் இனப்பற்றையும் அந்த மக்களின் மனங்களிலே வலுப்படுத்தும் பிரதான காரணிகளாக இருக்கும் அவர்களது நிலம் சார்ந்த உரிமையையும் தொழில் வளங்களையும் இல்லாமல் செய்துவிட்டுத் தமது சொந்த நலன்களிற்காக இனப் பிரச்சினைக்கான தீர்வைச் சாத்தியமற்ற தாக்கிவரும் தமிழ் மேட்டுக்குடியினரே தமிழ் தேசியத்தின் உண்மையான எதிரிகளாக உள்ளார்கள். இவ்வாறு தமிழ் தேசியவாதத்தினதும் தமிழ் மக்களினதும் எதிரிகளே தமிழ் தேசியவாதத்தினதும் தமிழ் மக்களினதும் தலைவர்களாக இருக்கும்வரை தமிழ்பேசும் மக்களது வாழ்வு பெரும் அழிவுகளை நோக்கியே சென்றுகொண்டிருக்கும் என்பதற்கு தமிழ் மக்களின் கடந்தகால வரலாறே சாட்சியாக எம்முன் உள்ளது.

எனவே தமிழ்பேசும் மக்களின் சுபீட்சமான கலாசாரப் பண்பாட்டு வாழ்வையும் அவர்களது •பொருளாதார அபிவிருத்தியையும் உறுதிப்படுத்தி அவர்களது சுதந்திரமான வாழ்வை நாம் கட்டியெழுப்ப வேண்டுமெனில் தமிழ்பேசும் மக்களின் அரசியல் கொள்கையிலும் அவர்கள் பின்பற்றிவரும் அரசியல் வழியிலும் உடனடியாக ஒரு மாற்றத்தை நாம் கொண்டுவரவேண்டும். அந்த மாற்றமானது கிராமத்து வறிய விவசாய கூலி மக்களது பிரச்சினைகளையும் அடிப்படையாகக்கொண்டதாக அந்த மக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்புடன் ஏற்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு நோக்கி நாம் செல்லமுடியும். அதற்காக கிராமத்து மக்களை நாம் உடனடியாக சமூக அரசியல் மயப்படுத்தவேண்டும். அந்த மகத்தான பணிக்கா... தமிழ்பேசும் மக்களது சுதந்திரமான எதிர்கால வாழ்வை இலட்சியமாகக் கொண்ட சமூகவியலாளர்களும், அரசியலாளர்களும் உடனடியாக கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும். கிராமங்களில் செயற்பட்டுவரும் அமைப்புக்களைப் பலப்படுத்தி அந்த மக்கள் அமைப்புக்கள்மூலம் கிராமங்கள் தோறும் கிராம இராச்சியங்களை தோற்றுவிக்கவேண்டும்.

கிராமங்களோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தவர்கள் இன்றைய கிராமங்கள் பொருளாதார ரீதியில் ஓர் சுபீட்சமான வாழ்வை வாழ்ந்துகொண்டு இருப்பதாக கருதுகின்றார்கள். உண்மையிலேயே இன்றைய கிராமங்கள் ஒரு சுபீட்சமான பொருளாதார வாழ்வைப் பெற்றுள்ளதா...? இன்றைய கிராமங்களின் பொருளாதார சமூக அரசியல் சூழல் எப்படி உள்ளது என்பதை தனித்தனிக் கிராம ஆய்வின்மூலம் இனி நாம் பார்ப்போம்.

**(தொடரும்)**



**தமிழ் மண்ணில் வாழ்ந்துவரும் பெரும்பான்மை மக்களான கிராமத்து விவசாய மக்களின் தேசியம்மீதான பற்றையும் இனப்பற்றையும் அந்த மக்களின் மனங்களிலே வலுப்படுத்தும் பிரதான காரணிகளாக இருக்கும் அவர்களது நிலம் சார்ந்த உரிமையையும் தொழில் வளங்களையும் இல்லாமல் செய்துவிட்டுத் தமது சொந்த நலன்களிற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வைச் சாத்தியமற்ற தாக்கிவரும் தமிழ் மேட்டுக்குழயினரே தமிழ் தேசியத்தின் உண்மையான எதிரிகளாக உள்ளார்கள். இவ்வாறு தமிழ் தேசியவாதத்தினதும் தமிழ் மக்களினதும் எதிரிகளே தமிழ் தேசியவாதத்தினதும் தமிழ் மக்களினதும் தலைவர்களாக இருக்கும்வரை தமிழ் பேசும் மக்களது வாழ்வு பெரும் அழிவுகளை நோக்கியே சென்றுகொண்ழருக்கும் என்பதற்கு தமிழ் மக்களின் கடந்தகால வரலாறே சாட்சியாக எம்முன் உள்ளது.**

தங்கன்

வாரமொரு சிந்தனை

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# கால்நடை வளர்ப்போம் பொருளாதாரம் பெருக்குவோம்!



நாளுக்கு நாள் பருவகாலம் மாறிவருகிறது. மழையின் அளவும் குறைந்துவருகிறது. இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் கவனத்தில்கொண்டு விவசாயிகள் நடந்துகொண்டதால்தான் வேளாண்மை அடிப்படையிலான பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும்.

ஆற்றில் தண்ணீர் வரட்டும், குளத்தில் நீர் நிறையட்டும் என்பது இன்றைய சூழ்நிலைக்கு ஒத்துவராது. அதோடு பெய்யும் மழைத்தண்ணீரைச் சொட்டுநீர்கூட வீணாகாமல் சேகரிக்கும் மனப்பான்மை தேவை.

நிலத்தில் புல், பூண்டு முளைத்து வளர்ந்து மூடியுள்ள இடங்கள் மழைநீரை மிக மந்தகதியில் தத்திர்ச் செல்லும். காடு அடர்ந்த நிலத்து மண், தன்மேல் விழும் நீரைக் கடற்பஞ்சுபோல் உறிஞ்சித் தேக்கி நிறுத்திக்கொள்ளும். நமது நீர்நிலைகளைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

சில கிராமிய அமைப்புக்கள் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி காய்கறி வகைகளைப் பயிரிடுவதற்கு முயற்சி செய்துவருகின்றன. இது போற்றப்படவேண்டிய விடயமாகும். இத்தகைய உயிரூட்டும்; செயல்களுக்கு பொது அமைப்புக்கள் ஊக்கமளிக்கவேண்டும். இயற்கை வேளாண்மை என்பது காலத்தின் கட்டாயதேவையாகும். அதிகளவு செயற்கை உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் ஏற்படுத்தும் விளைவுகள் அதிகமாகும். இதிலிருந்து மனித இனத்தைப் பாதுகாக்கவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியிருக்கிறோம்.

இயற்கை உரவிவசாயத்திற்கு அரச உதவி அவசியமாகும். விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல் என்பவற்றுக்கு தகுந்த முறையில் திட்டங்கள் வகுக்கப்படுதல் அவசியமாகும். எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள் விரைவாக அழுகிவிடுவதைக் காண்கிறோம். சந்தைப் பகுதிகளில் அழுகிக்கொட்டப்படும் காய்கறிகள், பழங்கள் எவ்வளவு என்று பாருங்கள்? இவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கான வசதிகள் இல்லை. நெல்லைக்கூடப் பாதுகாத்து வைக்க முடியாத தன்மையைக் காண்கிறோம்.

விவசாயத்தைப் பன்முகமாகச் செய்தால்தான், நெல், பழமரங்கள், தென்னை, காய்கறிகள் என்று நிலத்தைப் பிரித்துச் சாகுபடி செய்தால்தான் ஆண்டுமுழுவதும் வருமானம் வரும். வேளாண்மைத் தொழில் எல்லாத் தொழிலையும்விடச் சிறந்தது. சுதந்திரமானது, நிலையானது. வேலைதேடிப் போகவேண்டாம்! இளைஞர்களே வேளாண்மையில் ஈடுபடுங்கள்.

மனிதவாழ்க்கையில் கால்நடைகள் வகிக்கும் பங்கு மிகவும் பெரியது ஆகும். மனிதனுக்கு உற்ற தோழமையாக வளர்ந்து வாழ்ந்து அவனுக்கு ஊட்டம் தருவனவாகவும், ஆக்கம்தருவனவாகவும் விளங்கும் பெருமை கால்நடைகளுக்கு உண்டு.

மனிதனின் இன்றியமையாத் தேவைகளாகிய உணவு, உடை, களிப்பு, மகிழ்ச்சி, காவல் என துறை தோறும் கால்நடைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுவந்துள்ளன. பெற்றும்விடுகின்றன. விவசாயத் தொழிலுக்கும் கால்நடைகள் தேவை. நிலத்திற்கு வளம்காக்கும் தொழ உரஉற்பத்திற்கும் கால்நடைகள் மிகவும் தேவை மட்டுமல்ல. இன்றியமையாதவை ஆகும். கால்நடைகள் இல்லையேல் விவசாயம் இல்லை; உணவு இல்லை; ஏன் மனிதகுல வாழ்க்கையின் ஆதாரமே கால்நடைகள் என்றால் மிகையாகாது. அதனாலேயே செல்வத்திற்கு 'மாடு' என்று பெயர் சூட்டியது வள்ளுவம்.

தமிழர் அகத்திணை வாழ்விலும் கூட ஏறு தழுவுதல் என்ற துறை அமைந்துள்ளது. தொன்மையான சிவநெறியில் எருது சிறப்பான இடத்தை, சிவபெருமானுக்கு ஊர்தியாகவும் உயர்த்திப்பிடிக்கும் கொடியாகவும், சிறப்பிக்கப்பெறுகிறது. தைத் திங்களில் பொங்கலின்போது, மாட்டுப் பொங்கலும் உண்டு.

கால்நடைகளின் தோல், தோல் அடிப்படையிலான பொருட்கள் ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலவாணியை சில நாடுகள் அதிகளவில் பெறுகின்றன. நிலங்களில் பண்பயிர்கள் சாகுபடிசெய்து அடையும் இலாபத்தைவிட கால்நடைகளுக்கான தீவனப்புல் வளர்த்து, கால்நடைகளையும் வளர்த்தால் அதிக இலாபம் கிடைக்கும்.

நாட்டினை வளப்படுத்தும் பாதையில் பலதரப்பட்ட தொழில்கள் இருந்தாலும் விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களும்தான் இன்னும் முன்னணியில் உள்ளன என்பதை மறக்கலாகாது. நமது நாட்டு மக்களுக்கு - விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு அறிவியல்சார்ந்த தொழில் என்பதை உணர்த்தவேண்டும். கால்நடைகளை அறிவியல்சார்ந்த



வகையில் வளர்க்காவிடில் போதிய பயன்தராது. வருவாயும் தராது.

பழங்காலத்தில் கால்நடை வளர்ப்பு, வேளாண்மையில் துணைத் தொழிலாகவே இருந்துவந்துள்ளது. ஆனால் இன்று, கால்நடை வளர்ப்பு, வியாபாரநோக்கத்துடன் கூடிய ஒரு தொழில் என்ற நிலைக்கு வளர்ந்து விட்டது. கால்நடைகளில் கலப்பினம், கால்நடை வளர்ப்பில் புதிய நெறி-முறைகள் - உத்திகள் - நோய்த்தடுப்பு முறை, கால்நடை அடிப்படையிலான புதிய புதிய தொழில்கள் ஆகியன நாளுக்கு நாள் வளர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இனிமேலும் வளரும்.

அறிவியல்சார்ந்த முறைகள் பேணப்படுமாயின் பால் உற்பத்தி, கோழிப் பண்ணை வளர்ப்புத் தொழிலால் இறைச்சிக் கோழியும் முட்டையும் தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி நகரமுடியும். முயற்சி, ஊக்கம் இல்லாமல் இருப்பதே நமது பின்னடைவுக்கு காரணமாகும். கொழும்பில் இருந்து இறைச்சிக்கோழியும், முட்டையும் தினமும் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருக்கிறது. கொழும்பு முதலாளிக்குச் செல்கிறது. இக்கருத்து இனவாதமல்ல. நமது பகுதியைத் தன்னறைவு அடையச் செய்ய வேண்டும் என்பதே ஆகும்.

பண்ணைகளில் வளர்க்க, பசுக்கள் சிறந்தவையா, எருமைகள் சிறந்தவையா? கணக்கின்படி பார்த்தால் பசுவைவிட எருமை அதிக பால் கறக்கிறது. பசுவின் பாலில் உள்ளதைவிட எருமைப்பாலில் இரண்டு மடங்கு வெண்ணெய் அதிகமாக இருக்கிறது. பண-வருவாயை நோக்கின் பசுவை விட எருமைதான் நல்லது. ஆனால் பசு தூய்மையாக இருக்கும். எருமை அசுத்தமானது. எருமைகள் வளர்ப்பால் நோய் பரவுவதற்குரிய வாய்ப்புகள் மிகுதி, மக்களின் நீண்ட நெடிய நல்வாழ்வு நோக்கில் பசுமாடுகள் வளர்ப்பே நல்லது.

இஸ்ரேல் போன்ற நாடுகளில் அறுபது லீற்றர் பால்வரை ஒரு மாடு கறக்கிறது. இது நமக்கு ஆச்சரியமானது. நமது நாட்டிலும் பழையகாலத்தில் குடத்தில் பால்கறந்ததாக ஆண்டாள் நாச்சியார் கூறுகின்றார். இப்போது நாம் செம்புகளில் பால் கறக்கிறோம். பால் மாட்டு வளர்ப்பு மிகவும் பொருளாதார அம்சம் உடையது. ஒரு பசுவின் கறவை மறவைக் காலம். அதாவது ஒரு கன்றுஈனுவதற்கும் அடுத்த கன்று ஈனுவதற்கும் உள்ள கால இடைவெளி குறையவேண்டும். சராசரி, ஓர் ஆண்டுக்கு ஒரு கன்று ஈனுதல் வேண்டும். நாட்டுப் பசுக்களைவிட, கலப்பினப் பசுக்கள் இளம்வயதிலேயே பருவம் அடைந்துவிடும். கலப்பினப் பசுக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்று ஈனும். ஆனால் நாட்டுப் பசுக்களைவிட, கலப்பினப் பசுக்கள் அதிகப்படியான கன்றுகளை ஈனுகின்றன. கலப்பினப் பசுக்கள் கன்று ஈன்று மூன்றாவது மாதத்திலேயே சினைப்பட்டுவிடுவதால் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்று ஈனுகிறது. அதிகமான கன்றுகளை ஈனுவதோடு மட்டுமின்றி அதிக மான பாலையும் கறந்துதருகின்றன.

ஆதலால், வளர்ப்புக்கு பொருளாதார ரீதியில் கலப்பினக் கால்நடைகளே நல்லது. கலப்பின மாடுகளைப் பராமரிக்க அதிக கவனம், அக்கறையும், முயற்சியும் தேவை. பயனை நோக்கும்போது இது பெரிதல்ல.

(தொடரும்...)




## ஷம்புவில் இரசாயனங்கள் உண்டா?

மிகுந்த வாசனையுடன், விலை குறைவில் இருக்கும் ஷம்புவில் தலைமுடிக்கு கேடுவிளைவிக்கும் ஏராளமான இரசாயனங்கள் இருக்கும். ஒவ்வொருவரும் நாம் பயன்படுத்தும் ஷம்புவில் உள்ள தீங்குவிளைவிக்கும் இரசாயனங்கள் குறித்து தெரிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம்.

மேலும் எப்போதும் ஷம்புவைத் தேர்ந்தெடுக்கும் போது, அதில் உள்ள இரசாயனங்களை முதலில் படித்து பார்க்கவேண்டியதும் முக்கியம்.

ஷம்புவில் கலக்கப்படும் இரசாயனங்கள் குறித்து பார்க்கலாம். அந்த இரசாயனங்கள் உங்கள் ஷம்புவில் இருந்தால், உடனே அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துவிடுவது நல்லது.

* ஷம்புக்களால் தலைமுடி உதிர்வதற்கு முக்கிய காரணம், அதில் உள்ள சல்பேட்தான். பெரும்பாலான விலைகுறைவான ஷம்புக்களில் அம்மோனியம் லோரில் சல்பேட் மற்றும் சோடியம் லோரில் சல்பேட்டுக்கள் இருக்கும். இந்த இரசாயனங்கள் மயிர்க்கால்களைப் பாதித்து, முடி உதிர்தலுக்கு வழிவகுக்கும்.

* பலரும் பேபி ஷம்புக்கள் தலைமுடிக்கு நல்லது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் அதில் ஃபார்மால்டிஹைட் என்னும் டி.என்.ஏ -வைப் பாதிக்கும் மற்றும் தலைமுடி உதிர்வை ஏற்படுத்தும் பொருள் இருக்கும். ஏனெனில் இது விலைகுறைவான பதப்படுத்தும் இரசாயனங்கள் என்பதால் பெரும்பாலான ஷம்புக்கள் மற்றும் கண்டிஷனர்களில் இருக்கும். எனவே கவனமாக இருங்கள்.

## உண்மை காதல் எப்போது ஆரம்பிக்கும்?

நீங்கள் மற்றவருக்காக வாழும் வாழ்க்கை உங்கள் திருமணத்தில் ஆரம்பித்து, உங்கள் குழந்தைகளின் திருமணத்தில் முடிவடைகிறது.

எப்படியும் இந்த பொறுப்பை எல்லாம் முடிப்பதற்கு ஐம்பது, அறுவது வயது முடிந்துவிடும். ஐம்பதுகளில் தான் ஒரு தம்பதியின் உண்மையான காதல் வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

உடல் உறவுகள் இன்றி, மனதின் இணைப்பு மட்டுமே வலுவாய் இருக்கும் தருணம் அது.

முழுக்க, முழுக்க ஒருவருக்கு ஒருவர் என்பதை நீங்கள் உணர்ந்து வாழும் நேரமும் இது தான். ஐம்பதிகளில் வரும் காதலில் சகிப்புத்தன்மையும், வாழ்க்கையின் முதிர்ச்சியும், முழுஅறிதலும் இருக்கும். எந்தவகையான குழப்பமாக இருந்தாலும் அதற்கான தீர்வு, ஐம்பதுகளில் வாழும் தம்பதியிடம் இருக்கும்.

கணவன் - மனைவி ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருக்கவேண்டும் என்பார்கள். ஆனால், உண்மையில் ஐம்பதுகளில்தான் நீங்கள் உறுதியான துணையாய் அறிவீர்கள். முழுக்க, முழுக்க உங்களுக்கு அவர், அவருக்கு நீங்கள் என்று நீங்கள் வாழும் நாட்கள் அவை.

சிலர் பேரன், பேத்தி எடுத்து



கொஞ்சிக்கொண்டிருப்பார்கள், சிலர் பேரன், பேதியை எதிர்பார்த்து இருப்பர்கள். குழந்தையை வளர்ப்பதோடு, பேரனை வளர்ப்பதில் இருக்கும் அந்த இன்பமும், மகிழ்ச்சியும் கடலைவிடவும் பெரியது.


அனைத்து பொறுப்புகளையும் முடித்துவிட்டு ஐம்பது, அறுபதுகளில் நீங்கள் வாழ்க்கையை வேறு கோணத்தில் பார்க்க ஆரம்பிக்கும் அந்த நேரம்தான் உண்மையான் ஓய்வு.

இந்த காலத்தில் ஐம்பது, அறுவதுகள் நோய்களுக்கான வயதாகிவிட்டது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். அந்தவகையில் நோயற்ற ஐம்பது, அறுபதுகள் தான் உங்கள் வாழ்க்கையின் உண்மையான பொன்னான நேரம்.

இந்த காலகட்டத்தில் தான் தம்பதிக்குள் ஒற்றுமையும், பாசமும் அதிகரிக்கும். திருமணம் நடந்ததில் இருந்து இந்த காலகட்டம்வரை மனைவி தனக்குச் செய்த பணி விடைகளையும், அர்ப்பணிப்பையும், சகிப்புத்தன்மையையும் நினைத்து ஐம்பதுகளில் மனைவிக்கு பணிவிடை செய்யவேண்டும் என்ற எண்ணமும், அன்பும் அதிகரிக்கும்.

# இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்

### வெளியீடு 08



# இருமுனை நெருக்கடிக்குப் பதில் தேடும் அரசு!

இத்தகையதோர் இழுபறிநிலையில் தான், இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திரமோடியைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புதுடில்லிக்குச் சென்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்திவிட்டுத் திரும்பியிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் கடந்த 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது அரசியல் திருத்தத்திற்கு அமைவாக அதற்கு அப்பால் சென்று அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்விதத்தில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்திய அரசு கூறியிருக்கின்றது. இது விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேசியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

ஆனால் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்தியாவின் கைகளைம-ீறி, இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்பட்டிருந்தது. ஆயினும் அந்த முயற்சிகளில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஒரு அரசியல் சமரசத்தை ஏற்படுத்தி ஓர் அரசியல் தீர்வைநோக்கி இரு தரப்பினரையும் முன்நகர்த்திச் செல்வதற்கு நோர்வேயினால் முடியாமல் போய் விட்டது. அந்த முயற்சி தோல்வியில் முடிந்ததுடன், இராணுவ நடவடிக்கை களைத் தீவிரப்படுத்திய அரசு புலிகளையும் தோற்கடித்து வெற்றிவாகை சூடியது.

இப்போது யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் புதிய இந்தியப் பிரதமர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இலங்கைக்கு அழுத்தங்களைக்கொடுத்து, அரசாங்கத்-தையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு நகர்த்திச் செல்வாரா என்று அரசியல் வட்டாரங்களில் வினா எழுப்பப்பட்டிருக்கின்றது.

### இந்திய விஜயம் ஏற்படுத்தியுள்ள பரபரப்பு

இந்திய அரசாங்கத்துடன் பேச்-சுக்கள் நடத்துவதற்காகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புதுடில்லிக்கு மேற்கொண்டு இருந்த விஜயம் அரசாங்க வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காகவே கூட்டமைப்பினர் அங்கு செல்-கின்றார்கள் என்றவாறெல்லாம், அரச ஆதரவு தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்தியாவினால் இலங்கை அரசுக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது. அவ்வாறு வருவது என்பது இறைமையுள்ள இலங்கை அரசின் உள்விவகாரங்களில் இந்தியா மேற்கொள் கின்ற அத்துமீறிய தலையீடாகவே இருக்கும். அதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்திய விஜயமானது, ஒரு வெற்றிகரமான விஜயம் என்றே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை-களின்போது என்ன நடந்தது, அரசாங்-கத்தின் அணுகுமுறை எப்படி இருந்தது, இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் தற்போது நாட்டில் உள்ள உண்மையான நிலைமை என்ன, யுத்தத்தின் பின்னர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்ற நிலைமைகள் எப்படி இருக்கின்றன.

மீள்குடியேற்றப் பகுதிகளில் இடம்-பெற்றுவருகின்ற அரசாங்கத்தின் அத்து மீறல் நடவடிக்கைகள் என்ன, அங்கு நிரந்தரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் பொதுமக்களின் காணி-களை அபகரிப்பது உட்பட என்னென்ன செய்கின்றார்கள் என்பதுபோன்ற பல்வேறு விடயங்களை இந்திய அரசுக்கு, தாங்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியிருப்-பதாகவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவற்றை உன்னிப்பாகவும், ஆர்வ-மாகவும் கேட்டு அறிந்துகொண்டதாகவும் கூட்டமைப்பினர் கூறியுள்ளனர்.

அத்துடன் இலங்கையில் தமிழ் மக்க-ளுடைய நிலைமைகளை நேரில் கண்டறி வதற்காக ஒரு தூதுக்குழுவை அனுப்பி வைக்கவேண்டும், விசேட தூதுவர் ஒருவரையும் நியமிக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரிடம் கோரியிருந்தார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, பிரதமர் நரேந்திர மோடி கைகட்டிய வண்ணம் அமர்ந்திருந்ததை, இலங்கை விவகாரத்தில் அவர் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்ற குறியீடாகக்கூட ஊடகங்கள் வர்ணித்திருந்தன.

கூட்டமைப்பினர் கூறியவற்றைச் செவிமடுத்த இந்தியப் பிரதமர் விசேட தூதுவர் ஒருவர் நியமிக்கவேண்டிய அவசியம் இல்லையென்றும், இலங்கைக் கான தூதுவருக்கு ஏற்கனவே அத்தகைய அதிகாரம் இருப்பதாகவும் கூறியிருந்தார். அதேநேரம், இந்திய அரசின் தூதுக்குழு வொன்று இலங்கைக்கு அனுப்பிவைக்கப் படுவதையும் அவர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய தூதுக்குழு மறுதலையான நிலைமை களை ஏற்படுத்தக்கூடும் என்பதை காட்டியிருந்தார்.

இருந்தபோதிலும், இந்தியா - இலங்கை யின் இனப்பிரச்சினையில் ஏதாவது ஒரு நடவடிக்கைய அர்த்தமுள்ளவகையில் மேற்கொள்ளவேண்டிய ஒரு கட்டாய சூழலிலேயே இருக்கின்றது.

ஏனெனில் இந்தியாவின் பரிந்துரையில் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்திற்கமைவாக, இலங்கையின் அரசியலமைப்பில் இருக்கின்ற, வடமாகாண சபைக்கான அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமுடியாது என்று இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றது.


அதுமட்டுமல்லாமல், வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் குறிப்பிட்டிருப்பதுபோன்று, இருக்கின்ற அதிகாரங்களையும் மத்திய அரசாங்கத்திடமே கொண்டு சென்று குவிப்பதற்கான நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது.

அதிகாரங்களை மாகாண சபைக்கு இல்லாமல் செய்வது மட்டுமல்லாமல், மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக்கூட அரசாங்கம் திவிநெகும போன்ற விசேட வேலைத்திட்ட சட்டத்தின் ஊடாக சுரண்டிவருகின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்தியப் பிரதமர், இனப்பிரச்சினை விவகாரத்தில், இலங்கை அரசாங்கத்தை எந்தவகையில் கையாளப் போகின்றது என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

(தொடரும்)



# பாப்பா முரசு



## சிறுவர் கதை

அக்பர் சக்ரவர்த்தி தனது அவையிலே அமர்ந்திருந்தார். சபையில் அமர்ந்திருந்த அறிஞர்களை நோக்கி, "அறிஞர் பெருமக்களே! நான் பெரியவனா, கடவுள் பெரியவரா? என்ற ஐயம் என்மனதில் எழுந்துள்ளது. இந்த வினாவுக்குத் தக்க காரணத்துடன் பதில் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

அக்பரைவிட கடவுள் பெரியவர் என்பதை சொல்லவே தேவையில்லை. ஆனால் அரசர் கோபித்துக்கொள்வாரே என எண்ணி மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

## வாரம் ஒரு திருக்குறள்



### அறிவுடைமை

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்."**

வருமுன் அறிந்து காத்துக்கொள்ளும் திறனுடையவர்களுக்கு அதிர்ச்சிதரக்கூடிய துன்பம் ஏற்படாது.

குறள் : 429



# யார் பெரியவர்?

மதிநுட்பம் வாய்ந்த அறிஞரான பீர்பால் எழுந்து நின்றார்.

"உமது கருத்து என்ன?" என அக்பர் கேட்டார்.

"மன்னர் பெருமானே, இந்த விஷயத்தில் சந்தேகத்துக்கு என்ன இடம் இருக்கிறது? கடவுளை விடத் தாங்கள்தானே பெரியவர்?" என்று கேட்டார் பீர்பால். அக்பருக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

"மதியூகி பீர்பாலே, உமது கூற்றைத் தக்க காரணத்துடன் விளக்கும்..." என்றார் அக்பர்.

"சக்ரவர்த்தி அவர்களே, என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே என்னை நாடு கடத்திவிடத் தங்களால் முடியும்! ஆனால் கடவுளுக்கு என்னைப் பிடிக்காவிட்டாலும் என்னை நாடு கடத்த முடியாது" என்றார் பீர்பால்.

"எப்படி?" என்று வினவினார் அக்பர்.

"உங்கள் ஆட்சிக்குள் இருக்கும் பகுதிகள் ஓரளவுக்குத்தான்! அதனால் உங்களுக்குப் பிடிக்காதவரை அடுத்த நாட்டுக்கு விரட்டியடித்து விடலாம். ஆனால் கடவுளுடைய ஆளுகையோ பூமியில் மட்டுமன்றி அண்டசராசரங்களிலும் பரவியிருக்கின்றது. ஆகவே அவர் எவ்வாறு ஒருவனை நாடு கடத்த முடியும்? ஒருவனை கடவுள் எங்கே விரட்டியடித்தாலும் அவன் கடவுளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில்தானே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க முடியும்?" என்று கேட்டார் பீர்பால்.

பீர்பால் தனக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டார் என்பதை அக்பர் உணர்ந்தார். இருந்தாலும் பீர்பாலின் கூற்றிலுள்ள உண்மையை உணர்ந்து அவருக்குப் பரிசுகளை அளித்தார்.

## இந்திய வரலாற்றில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள்

கி.மு 3102 - கலியுகம் ஆரம்பம்
கி.மு 3000 - சிந்து சமவெளி நாகரிகம் (மொஹஞ்சதாரோ-ஹரப்பா)
கி.மு 2500 - வேதங்கள் இயற்றப்படுதல்
கி.மு 2000 - ஆரியர் வருகை
கி.மு 0800 - இதிகாசங்கள், உபநிஷத்துக்கள் இயற்றப்படுதல்
கி.மு 0567 - கௌதம புத்தர் பிறப்பு
கி.மு 0550 - மகாவீரர் பிறப்பு
கி.மு 0480 - புத்தர் நிர்வாணம் அடைதல்
கி.மு 0327 - மாவீரர் அலெக்சாண்டர் படையெடுப்பு
ஜீலம் நதிக்கரையில் போரஸ் தோல்வி
கி.மு 0321 - சந்திர குப்த மௌரியர் ஆட்சிக்கு வருதல்
சாணக்கியர் அர்த்த சாஸ்திரம் எழுதுதல்
கி.மு 0305 - செல்யூகஸ் படையெடுப்பு
கி.மு 0303 - கிரேக்க தூதர் மெகஸ்தனிஸ் வருகை
கி.மு 0273 - அசோகர் ஆட்சிக்கு வருதல்
கி.மு 0261 - கலிங்கப் போர் - அசோகர் மனமாற்றம்
கி.மு 0185 - புஷ்ய மித்திர சுங்கன் ஆட்சி
கி.மு 0145 - சோழ மன்னன் ஏராளன் இலங்கையைக்
கைப்பற்றுதல் - கலிங்கத்தில் காரவேலர் அரசு
கி.மு 0058 - விக்கிரம சகாப்தம் தொடக்கம்

## அதிரடி ஐயாத்துரை



* கம்பனுக்கு புகழ்பாடும் கழகத்தின்ர 'பேச்சாளர்' கொழும்பில இருந்து வடமாகாண 'விக்கினவிநாயகனுக்கு' அடிக்க வெளிக்கிட அதுக்கு சரமாரியாக பதில்களும் வந்திருக்கெல்லோ. அரசியல் இல்லையெண்டு 'புதிய பேரவையினர்' சொன்னாலும் அப்ப இது என்ன? அரசியலில இது சகஜமப்பா!

* யாழ்ப்பாண பெரிய 'ஏஜெண்டு'க்கு இப்ப 'ஏழரைச்சனி' போல. மனிசன் புதுவருசத்தில 'கூட்டம்' ஒண்டு கூடுவம் எண்டு வெளிக்கிடுது. உதில தங்களை மதிக்காம கூட்டம் நடத்தினா 'தக்கன்ர' யாகம்போல ஆக்குவம் எண்டு இவர் 'சிவாஜியர்' வேற சொல்லுறார். அப்ப 'அடிபாட்டுப் படம்' ஒண்டு ஓடப்போகுது கண்டியளோ!

* 'கூத்தாடித்தலைவர்' கொழும்பில வைச்சு 'தேவாரம்' பாடியும் வடமாகாண 'விக்கினவிநாயகன்' மசியேல்லை பாருங்கோ. மனிசன் 'கூத்தாடி'களுக்கு கூத்துக்காட்டுறதுக்கு வெளிக்கிட்டது வடிவாய்த் தெரியுது. கூத்தாடியள் கூட்டத்தில இருந்து 'சித்தரும்' கழண்டு 'விக்கினவிநாயகன்' பக்கமெல்லோ வந்திட்டார். அடுத்தது யார் 'அடைக்கலம்' புகப்போகிறாரோ தெரியேல்லை.

* யாழ்ப்பாணத்தின்ர பெரிய 'ஆம்பிளை சைவப் பள்ளிக்கூடத்தில' அதிபர் தரத்தை சேர்ந்த கொஞ்சப்பேருக்கு இடமாற்றம் வந்ததெல்லோ. அதில 'மலமானவர்' பிடிக்கிறவையை பிடிச்சு இடமாற்றத்தை நிப்பாட்ட முயற்சி எண்டு தகவல். எல்லாம் 'அட்மிசன் காசு' செய்யிற வேலை.

* இலங்கையில 'சைவத்தை' வளக்கிறதுக்கு 'செட்டிமார்' தோற்றுவித்த சபை ஒண்டு யாழ்ப்பாணத்தில இருக்குதெல்லோ. உந்தச் சபை இவங்கள் பள்ளிக்கூடப் பெடியளுக்கு 'சைவச் சோதனை' வைச்சு 'மட்டையள்' எல்லாம் கொடுக்கிறது. இப்ப சோதனையும் அவுட். மட்டையும் அவுட். உதுக்கெல்லாம் காரணம் யார் தெரியுமோ? இயங்காத 'வசந்தமான அப்புக்காத்துத்தான்.'

* ஜனவரியில கொழும்பில 'கபினெற்' மாற்றம் எண்டு அரசல்புரசலாய் கதைவருகுதுங்க. உது ஒரு கதையே? 'திரியரும்' 'சிங்கத்தாரும்' போட்டிக்கெல்லோ நிரப்பித் தள்ளீனம். இதைப்போல எங்கட வடக்கு 'கபினெற்றிலையும்' மாற்றம் வருகுதெண்டு 'கைதடிப்' பக்கமாய் சத்தங்கள் கேட்குதுங்க. வடக்கின் 'விக்கினவிநாயகன' தவிர மற்ற 'நாலுபேரும்' அவுட்! 'கல்வி - அரியம்', 'சுகாதாரம் - குணம்', 'மீன்பிடி - அந்தோனி', 'விவசாயம்- சசி" எண்டெல்லாம் பட்டியலே போட்டுட்டாங்க. இதிலையும் 'மொனிற்றர் ஞானத்தார்' அவுட்டா?

* சகோதர மொழிக்காரர்கள் 'வில்பத்து காட்டை' வைச்சு அரசியல் விளையாட்டு காட்ட வெளிக்கிட்டிட்டீனம். இதில 'ஊர்வலங்கள்' எல்லாம் நடந்திருக்கு. ரி.வியில 'விவாதங்கள்' வேற நடந்திருக்கு. உதுன்ர முடிவு என்னங்கோ? ஒரு 'கபினெற் அமைச்சற்ற' 'தொப்பி' பறக்கப் போகுது எண்டு தெற்குப் பக்கமாய் கதை வருகுது. பொங்கல் பரிசு யாருக்கு? இதுக்குள்ள மலையக 'சேவல் கட்சிக்காரர்' வேற ஓடித்திரியுறார். கிடைக்குமா?

* கல்வியதிகாரிகளில 'தரம் 2' இல 'சேவை மூப்பில' முன்னுக்கு நிக்கிற கன பேருக்கு வடமாகாணத்திலை உரிய பதவிகள் கொடுக்கப்படுறேல்லை. சேவை மூப்பில பின்னுக்கு நிக்கிற கனபேர் 'பிடிக்கிறவையை' பிடிச்சு பதவியளை எடுத்திட்டீனம். இதில பகிடி என்னெண்டால் சில அதிகாரிகள் எல்லாக் காலத்திலையும் சரியாகப் 'பிடிக்கினமாம்.' யாழ்ப்பாணத்தின்ர 'தலைப்பகுதியில' இருக்கிற அதிகாரியும் இதில விதிவிலக்கில்லை. உந்தப் பட்டியல் எல்லாம் 'கல்வி இராசகுலகுருவிட்ட' இல்லையோ? அல்லது அண்ணரையும் பிடிக்கிற மாதிரி பிடிச்சிட்டாங்களோ?

* எங்கட யாழ்ப்பாணத்து 'சிவில் அதிகாரியள்' எல்லாரும் 'இங்கிலிஷ்' எல்லோ படிக்க வெளிக்கிட்டுட்டீனம். ஏனெண்டு தெரியுமோ? கடைசியாய் இவையின்ர 'மொழி அறிவின்மை' பற்றி கிழிகிழி எண்டு எல்லோ கிழிச்சுப் போட்டாங்கள். உதில விசேஷம் என்னவெண்டால் சில அதிகாரியள் தங்கட 'சொந்தப் பிள்ளையளிட்டை' இங்கிலிஷ் படிக்கினமாம். 'கோபாலா' உண்மையாகவா? வாழ்க உன் இங்கிலிஷ்!

* பதவியில இல்லாட்டியும் சனம் தங்கடை குறையளை கொண்டுவந்து 'தியெட்டரில' எல்லோ கொட்டுது. இப்பவும் இரவு, பகலாய் வீணைக்கட்சி 'தேவர்' மக்களைச் சந்திக்கிறார். மக்கள் இவருக்கு வாக்களிக்காட்டியும் இவர் 'வாக்குறுதி' கொடுத்து நிறைவேற்றிவைக்கிறார். இப்பவும் மனிசனுக்கு செல்வாக்குத்தான். உவங்கள் 'கூத்தாடிகள்' எங்கையெண்டு மக்கள் தேடியெல்லோ திரியினம். பொறுங்கோ... 'தேர்தல்' வரும்... 'கூத்தும்' வரும்....

# வாராந்த செய்திக்கொத்து

## புங்குடுதீவு- அனலைதீவு இடையில் பயணித்த நோயாளர் காவு படகு கடலில் மூழ்கியது!



யாழ். புங்குடுதீவு - அனலைதீவு இடையே சேவையில் ஈடுபட்டிருந்த நோயாளர் காவு படகு கடலில்வீசிய காற்றின் காரணமாக கடலில் மூழ்கியது. வடமாகாண சுகாதார அமைச்சினால் யாழ். புங்குடுதீவு - அனலைதீவு இடையில் நோயாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு கடல்கொந்தளிப்பினால் கடலில் மூழ்கியுள்ளது.

## அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் நடுவில் கோத்தபாய



நீர்கொழும்பில் அமைக்கப்பட்ட 16ஆவது பெனடிக் கல்வி நிலையத் திறப்பு விழாவின்போது பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் கலந்துகொண்டமை அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

## உள்ளாடைகளை களைந்தெறியும் நிகழ்ச்சிகளுக்கு இனிமேல் இடமில்லை : ஜனாதிபதி திட்டவட்டம்



நாட்டின் கலாசாரம், நாகரிக வளர்ச்சியைச் சீரழிக்கும்வகையில், வெளிநாட்டுப் பாடகர்களை வரவழைத்து அநாகரிகமான இசைநிகழ்ச்சிகளை நடத்தும் ஏற்பாட்டாளர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

## ஜனவரி முதல் பொலித்தீன் பாவனைக்குத் தடை!



எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பொலித்தீன் பொதிகள், பைகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளை பயன்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் தடைசெய்யப்படவுள்ளது.

## வலிகாமம் வடக்கின் அபிவிருத்திக்கு ரூ.96 மில்லியன்



வலிகாமம் வடக்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் நெல்சிப் திட்டத்தின் ஊடாக 96 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. யுத்தம்காரணமாக 1990ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கிலிருந்து வெளியேறிய குடும்பங்கள் நலன்புரி நிலையங்கள், உறவினர்கள் வீடுகள் மற்றும் வாடகை வீடுகளில் வசித்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறைக் கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததில் இரு மீனவர்கள் சாவு!



பருத்தித்துறைக் கடற் பரப்பில் மீன்பிடிப்பதற்காகச் சென்றபோது படகு கவிழ்ந்ததில் இருமீனவர்கள் உயிரிழந்துள்ளனர். பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காக படகு ஒன்றில் மூன்று மீனவர்கள் புறப்பட்டுச் சென்றுள்ளனர். கடும்காற்றுடன்கூடிய மழை கடற்கொந்தளிப்புக் காரணமாக இவர்களின் படகு கவிழ்ந்துள்ளது. இதில் ஒருவர் கடல் அலையில் அடித்துச்செல்லப்பட்டார். ஒருவர் நீந்திக் கரைசேர்ந்தார். மற்றையவர் கடல் அலையில் அடித்துச் செல்லும்போது சகமீனவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

## புதிய ஆசிரியர் நியமனங்கள்



புதிய ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதன்போது தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள் 200 பேர், மேற்கத்தேய சங்கீத ஆசிரியர்கள் 70 பேர், விஞ்ஞானபீட ஆசிரியர்கள் 161 பேர் ஆகியோர்களுக்கே இவ்வாறு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

## உலகிலேயே அதிக எடை கொண்ட மனிதர் மரணமானார்



மெக்சிக்கோவில் சொனோரா மாகாணத்தை சேர்ந்தவர் ஆன்ரிஸ் மொரேனோ (வயது 38). 444 கிலோ எடை கொண்ட இவர், உலகிலேயே அதிக எடை கொண்டவராக கருதப்பட்டார். இவர், கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி உடல் எடையை குறைப்பதற்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அதன் பின்னர் அவர் 320 கிலோ ஆனார். சாப்பிடும் அளவைக்குறைக்க அறுவைச்சிகிச்சை செய்தனர். இது முடிந்து மொரேனோ இதுவரை நலமுடன் இருந்துவந்தார். கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று மூச்சுத்திணறலால் அவதிப்பட்டார். இதையடுத்து அவரை குடும்பத்தினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். ஆனால் செல்லும்வழியிலேயே மொரேனோ உயிரிழந்ததாக, அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## தூசுபடிந்த நீரை அடைத்துள்ள பெருமளவான குடிநீர் போதல்கள் மட்டக்களப்பில் கைப்பற்றப்பட்டது



மட்டக்களப்பு நகரில் தூசுகள் படிந்தநிலையில் அடைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான குடிநீர் போத்தல்களை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர். மட்டக்களப்பு திருமலை வீதியில் குடிநீர் போத்தல் விற்பனை நிலையத்தில் இருந்தே இந்த போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகரில் கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த குடிநீர் போத்தல் ஒன்றை பொதுமகன் ஒருவர் வாங்கிச்சென்று அருந்தியபோதே இது கண்டுபிடிக்கப்பட்டு வெட்டுக்காடு பொதுச்சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரவிராஜின் கொலையாளி பில் கிளிண்டனின் நண்பருக்கு தொடர்பா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலையுடன், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் நண்பர் ஒருவருக்கு தொடர்புள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது. பாபியன் ரோய்ஸ்டன் டௌசியன்கூ என்ற குறித்த நபர், அவுஸ்திரேலிய தனியார் நிறுவனமொன்றில் பணிப்பாளராக கடமையாற்றி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை பொலிஸார் அவுஸ்திரேலிய பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், எனினும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் குறித்த நபர் பற்றிய விபரங்கள் தெரியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழில் மீண்டும் வாள்வெட்டு



யாழ். அளவெட்டி பகுதியில் உள்ள வீடொன்றினுள் துப்பாக்கி சகிதம் உள்நுழைந்த ஆயுதக் குழு பெரும் அட்டகாசம் புரிந்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். அளவெட்டி ஜெயா பிறஸ் சந்திக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் ஞாயிறு இரவு 7.30 மணியளவில் துப்பாக்கி, வாள், இரும்பு கம்பிகள், பொல்லுகளுடன் நான்கு மோட்டார் சைக்கிளில் வந்திருந்த குழுவினர் உட்புகுந்து வீட்டு ஜன்னல் கண்ணாடிகள், வீட்டில் இருந்த பொருட்கள் மற்றும் வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஆகியவற்றை அடித்து நொருக்கியுள்ளனர். அதனால் அச்சமடைந்த வீட்டில் இருந்தவர்கள் அவலக்குரல் எழுப்பினர். அதையடுத்து அயலவர்கள் ஒன்றுகூட ஆயுத குழுக்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

## துமிந்த சில்வாவுக்கு அழைப்பாணை



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதவான் அழைப்பாணை அனுப்பியுள்ளார். 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தனது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வழங்காதமைக்கு எதிராக எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.


## தொலைபேசி ஊடாக மிரட்டி பணம் பறித்த பெண் கைது




தொலைபேசி ஊடாக மிரட்டல் விடுத்து பணம் பறித்த பெண் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்றைய தினம் மாளிகாவத்தை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

30 வயதான குறித்த பெண் மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் இவர் 30,000 ரூபாயை ஈசி காஸ் மூலம் தரும்படி நபர் ஒருவருக்கு மிரட்டல் விடுத்துள்ளதைத் தொடர்ந்தே குறித்த பெண்ணை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் மக்கள் பேரவையில் ஒரு போதும் இணையோம்! சம்பந்தன் தலைமையில் அரசியல் தீர்வை வென்றெடுப்போம்!- ரெலோ



பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

30 வயதான குறித்த பெண் மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ள பொலிஸார் இவர் 30,000 ரூபாயை ஈசி காஸ் மூலம் தரும்படி நபர் ஒருவருக்கு மிரட்டல் விடுத்துள்ளதைத் தொடர்ந்தே குறித்த பெண்ணை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த பெண்ணை கைது செய்யும்போது இவரிடம் 6 கையடக்கத் தொலைபேசிகளும், 30,550 ரூபாய் பணமும் இருந்ததாக தெரிவித்துள்ள பொலிஸார், இவரை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

## அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் நடுவில் கோத்தபாய



நீர்கொழும்பில் அமைக்கப்பட்ட 16ஆவது பெனடிக் கல்வி நிலையத் திறப்பு விழாவின்போது பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் கலந்துகொண்டமை அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. பல குற்றச்சாட்டுக்களில் தற்போதைய அரசாங்கத்தினால் விசாரணைக் குட்படுத்தப்பட்டு வரும்நிலையில், விசாரணைகள் முடிவடையாதநிலையில் அரசாங்கத்தின் முக்கிய நிகழ்வுக்கு கோத்தபாய அழைக்கப்பட்டமை அரசாங்கத்தின் நிழலில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பாதுகாக்கப்படுகின்றமை வெட்டவெளிச்சமாகின்றது.

## தந்திரத்தின்பின் முதல் தடவையாக இலங்கையின் யாப்பை தயாரிக்கும் தமிழ் கட்சிகள்!

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முதல் தடவையாக தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் பொதுஅமைப்புக்களும் இணைந்து இலங்கை நாட்டுக்கான அரசியல் யாப்பை உருவாக்குகின்றன என இந்திய நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. 1972ஆம் ஆண்டில் யாப்பில் உத்தியோகபூர்வ மொழி சரத்தை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நீக்கவில்லை. எனினும் 1978ஆம் ஆண்டு யாப்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா அதனை நீக்கினார். இந்தநிலையிலேயே தமக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்று கூறி தமிழர்கள் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்தனர்.

இதேவேளை இலங்கையின் புதிய அரசாங்கம் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதியன்று இலங்கைக்கான புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. இதில் இனப்பிரச்சினைக்கு தீர்வு விடயங்களும் உள்ளடக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம்



# மாரடைப்பு என்பது என்ன?

டாக்டர் எஸ்.தணிகாசலம்,
இயக்குநர், இதய மருத்துவத் துறை,

கடந்த 30 ஆண்டுகளாக இதய நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதயநோயில் மிகவும் முக்கியமானது இதய இரத்தநாளத்தில் பொதுவாகத் தென்படும் கொழுப்புப் படலம். இதன்காரணமாக நாளடைவில் இதய நாள இரத்தக் குழாய் (கரோனரி ஆர்ட்டரி) முழுவதுமாக அடைபட்டு மாரடைப்புவருவதற்குக் காரணமாகிறது.

**திடீர் நெஞ்சு வலி:**

இந்த வகையான இதய நோயினால் பாமர மக்களுக்கு பல்வேறு ஆபத்துகள் ஏற்படுகின்றன. சிலருக்கு கடந்த நிமிஷம்வரை ஒன்றுமே தோன்றாமல் திடீரென்று நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்பட்டு, பாதித்தவரை துடிதுடிக்கச் செய்கிறது. இதற்குக் காரணம் அடைபட்ட பகுதியைச் சார்ந்த இதயத்தசைக்கு இரத்த ஓட்டம்முழுவதுமாக தடைபடுவதால் நமது மூளை இந்த நிகழ்வை அறிந்து வலியாகத் தெரிவிக்கிறது.

**நீரிழிவு நோயாளியாக இருந்தால்...**

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இந்த வலிகூடத் தோன்றாது. நன்றாக இருந்தவருக்கு திடீரென்று மூச்சு வாங்கி வியர்த்துக்கொட்டுகிறது. அவர் முழுவதும் செயலிழந்து சாய்ந்து விடுகிறார். இது ஒரு மாதிரி.

சிலருக்கு திடீரென்று நெஞ்சுப் பகுதியில் வலி தோன்றுகிறது. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பே மரணமடைகிறார். மருத்துவத்தில் இதனை திடீர் மரணம் என்று கூறுகிறோம். இந்த வகையான மரணம் தோன்றுவதற்குக் காரணம் மிக அதிக வேகத்தோடு நாடித்துடிப்பு ஏற்பட்டு மூளைக்கும், இதயத்தசைக்கும் இரத்த ஓட்டம் தடைப்பட்டு தக்க முதலுதவி கிடைக்காவிட்டால் மரணம் ஏற்படுகிறது. தக்க உதவிகிடைத்தால் 50 சதவீத மக்களுக்கு மறுவாழ்வு கிடைக்கிறது. எனவே இந்த வகையான கொடிய இதயநோயிலிருந்து வருமுன் காத்தலே நல்லது.




# பதற்றமடைய வைக்கும் பருவ வயது

ஆண், பெண் இருபாலாருக்கும் உடல்ரீதியாக ஹோர்மோன் சுரப்பிகளில் ஏற்படும் மாற்றம்காரணமாக, பருவ வயதில் ஆண், பெண் இருவருமே பல உடல் மாற்றங்களைச் சந்திக்கின்றனர். பெண்கள் வயதுக்கு வந்துவிட்டால், அம்மாவோ, உறவினர்களோ அவர்களுடைய பாலியல் சந்தேகங்களை மேம்போக்காகத் தீர்த்துவைக்கின்றனர்.

ஆனால், பருவ வயதை எட்டும் ஆண்கள், பாலியல் விஷயங்களை, நண்பர்களின்மூலம் அரைகுறையாகத் தெரிந்துகொள்வதால், பாலியல் பற்றிய தவறான புரிதலை கொண்டிருக்கின்றனர்.

இந்த வயதில், இளம்பெண்களைக் கண்டால் ஒருவித ஈர்ப்புவரும். இதை காதல் என்று நினைத்து, மாணவப் பருவத்திலேயே, வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். இந்தத் தருணத்தில், தீர்த்துவைக்க யாரும் இல்லாமல் ஆண்கள் தடுமாறுகிறார்கள்.

அழகான பெண்களைப் பார்க்கும்போது, புத்தகங்கள், வலைத்தளம், திரைப்படங்கள்மூலமாக மனிதர்களின் அந்தரங்க உறுப்புகளைப் பார்க்கும்போது, இயல்பாகவே ஆண்களின் உடலில் ஹோர்மோன் வேகமாகச் சுரக்கும். இதனால் ஆண்களின் உறுப்புகள் எழுச்சியுறும்.

சிந்தனைகள் காமம்சார்ந்ததாக மட்டுமே இருக்கும். தன் உடல், தன் அந்தரங்க உறுப்பில் விந்து வெளியேறுவதில் வரும் சந்தேகங்கள், முறையான சுயஇன்பம் பற்றிய கேள்விகள் என ஆண்களின் டீன் ஏஜ் பருவம் குழப்பம் நிறைந்ததாக இருக்கிறது.

இதை எப்படி சரிப்படுத்துவது, கடந்து வருவது, இயல்பாக எடுத்துக்கொள்வது



குடும்பம், நண்பர்கள் சரியாக அமையாத பட்சத்தில் கடுங்கோபம், விரக்தி, தன்னைப் பற்றிய அதீத சுயமதிப்பீடு ஆகியவை அதிகரிக்கிறது.

இதனால், திருட்டு, வன்முறை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு எனத் தவறான திசையில் பயணிக்கநேரிடும். உலகம்முழுவதும் கடந்த சில ஆண்டுகளாக மைனர் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும், தற்கொலை செய்துகொள்ளும் இளைஞர்கள் அதிகமாகி இருப்பதும் இதற்கு சாட்சி.

பாலியல் குறித்த சந்தேகங்களைத் என்பது பற்றிய முறையான பாலியல் கல்வி தேவை. தற்போதைய சூழ்நிலையில் நகரத்தில் வாழும் ஆண்களுக்கு 60 - 65 சதவிகிதம் மட்டுமே விந்தணுக்களில் அடர்த்தி இருக்கிறது. விந்தணுக்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது.

மேலும் உடலுறவின்போது இயலாமையின் காரணமாக முரட்டுத்தனமாக நடந்துகொள்ளும் ஆண்கள் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. சரியான வழிகாட்டுதல், புரிதல்யின்மையே இதற்குக் காரணம்.

# இறைச்சியை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை

ஆடு, மாடு, பன்றி இறைச்சிகளை வாங்கும்போது கொழுப்பு தவிர்த்து வாங்குவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் விலங்குகளின் உடலில் சுரக்கும் ஹோர்மோன் நச்சுகள், நுண்கிருமிகள் அனைத்தும் பெரும்பாலும் கொழுப்புத் திசுக்களில்தான் தஞ்சமடையும்.



விலா எலும்புகளை சுற்றிய தசைகள் மற்றும் பின்னங்கால் பெருந்தொடை இறைச்சியை தேர்வுசெய்வது நல்லது. உடனடியாக வெட்டி விற்கப்படும் இறைச்சியை வாங்கி அடுத்த சில மணிநேரங்களுக்குள் சமைத்து சாப்பிடுவது நல்லது. இரவில் வாங்கிவிட்டு, காலையில் சமைப்பதோ, பிரிட்ஜ்ஜில் வைத்திருந்ததால் கெட்டுப்போயிருக்காது என்று நினைப்பதோ தவறு.

ஆரோக்கியமான கோழி இறைச்சி சாப்பிட விரும்புபவர்கள், வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழி, சேவல்களை வாங்கி சமைக்கலாம். பண்ணைகளில் வளர்க்கப்படும் கறிக்கோழிகள், கட்டுப்படுத்தப்பட்ட சூழலில், நிறைய இறைச்சிக்காக கொழுத்த தீவனங்கள் கொடுத்து வளர்க்கப்பட்டதாக இருக்கும். போதுமான சூரியஒளி, இடவசதி, சத்துகள் கிடைக்காமல் வளரும் இவை அதிக நோய் எதிர்ப்பு சக்தியின்றி காணப்படும். மரபணு முறையிலும், ஊசி மருந்துகள் மூலமும்கூட கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இவை நடப்பதற்குக்கூட சக்தியற்றவையாக வளரும். அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு ஆரோக்கியமாக இருப்பதாக நினைத்துக் கொள்ளவேண்டாம். கோழி இறைச்சியில் தோல்பகுதியை சாப்பிடுவதை தவிர்த்திடுங்கள். மீன்களில் பண்ணை மீன்களைவிட கடல் மீன்களும், ஏரி மீன்களும் சிறந்தவை. வழக்கமாக உணவுப்பொருட்கள் வாங்கும் கடைக்காரர் மற்றும் இறைச்சி கடைக்காரரிடம் தனக்கு இதுபோன்ற உணவுகள்தான் வேண்டும் என்பதை கண்டிப்பாக கூறிவிடுங்கள். அவற்றை மட்டுமே பயன்படுத்துவதை உறுதிப்படுத்துங்கள். ஆரோக்கிய ஆயுள் பெறுங்கள்!




## மாடி வீட்டு ஏழை



# விளக்கு மட்டுமா சிவப்பு?

ஜெயஸ்ரீ அந்தக் கேள்வியைக் கேட்டதும் வேதநாயகத்துக்குச் சிரிப்பு வந்தது.

சரசுவுக்குக் கண்ணீர் வந்தது.

குமாஸ்தா குப்புசாமிக்கு, துன்பங்களில்தான் எத்தனை வகை!' என்ற தத்துவம் தோன்றிற்று.

அடுக்கடுக்காகத் துன்பங்கள் வரும்போது, மனிதர்களின் தெய்வ நம்பிக்கையே சிதறடிக்கப்படுகிறது. கடவுள் நம்பிக்கையில் காலத்தை வீணாக்கிவிட்டதாகவே தோன்றுகிறது. மனிதமுயற்சியால் தடுத்து நிறுத்த முடியாத துன்பங்களுக்கெல்லாம் ஆண்டவன்தான் காரணம் என்று நினைக்கிறார்கள். "ஆண்டவன் என்று ஒருவன் இருந்தால் அவன் நம்மீது மட்டும் ஏன் வன்மமும் வங்சமும் வைக்கப்போகிறான்?" என்று நினைக்கிறார்கள். நடக்கும் அனைத்தும் பூர்வஜென்மத்தின் எதிரொலி என்ற நம்பிக்கை எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை. 'துயரங்களினால் நம்பிக்கை இழந்தவர்களில் ஜெயஸ்ரீயும் ஒருத்தி' என்றுதான் வேதநாயகம் கருதினார்.

ஜெயஸ்ரீ மேலும் தொடர்ந்தாள்.

"மணக்கோலம் கண்டு மகிழ்வதா, பிணக்கோலம் கண்டு அழுவதா என்று தெரியாதநிலையில் நாங்கள் இருந்தோம். நாங்கள் அழுதுகொண்டே சிரித்தோம். சிரித்துக்கொண்டே அழுதோம். ஆனந்தக்கண்ணீர் கண்களில் மறுஓரங்களில் இருந்து வருமாம். துன்பக்கண்ணீர் நாசியை ஒட்டிவருமாம். ஆனந்தக்கண்ணீர் இனிக்குமாம். துன்பக்கண்ணீர் உப்புக் கரிக்குமாம். இதை வாரியார் சுவாமி களின் புத்தகத்தில் நான் படித்திருக்கிறேன். கடல்நீரை ஒரு பக்கம் உப்பாகவும் நதி நீரை ஒரு பக்கம் இனிப்பாகவும் வைத்த இறைவன் இரண்டையும் சங்கமிக்கவிட்டு வேடிக்கை பார்க்கவில்லையா? அதுபோலவேதான் எங்கள் குடும்பத்தையும் வேடிக்கை பார்த்தான். தொடர்ச்சியாகவேதான் எங்கள் குடும்பத்தையும் வேடிக்கை பார்த்தான். தொடர்ச்சியாக எத்தனை மரணங்கள்: எத்தனை தோல்விகள்.

சேர், இரத்தபாசம் செத்துப்போன இந்துக் குடும்பங்கள் பல உண்டு. தகப்பனை வெட்டிக் கொன்ற மகன்; கணவனைக் கொன்ற மனைவி; மகனைக் கொன்ற தாய் என்று தினமும் பத்திரிகைகளில் செய்தி படிக்கிறோம்.

தந்தையும் மகனும் எதிரெதிராகக் கோர்ட்டிலே நிற்பது இந்த நாட்டிலே சர்வ சாதாரணம்.

அப்படிப்பட்ட குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்றாக இருந்திருந்தால் ஒவ்வொரு மரணமும் ஒவ்வொரு விடுதலையாகவே எங்களுக்குத் தோன்றியிருக்கும்.

ஆனால்குட்டியை வயிற்றுப்பையிலேயே வைத்துப் பாதுகாக்கும் கங்காரு என்னும் மிருகத்தைப்போல நாங்கள் பின்னிப் பிணைந்து வாழ்ந்தார்கள்.

நாலு நாள் பிரிவதென்றாலும் நாள் முழுக்க அழுவோம்; நிரந்தரமாகப் பிரிவை எப்படிச் சகிப்போம்?

இனம்புரியாத மான்களைப் போல் தடுமாறினோம்.

சுகத்தையும் வசதிகளையும் இழந்துவிட்ட ஒரு கன்னி விதவை. சுகமா, துக்கமா? என்று புரியாமல் கழுத்தை நீட்டிவிட்ட ஒரு சுமங்கலி. கை விளக்கில்லாமல் காட்டிலே மாட்டிக்கொண்டவர்களைப் போல் தலையில் அடித்துக்கொண்டு அழும் இரண்டு சகோதரர்கள்.

இவர்களுக்கு நடுவே ஒரு குல தேவதையின் மரணப் படுக்கை.

எங்கள் குடும்பம் சந்தோஷ மாக வாழுவதைச் சமுதாயமும் அங்கீகரிக்கவில்லை. சர்வேசுவரனும் அங்கீகரிக்கவில்லை.

திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களே கருமத்திற்கும் பாத்தியப்பட்டவர்களாக இருந்ததால், அவர்களைக் கொண்டே என் அன்னையின் இறுதிக்கிரியைகளை நடத்தினோம்.

அப்பவும் ஊர் சும்மாவா இருந்தது.

'சாவித்திரியின் கழுத்தில் மாங்கல்யம் விழுந்தாலும் விழுந்தது. விழுந்தவுடனேயே தாயைக் தின்றுவிட்டது' என்று பேசிற்று. ஸ்ரீரங்கத்தின் குழந்தைகள் எல்லாமே தோசிகள் என்று அர்ச்சனை வேறு பண்ணிற்று.

ஒருவருக்கொருவர் துணையாக இருக்கவேண்டும் என்று நான் சமுதாய வாழ்க்கையை மனிதர்கள் மேற்கொண்டார்கள்.

ஆனால் காட்டுமிராண்டிகளின் நாகரிகம்கூட நாட்டு மனிதர்களிடம் இல்லையே!

யாருக்குப் பயப்படுவது?

நாங்கள் விரும்பித் தேடிக்கொண்ட வேதனைகளா இவை?

எங்கள் குடும்பத்திற்கென்றே கடவுள் அளித்த பரிசுச்சீட்டுக்கள்.

இந்த தர்மத்தில் இன்பம் துன்பம் இரண்டுக்கும் ஒரே மாதிரிச் சடங்குகள்தானே செய்கிறோம்.

இரண்டு நேரத்திலும் குத்து விளக்குகள் எரிகின்றன. இரண்டு நேரத்திலும் சங்குகள் முழங்குகின்றன. இரண்டு கோலங்களுக்கும் புஷ்பங்களும் வரவழைக்கப் படுகின்றன.

இரண்டுக்கும் உறவினர்கள் வருகிறார்கள்.

அதுபோல இன்பம் வந்தாலும் கேலி செய்கிறார்கள். துன்பம் வந்தாலும் கேலி செய்கிறார்கள்.

எனக்கு அந்தக் கிராமமே வெறுத்துப் போய்விட்டது. என் அத்தான் மிகவும் நல்லவர் என்று சொன்னேன்.

என் தாயின் கடமைகள் முடிந்ததும் தன் தாயையும் சகோதரிகளையும் ஊருக்கு அனுப்பிவிட்டு எங்களுட னேயே அவர் தங்கிவிட்டார்.

அவர் எங்களுக்கு மானசீகத் தந்தையாகவே பரிணமித்தார்.

"இனி இந்தக் கிராமத்தில் இருக்க வேண்டாம்; எல்லாரும் சென்னைக்குப் போய்விடுவோம். நான் எப்படியோ ஒரு வேலை தேடிக்கொள்கிறேன். எப்படியாவது உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்று அவர் எங்களைச் சமாதானப்படுத்தினார்.

எனக்கு அது நல்ல யோசனை யாகவே பட்டது.

காலதாமதம் செய்யாமல் கிராமத்திலிருந்து வீட்டைத் தவிர அனைத்தையும் வந்த விலைக்கு விற்றுவிட்டு கையில் கிடைத்த ரூபாய் ஏழாயிரத்தையும் எடுத்துக் கொண்டு எல்லோரும் சென்னைக்குப் புறப்பட்டோம்.

நாங்கள் புறப்படும்போதே எங்கள் கிராமத்தவர்களில் எவ்வளவு பேர் வருத்தப்பட்டார்கள் தெரியுமா?

சேர், நம்முடைய நாட்டில் எல்லாருமே நல்ல நடிகர்கள். இதில் ஏன் சிலருக்கு மட்டும் பட்டம் கொடுக்கிறார்களோ எனக்குத் தெரியவில்லை. எங்களிடம் வந்து நடித்தவர்கள் அனைவருக்கும் நான் சொன்ன ஒரே பதில், 'யாருடைய அனு-தாபமும் எங்களுக்குத் தேவையில்லை' என்பதே. அவர்களிடம் நான் சற்றுக் கடுமையாகவே பேசினேன்.

"வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்?" என்று யாரோ எழுதிய பாட்டு எனக்கு அடிக்கடி நினைவுக்கு வந்தது.

எங்கள் வீட்டில் இருந்த பசு மாட்டைப் புறப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பே விற்றுவிட்டோம்.

நாங்கள் புறப்படுகின்ற அன்று அது எங்கள் வீட்டிற்கே திரும்பி வந்து எங்களைப் பரிதாபமாகப் பார்த்தது.

வறண்டுபோன வைக்கோலைத் தின்றுவிட்டு வளமான பாலைக் கொடுக் கும் பசு ஒரு மிருகம். அதற்கு அவ்வளவு பாசம் இருந்தது. வளமான பாலைக் குடித்துவிட்டுக் கொடுத்தவர்களை வைக்கோல் போலத் தூக்கி எறியும் மனி தன் மிருகத்தைவிட உயர்ந்தவனா?

அந்தப் பசுவைத் தடவிக்கொடுத்து நான் அழுதேன். அந்தப் பசுவைப் பிரிவது மட்டும்தான் எனக்கு வேதனை யாக இருந்தது. அதனிடம் பாலைக் கறந்தோம் நாங்கள்; அது எங்கள் பணத்தைக் கறந்ததில்லை. நன்றி மறப்பதில்லை.

நன்றி கெட்ட கூட்டங்களை விட்டுவிட்டு எல்லோரும் ஒட்டு மொத்தமாக நகரத்திற்கு வந்து சேர்ந்தோம்.

சென்னை நகரம் இந்த அனாதை-களை வரவேற்றது.

'கெட்டுப்போனால் பட்டணத்துக்குப் போ' என்று தெரியாமலா சொன்னார்கள்.

'மேலும் கெடுவதற்கு அதுதான் சரியான இடம்' என்று தெரிந்தே சொன்னார்களா?

அதை நான் பின்னாளில் உணர்ந்தேன்.

ரயிலடியில் இறங்கியதும், நகரத்தின் பரபரப்பு என்னைக் கவர்ந்தது. அப்போது நகரம் கிராமத்தைவிட மோசமாக இல்லை என்றே நான் நினைத்தேன். என்ன மடத்தனம்! நகரமும் இதே நாட்டில்தானே இருக்கிறது!

வாடகை அதிகமில்லாத ஒரு சிறிய ஓட்டலுக்குப் போய் இரண்டு அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டோம்.

பெண்கள் ஓர் அறையிலும் ஆண்கள் ஓர் அறையிலுமாகத் தங்கினோம்.

மறுநாள் காலை திருப்பதியை எங்களுக்குத் துணைக்கு விட்டுவிட்டு என் அத்தானும் கண்ணனும் வீடு பார்ப்பதற்காகப் புறப்பட்டார்கள்.

நகரத்திலே ஒரு நடுத்தரக் குடும்பத்திற்கு வீடு வேண்டுமென்றால் வாடகை கொடுக்கவே நகையை விற்க வேண்டுமல்லவா?

பாரதிதாசன் கவிதையிலே நான் ஒன்றைப் படித்திருக்கிறேன். சென்னை நகரத்திற்கு ஒரு கிராமவாசி வந்தானாம். அவன் கையிலே ஒரு படி தானியம் கொண்டு வந்திருந்தானாம். அது திணை என்னும் தானியம். இரவிலே அவன் ஊரைச் சுற்றி வரப்புறப்பட்டபோது அந்த ஒருபடி திணையை ஒரு வீட்டுக்காரனிடம் கொடுத்து 'இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். காலையிலே வந்து வாங்கிக் கொள்கிறேன் என்றானாம்.

(விளக்கு எரியும்)



# அழுத்தங்களுக்கு வளையுமா அரசாங்கம்?

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் அடிக்கடி ஏன் இலங்கைக்கு வருகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு சூழலில் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவரும் கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டுவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக் களத்தின் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கான பிரதி உதவிச் செயலரான கலாநிதி அமி சீரைட் என்ற அதிகாரியே கொழும்பு வந்திருந்தார்.

இவரது பயணம் குறித்து முன் கூட்டியே அமெரிக்காவோ, இலங்கையோ அறிவித்திருக்கவில்லை. இவரது சந்திப்புகள் தொடர்பான தகவல்கள் வெளியான பின்னர்தான் இப்படியொரு அமெரிக்க உயரதிகாரி கொழும்பு வந்திருக்கிறார் என்ற விடயமே ஊடகங்களுக்குத் தெரியவந்திருந்தது. கடந்த 18ஆம் திகதி கொழும்பு வந்த கலாநிதி அமி சீரைட் தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிய பின்னர்தான் கடந்த திங்கட்கிழமை அதுபற்றிய ஊடக அறிக்கை ஒன்றை அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டத்தில் அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வால் குடும்பத்துடன் கொழும்பு வந்திருந்தார்.

தனிப்பட்ட பயணமாகவே முன்னறிவிப்பின்றிவந்த அவர் ஒபாமாவின் செய்தியை காவி வந்துள்ளதாகவும், அரசாங்கத்தரப்புடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் பரபரப்பாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தன. அதனால் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலர் அமி சீரைட்டின் பயணம் ஊடகங்களில் அவ்வளவாக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

எனினும், இவரது இந்தப் பயணத்தின் நோக்கம் இலங்கையைப் பொறுத்த வரையில் முக்கியமானது. இலங்கை இராணுவத்தின் எதிர்காலப் பங்கு தொடர்பாகப் பேச்சுநடத்துவதே, அமி சீரைட்டின் இலங்கைப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும். இலங்கை இராணுவத்தை மறுசீரமைப்பது என்ற விவகாரம் இப்போது சூடு பிடித்திருக்கின்றது என்பது பலருக்குத் தெரியும்.

இது ரணில் விக்ரமசிங்கவோ, மைத்திரிபால சிறிசேனவோ எடுத்த முடிவும் இல்லை. அதேபோல பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திட்டமுமல்ல. இது ஒரு சர்வதேச நிகழ்ச்சி நிரல். அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலகினால் ஐ.நாவின் பங்களிப்புடன் முன்வைக்கப்பட்டுள்ள திட்டமே இது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின்னர் ஐ.நா அமைதிப்படைக்கு கூடுதல் படை யினரை அனுப்பிவைக்க மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த விடயம். அமெரிக்கா சென்றிருந்தபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுபற்றி அமெரிக்க அதிகாரிகளிடமும், ஐ.நா பொதுச் செயலரிடமும் கோரிக்கைகளை விடுத்திருந்தார்.

இலங்கைவந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி உள்ளிட்ட இராஜதந்திரிகளிடமும் அரசாங்கத்தின் தரப்பில் தொடர்ச்சியாக இது வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஐ.நா அமைதிப்படைக்கு ஐயாயிரம் இலங்கைப் படையினரை அனுப்பும் அரசாங்கத்தின் ஆர்வத்தை, ஐநா பொதுச்செயலரும் அமெரிக்காவும் வரவேற்றிருந்தாலும் உடனடியாக அத்தகைய வாய்ப்பை வழங்க இந்த இரண்டு தரப்புகளும் தயாராக இல்லை.

இதற்குப் பிரதான காரணம் இலங்கைப் படையினர்மீதுள்ள மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுகள்தான்.ஐ.நா அமைதிப் படையில் பணியாற்ற இலங்கை இராணுவத்தினர் கடந்த பல ஆண்டுகளாகவே அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனர். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இராணுவ, கடற்படை, விமானப் படை அணிகள் அமைதிப்படைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அதற்கென குகுலே கங்கவில் ஒரு பயிற்சி நிலையம் இயங்கிவருகிறது.

அங்கு பயிற்சியளிக்கப்பட்டபின்னர் தான் ஐ.நா அமைதிப்படைக்கு ஆளணி யினர் அனுப்பிவைக்கப்படுகின்றனர். என்றாலும் இதுவரையில் ஐ.நா அமை திப்படைக்கு அனுப்பிவைக்கப்படும். படையினர் மனித உரிமைமீறல்களில் தொடர்புபட்டுள்ளனரா என்ற ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

போரில் பங்கெடுத்த படைப் பிரிவு கள் படையினர் எந்த தங்குதடை யுமின்றி ஐ.நா அமைதிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றனர். ஆனால் கடந்த செப்டம்பரில் வெளியிடப்பட்ட ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் பணிய கத்தின் விசாரணை அறிக்கையிலும், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலும் மனித உரிமை மீறல்களில் தொடர்புடைய படையினரை சர்வதேச கருத்தரங்குகள், பயிற்சி களிலும் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளிலும் பங்குபற்றுவதை தடுக்கவேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் தான் இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பை மறுசீரமைக்கின்ற முயற்சிகளை மேற்குலகம் ஆரம்பித்திருக்கின்றது. பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு விடயத்தில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஐ.நாவும் கூடுதல் அக்கறை காண்பிக்கின்றன. கொமன் வெல்த் மாநாட்டுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மோல்டாவுக்குச் சென்றிருந்தபோது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுடன் பேச்சு நடத்தியிருந்தார். அப்போது பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புத் திட்டத்தைக் கண்காணிக்க புதுடில்லியிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தில் பணியாற்றும் பாதுகாப்பு ஆலோசகரையும் நியமித்திருந்தார். அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரி யான கப்டன் ஸ்ருவர்ட போர்லன்ட், சிறீவென்ஹாம் பாதுகாப்பு அக்கடமி யைச் சேர்ந்த லெப்.கேணல் ஜம்மி ஹாட்லியுடன் அண்மையில் கொழும்பு வந்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் ஆலோசனைகளை நடத்தியிருந்தார்.

அதன்பின்னரே அமெரிக்கப் பாது காப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலர் அமி சீரைட் கொழும்பு வந்தார். இவரும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புக்கான திட்டங்கள் குறித்தே முக்கியமாக ஆராய்ந்தார். அத்துடன் ஐ.நா அமைதிப்படையில் இலங்கைப் படையினரின் எதிர்காலப் பங்களிப்புக் குறித்தும் அவர் பேச்சுக் களை நடத்தியிருந்தார். அதாவது போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமந்திருக்கும், இலங்கை இராணு வத்துக்கு வெள்ளை அடிப்பதே மேற்குலகின் இப்போதைய நோக்கம். இதனை இரண்டு காரணங்களுக்காக மேற்குலகம் செய்யமுனைகிறது.

ஒன்று இந்த விடயத்தைக் கருவி யாகப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை நிறைவேற்றச் செய்ய முனைகிறது. இரண்டு இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்புகளில் மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்போரைக் களையெடுக்க நினைக்கிறது. இந்த இரண்டையும் செய்துவிட்டால் இலங்கை இராணுவம் உலகின் மிகச்சிறந்த நிபுணத்துவமும், ஆற்றலும்கொண்ட இராணுவமாக மாற்றப்பட்டுவிடும்.

இதற்கான முயற்சிகள்தான் மேற்குலகினால் தீவிரப்படுத்தப்பட்டுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நிகழ்வுகள், பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என்று கூறப்பட்டுள்ள நிலையில், தன்னிச்சையாக கூடுதல் படையினரை ஐ.நா அமைதிப்படையில் சேர்ப்பதை அதிகரிக்கமுடியாது. இதனால்தான் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு என்றபெயரில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை களையெடுக்க முயற்சிக்கப்படுகிறது.

அதேவேளை, இன்னொரு பக்கத் தில் பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கான ஒரு நிபந்தனை யாகவும் இந்த விடயம் முன்வைக்கப் பட்டிருக்கிறது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம்போலவே பாதுகாப்புத் திணைக்களமும் நம்பகமான பொறுப்புக்கூறல், பொதுமக்களின் காணிகளை மீளஒப்படைத்தல் உள்ளிட்ட விடயங்கள் அவசியம் நிறைவேற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம், இலங்கை அரசாங்கத்துடன் கடந்த காலங்களில் முட்டுப்பட்டுக் கொண்டிருந்தாலும் பாதுகாப்புத் திணைக்களம் இலங்கைப் படைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளை தொடர்ந்து பேணியே வந்திருக்கிறது. இப்போது இராஜாங்கத் திணைக்களமும் பாதுகாப்புத் திணைக்களமும் ஒரே தொனியில் நம்பகமான விசாரணைப் பொறிமுறை மற்றும் காணிகளை மீளளித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முனைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஏற்கனவே கொழும்பு வந்திருந்த ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் எதிர்கால இராணுவ உறவுகளில் ஒத்துழைப்பை விரிவாக்குவதற்கு முன்னர், பொறுப்புக் கூறல் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார் இப்போது அமி சீரைட்டும் அதனையே குறிப்பிட்டிருக்கிறார். ஐ.நா அமைதிப் படைக்கு கூடுதல் ஆளணியை அனுப்பும் அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்றவேண்டும் என்றால் மேற்குலகின் இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் அரசாங்கம் இணங்கியே ஆகவேண்டியிருக்கும்.

அடுத்தடுத்து கொழும்பு வந்த அமெரிக்க அதிகாரிகள், இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தை இணங்கவைக்கவும், பாதுகாப்புத் தரப்பை வழிக்குக்கொண்டு வருவதற்கும் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர். இலங்கை அரசாங்கமும் படைத்தரப்பும் இந்த விடயங்களில் எந்தளவுக்கு வளைந்து கொடுக்கப்போகின்றன என்பதைப் பொறுத்தே, அடுத்தடுத்த கட்டங்கள் தீர்மானிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

- ஹரிகரன் -

**அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இலங்கை அரசாங்கத்துடன் கடந்த காலங்களில் முட்டுப்பட்டுக் கொண்டிருந்தாலும் பாதுகாப்புத் திணைக்களம் இலங்கைப் படைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளை தொடர்ந்து பேணியே வந்திருக்கிறது. இப்போது இராஜாங்கத் திணைக்களமும் பாதுகாப்புத் திணைக்களமும் ஒரே தொனியில் நம்பகமான விசாரணைப் பொறிமுறை மற்றும் காணிகளை மீளளித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முனைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.**

# முதுமை அடையும் பெற்றோரும் பிள்ளைகளின் அரவணைப்பும்



எம்மை பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய எமது பெற்றோர் வயதுக்குச் செல்லும்போது அல்லது முதுமையை அடையும்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் அவர்களது நிலைமைகளையும் நாம் அறிந்துகொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

குழந்தையாக, சிறுவர்களாக வாலிபர்களாக நாம் இருக்கும்போது நமது பிரச்சினைகளையும் நிலவரங்களையும் நன்கு கவனித்து, நம்மைவளர்த்து ஆளாக்கியவர்கள் எமது பெற்றோர்கள். ஒவ்வொரு பருவத்திலும் ஒருவகையான பிரச்சினையை நாம் சந்திக்கின்றோம். அதுபோலவே பெற்றோரும் முதுமையிலும் பிரச்சினைகளை சந்திக்கின்றார்கள். அவர்களது பிரச்சினைகளையும் மனோநிலைகளையும் பிள்ளைகள் அறிந்து அன்புடன் நடாத்தவேண்டிய கடமைப்பாடு உள்ளது.

முதுமைப் பருவம் என்பது குழந்தைப் பருவத்தைவிடவும் சிக்கலானது. இப்பருவத்திலுள்ள எமது பெற்றோரை பாதுகாப்பதும் பராமரிப்பதும் கடவுளின் திருப்தியையும் அன்பையும் பெற்றுத் தரக்கூடிய காரியமாகும். அது மட்டுமன்றி, பெற்றோரை பராமரிப்பது பிள்ளைகளின் கடமையும்கூட.

இன்று பெற்றோர் முதுமையை அடைகிறார்கள். நாளை நாமும் முதுமையை அடையக்கூடியவர்களாக இருக்கின்றோம். எனவே, முதுமை பற்றியும் முதுமையில் ஏற்படக்கூடிய உளவியல் பிரச்சினைகள் பற்றியும் அறிந்துகொள்வது கட்டாயமானதாகும்.

**முதுமை என்றால் என்ன?**

ஒருவரின் உடலிலுள்ள கலங்களிலும் தொகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு, அவரது செயற்பாடுகளில் படிப்படியாக தேய்வு ஏற்படுவதே முதுமை எனப்படும். அதாவது சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த உடல் அங்கங்களில் படிப்படியாக தோய்வும் பலவீனமும் ஏற்பட ஆரம்பிக்கின்றது.

*மூளையின் செயற்பாட்டின் நிலை குறைவடைதல்.

*மூட்டுக்களில் தசைகளில் பலவீனம் ஏற்பட்டு மூட்டுக்களில் தேய்வு ஏற்படுதல்.

*நரம்புகளில் தளர்ச்சி ஏற்படுதல்.

*தசைகள் மெலிதல்.

*தோள்கள் சுருங்குதல்

*மயிர்கள் உதிர்தல் மற்றும் நரை ஏற்படுதல்.

* புலனுறுப்புகளில் குறைபாடுகள் ஏற்படுதல்.

* நோய் எதிர்ப்புச் சக்திகள். குறைந்து, தொற்றுநோய்கள் ஏற்படுதல் போன்றவை காணப்படும்.

ஐ.நாவின் விளக்கம்படி 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோர் எனப்படுவர். இன்றைய நவீன மருத்துவ வளர்ச்சியின்காரணமாக முதியோர் தொகை அதிகரித்துவருகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கான வயதெல்லை சராசரியாக 20 வருடங்களாக அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. 2020ஆம் ஆண்டு ஆகும்போது முதியோர் வயது 73 ஆக அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

இன்று முதியோரில் பெரும்பாலானவர்கள் கைத்தொழில் நாடுகளிலேயே வாழ்கின்றார்கள். 2020ஆம் ஆண்டில் உலகில் முதியோர் தொகை ஒரு பில்லியனாகிவிடும். இவர்களில் 700 மில்லியன் பேர் வளர்முக நாடுகளில் வாழ்வார்கள் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

1998ஆம் ஆண்டு உலக சனத் தொகை நிதியம் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி இப்பொழுது ஒவ்வொரு பத்துபேருக்கும் ஒருவர் முதுமை அடைந்தவராக இருக்கின்றார். இத்தொகை 2050ஆம் ஆண்டில் ஐந்து பேருக்கு ஒருவர் என்றபடியும், 2150ஆம் ஆண்டு மூவருக்கு ஒருவர் என்றபடியும் மாற்றமடையும் எனப்படுகிறது.
(நன்றி: தினகரன் - இலங்கை)

முதுமையை பாதிக்கும் காரணிகள்:

இரண்டு வகையான காரணிகள் முதுமையைப் பாதிக்கின்றன.

1. உடற்காரணிகள்.
2. உளக்கரணிகள்.

உடற்காரணிகளைப் பொறுத்த வரையில் உடலில் ஏற்படுகின்ற பலவீனங்கள் மற்றும் பல்வேறு நோய்கள் தாக்கம் செலுத்துகின்றன. இளமையில் உடலில் இருந்த சக்திகள் குறைவடைவதாலும் நோய் எதிர்ப்புச்சக்திகள் பலவீனமடைவதாலும் நோய்கள் தொற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனால் முதியோர் பெரிதும் அவஸ்தைக்குள்ளாவர்.

உளக்காரணிகளைப் பொறுத்தவரையில், உடற்காரணிகளைவிடவும் பாரிய தாக்கத்தினை செலுத்தக்கூடியதாக இருக்கும். பொதுவாக மனதளவில் பாதிப்படையக்கூடியவர்கள் அதிலிருந்து விடுபடுவது கடினமாக இருப்பதை நாம் பார்த்துவருகின்றோம். ஆனால், முதுமையில் ஏற்படும் இந்த உளக் காரணிகள் பல்வேறு காரணங்களால் பிணைந்ததாக இருக்கும்.

**1. வேலையிலிருந்து ஓய்வு:-**

துடிதுடிப்பான இளமைப் பருவத்தில் தனக்கென ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ளவும் தன்னுடைய குடும்ப வாழ்வையும் தன்னை நம்பியிருக்கின்றவர்களின் வாழ்வையும் மேம்படுத்திடவும் பொருத்தமான ஒரு தொழிலை தேர்வுசெய்து அயராது உழைத்து வருகின்றனர். ஆடி, ஓடி செய்கின்ற எந்த வேலைக்கும் ஒருநாள் ஓய்வு தேவைப்படுகின்றது. 60 வயதை அடைகின்றபோது தொழிலிருந்து ஓய்வு பெறும் காலம் வந்துவிடுகின்றது.

தொழிலிருந்து ஓய்வுபெற்று வீட்டுக்குச் செல்லும்போது அடைகின்ற கவலைக்கு அல்லது உளக்குமுறல்களுக்கு வலி அதிகம். 40 வருடங்கள் தொடராக ஒரு தொழில்ஈடுபட்டு உழைத்து வாழ்ந்தவர்களால் இந்த கவலையை ஒரே நாளில் மறந்துவிடவும்முடியாது.

தொழில்புரிந்த இடத்தை விட்டும் நீங்கும்போது தனது சொந்த வீட்டை விட்டு நீங்குவதாகவும் தனது உணர்வுகளை விட்டு பிரிவதாகவும் துன்பப்படுவர். இதன்பிறகு இந்த முகங்கள் பார்க்க முடியாது. பேசமுடியாது. 40 வருடகால பிணைப்பு இன்று பிரிந்து உடைந்து விடுகின்றது என்று குமுறுவார்கள். தங்களுக்கிடையில் இருந்த நட்பு, அந்நியோந்நியம் அகன்றுவிடுகின்றது

தடையாக இருந்துவிடுவோமோ என்று ஏக்கம்கொள்வார்கள். எங்களை கவனிப்பது அவர்களுக்கு சுமையாகி விடுமோ என்ற அச்சமே அவர்களுக்கு மேலோங்கியிருக்கும்.

கிராமப்புற வாழ்வைவிட நகர்ப்புற வாழ்வில் வாழும் முதியோர்களின் ஏக்கங்களே அதிகம். கிராமப்புற வாழ்வில் மக்களிடையே தொடர்புகளும் கைத்தொழில்களும் விவசாயங்களும் காணப்படும். அங்கு எவரும் தனித்து விடப்படுவதற்கோ,ஓய்வாக இருப்பதற்கோ வாய்ப்பு குறைவாக இருக்கும். குடும்ப உறவுகளும் சொந்தபந்த இணைப்புகளும் வலுவாகக் காணப்படும். கூட்டுக்குடும்ப முறைகளும் பேரப்பிள்ளைகளுடன் வாழும் சூழலும் காணப்படும். எனவே முதியோர் வேலையிலிருந்து ஓய்வுபெற்றாலும் கிராம சூழல் அவர்களது வாழ்வில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவது குறைவு.

இந்த கிராமப்புற வாழ்வைவிட நகர்ப்புற வாழ்வு வேறுபட்டு இருப்பதனால் தான் முதியோர்கள் தனித்து விடப்படுகிறார்கள். நகர்ப்புற வாழ்வு எப்போதும் பரபரப்பாக இருக்கும் எல்லோரும் வீட்டைவிட்டு வெளியில் தொழிலுக்கு செல்லக்கூடியவர்கள். குடும்பங்களுக்கிடையிலான சந்திப்புகளும் குறைவானது.

என்று அவஸ்தைப்படுவார்கள்.

இதன்பின் வீட்டில் தனிமையில் இருக்கவேண்டும். வேறொருவரின் உழைப்பில் அல்லது தயவில் வாழ வேண்டும் என துக்கப்படுவர். ஓய்வூதியப் பணம் இவர்களது கவலைக்கு ஓரளவு மருந்தாக இருக்கும்.

இரவு, பகல் கஷ்டப்பட்டு உழைத்து, வளர்த்து ஆளாக்கிய தங்களுடைய பிள்ளைகளுடைய உழைப்பில் வாழ வேண்டுமே. நாம் பிள்ளைகளுக்கு சுமையாகிவிடுவோமா, அவர்களது குடும்ப வாழ்வுக்கும் சந்தோசத்திற்கும்

அடுத்த வீட்டில் யார் வாழ்கிறார்கள் என்றுகூட அறியாதவர்கள். எனவே இங்கு வாழும் முதியவர்கள் மனதளவில் பெரிதும் பாதிப்படைகிறார்கள்.

பொதுவாக நகர்ப் புறங்களில் வாழும் முதியவர்கள் செல்லப் பிராணிகளை வளர்க்கவும் பராமரிக்கவும் நேரத்தை செலவிடுவார்கள். மாலை நேரத்தில் அச்செல்லப்பிராணியை அழைத்துக் கொண்டு வீதியில் அல்லது பூங்காவில் சுற்றிவருவார்கள். தங்களது வாழ்வின் இறுதிப்பகுதியில் தனித்து நிற்கின்றோமே என்ற ஏக்கம் அவர்களை பெரிதும் வாட்டிவிடும்.

**வாழ்க்கை துணையை இழத்தல்**

60 வருடகால வாழ்க்கையில் சுக துக்கங்களில் பங்குகொண்டு எல்லா சந்தர்ப்பங்களிலும் துணைநின்ற தனது கணவன் அல்லது மனைவி தனக்கு முன்னதாகவே மரணித்துவிட்டார். இன்று நான் தனித்துவிடப்பட்டுள்ளேன் என்று எண்ணி பெரிதும் கவலைப்படுவர்.

இதன் பிறகு தன்னுடைய கஷ்டங்களைத் தேவைகளை யாரிடம் கூறியும் நிவர்த்தி செய்யமுடியாது என்று ஆதங்கப்படுவர். பிள்ளைகளிடம் தங்களுடைய தேவைகளை முறையிடுவதால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ அல்லது அவர்களது குடும்பத்தில் (கணவன், மனைவிக்கிடையில்) பிரச்சினையாகி விடுமோ என்று கவலைப்படுவர்.

எனவே தங்களுடைய விருப்பு வெறுப்புக்களை, தேவைகளை பிள்ளைகளிடம் சொல்வதில் தயக்கம் காட்டுவர். குறிப்பாக நோய்களை முறையிடுவதிலும் தயக்கம்காட்டுவர். தங்களுடைய மனதுக்குள்ளே எல்லா கவலைகளையும் புதைத்துக்கொண்டு நல்ல நிலையில் இருப்பதாக காட்டிக் கொள்வர்.

துணையை இழந்ததன் பாதிப்பை முதுமையின் எல்லைக்கு போகும் போது நன்கு உணர்வார்கள். தனக்கு துணையாக இருந்து தன்னுடைய வேலைகளை செய்துதர துணையில்லமல்போனதே என்று கண்ணீர் வடிப்பார்கள். எனவே எமது பெற்றோரில் ஒருவர் துணையை இழந்தால் அவருக்கு மறுவாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்பும் வலிமையும் உள்ளதா என்று கவனிக்க தவறக்கூடாது.

**நண்பர்களின் இழப்பு**

சிறுவயதிலிருந்து அல்லது பள்ளிப் பருவத்திலிருந்து பழகிய நட்பை எவரும் மறந்துவிடமாட்டார்கள். அழியாத நினைவுகள் நிறையவே இருக்கும். நண்பர்களிடையிலான தொடர்புகள் அறுந்துபோவது எளிதில் தாங்கிக் கொள்ளக்கூடியதல்ல. இந்த நட்பு மரணம்வரை தொடர்ந்து வரக்கூடியது. ஒவ்வொருவரும் தன்னுடைய விவகாரங்களை (நல்லதோ, கெட்டதோ) நண்பர்களுடன்தான் பகிர்ந்துகொள்வர். நண்பன் ஒருவன் இழந்துவிட்டால் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

முதிய வயதிலும் இந்த நட்பை பெரிதும் எதிர்பார்ப்பார்கள். ஓய்வு காலங்களில் நண்பர்களுடன் நேரங்களைக் கழிப்பது தனிமையை போக்குவது கடந்த காலங்களை மீட்டிப் பார்ப்பது என்று சுவாரஸ்யமாக எதிர்பார்ப்பார்கள். தங்களுடைய நண்பன் இழந்துவிட்டான் என்றால் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கும். ஏற்கனவே தனிமையில் இருக்கும் நாம், மேலும் தனிமையில் விடப்பட்டுள்ளோம் என்று கவலைப்படுவர்.

**இடம்பெயர்வு**

யுத்தம் மற்றும் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்வு ஏற்படுகின்ற போது முதியவர்கள் பெரிதும் கவலைப்படுவர். பிறந்து, வளர்ந்த பூமியை விட்டும் ஓடி, ஆடி விளையாடிய மண்ணை விட்டும், பழகிய உறவுகளை விட்டும், அறிமுகமற்ற பகுதிக்கு (அல்லது பிரதேசத்திற்கு) செல்கின்றோமே. எமது தொழில் சம்பாதிக்க சொத்துக்களும் இழக்கப்படுகிறதே என்று துன்பப்படுவார்கள்.

பொதுவாக நாம் வாழும் ஊரை விட்டு இன்னுமொரு ஊருக்கு புதிதாக குடியேறும்போது சந்தோசமடைந்தாலும் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டும் வெளியேறுகின்றோமே என்ற எண்ணம் ஏற்படும்போது மனது பாரமாகி விடுகின்றது. அப்படியானால் முதியவர்கள் எந்தளவு உளப் பாதிப்புக்கு உள்ளாகுவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

# வாரமொரு காரம்

தற்போது யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களில் வாடகைக்கு வாகனம் ஓட்டும் அப்பாவிச்சாரதிகள் அகப்பட்டு பாதிக்கப்பட்டுவருவதாக தகவல்கள் வெளியாகிவருகின்றன.

அண்மையில் கைதடி சந்தியில் அதிகாலை கொழும்புப் பேருந்தில் வந்து இறங்கிய நபர் ஒருவர் ஒரு ஓட்டோவை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு பூநகரிக்குப் புறப்பட்டுச் செல்லும்வழியில் பொலிஸ் பிரிவினர் ஓட்டோவை மறித்து வந்தவரின் உடைமைகளைச் சோதனைசெய்து பார்த்தவேளை பல இலட்சம் பெறுமதியான கஞ்சா பிடிபட்டது. உடனடியாக ஓட்டோச் சாரதி உட்பட அந்த நபரும் கைதுசெய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டபின்னர் ஓட்டோச் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் வழக்குத் தொடர்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தைப் பாருங்கள். பாதிக்கப்பட்டது எதுவுமே தெரியாத

**❝ நீதிமன்றம் நீதிவழியில் நின்று நிரபராதி என இச்சாரதிகளிற்குத் தீர்ப்பளித்தாலும் காலநீடிப்பு, செலவீன சேதாரம், மனஉளைச்சல் என்பவற்றிற்கு யார் பொறுப்பு என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். இதற்கு நீதித்துறையில் மாற்றுவழியே இல்லையா...? பொலிஸ் விசாரணையில் சாரதிக்கு குற்றத்தோடு தொடர்பில்லை என இனங்காணப்பட்டால் அவரை முற்றாக இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யமுடியாதா...? ❞**



## குற்றச்செயல்களில்

## அகப்படும் அப்பாவிச் சாரதிகள்

அப்பாவிச் சாரதி. 14 நாள் விளக்கமறியலில் இருக்கும்போது அவரது குடும்ப வருமானம் எந்தளவு பாதிப்படைகின்றது என்பது ஒரு புறமிருக்க, மாறுபட்ட வதந்தியால் வரும் அவமானங்கள் மறுபுறம். வழக்கு எத்தனை வருடங்கள் இழுபடப்போகின்றது என்பது வேறொரு புறம், அதில் குற்றத்திற்கும் சாரதி தொடர்பில்லை என்பதற்காக அந்த சாதாரண குடும்பவருமானம் கொண்ட சாரதி எவ்வளவு பணத்தை செலவளிக்க நேரிடப்போகின்றது. என்ன கொடுமையிது, இதில் மாற்று வழியில்லையா..? எனச் சாரதிகள் கோரும் கோரிக்கைக்கும் ஒரு துருவத்தில் நியாயம் இல்லாமல் இல்லை.

"ஒவ்வொரு பயணிகளையும் நாம் சோதனை செய்து ஏற்ற முடியுமா...? அவ்வாறு செய்வது சாத்தியப்படுமா...? அதற்கு பயணிகள் அனுமதிப்பார்களா..? இதனால் எம்மைவிட்டு வேறொருவரைத்தான் வாடகைக்கு பிடிக்க முனைவர். இதனால் எமது ஜீவனோபாயம் தான் பாதிக்கப்படும் என பல விசனங்களைத் தெரிவிக்கின்றனர். இதற்கு என்ன தீர்வு என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை. இது பலரை பாதித்துவரும் செயற்பாடாக இன்று விஸ்வரூபம் பெற்றுள்ளன. உதாரணமாக, கைதடிச்சந்தியில் மாத்திரம் 4 ஓட்டோச்சாரதிகள் இவ்வாறான குற்றச்செயல்களில் அகப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று யாழ்.மாவட்ட நீதித்துறை நீதிபதி இளஞ்செழியனின் வழிகாட்டலில் மற்றைய மாவட்டங்களிற்கு முன்னுதாரணமாக விளங்கிவருகின்றது. ஆகையால் இது தொடர்பான சிக்கல்களையும் அவரது காலத்தில் களையப்படவேண்டும் என்பதே இங்குள்ள எதிர்பார்ப்பாகும். நீதித்துறைக்கு இரண்டு இலக்குகள் உள்ளன. ஒன்று குற்றவாளி தப்பித்துக் கொள்ளக்கூடாது. மற்றையது நிரபராதி பாதிக்கப்படக் கூடாது என்பதாகும். இதனடிப்படையில் தான் இக்கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

நீதிமன்றம் நீதிவழியில் நின்று நிரபராதி என இச்சாரதிகளிற்குத் தீர்ப்பளித்தாலும் காலநீடிப்பு, செலவீன சேதாரம், மனஉளைச்சல் என்பவற்றிற்கு யார் பொறுப்பு என்பது தான் இன்றுள்ள கேள்வியாகும். இதற்கு நீதித்துறையில் மாற்று வழியே இல்லையா...? பொலிஸ் விசாரணையில் சாரதிக்கு குற்றத்தோடு தொடர்பில்லை என இனங்காணப்பட்டால் அவரை முற்றாக இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யமுடியாதா...?

இதற்கு மாற்றுவழியே இல்லையானால் எமது தொழிலசார் உரிமை இங்கு பாதிக்கப்படுகின்றதல்லவா? இளவட்டங்கள் சிலர் செய்யும் சில செயற்பாடுகளால் ஏற்கனவே எமது தொழில் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளன. ஓட்டோக்காரர் என்றால் இப்படித்தான் எனும் நிலை சமூகமட்டத்தில் பலமாக வேரூன்றியிருந்தும் அன்றாட வாழ்வியல் ஜீவனோபாயத்திற்காக சிலவற்றைப் பொருட்படுத்தாமல் இத் தொழிலைச் செய்துவந்தால் தற்போது வேறு துருவத்தில் எமது தொழில் உரிமை பாதிக்கப்படுகின்றது. இதற்கு நீதித்துறை தீர்வு தருமா...?

# இந்தவாரம் உங்கள் பலன்

(31.12.2015 தொடக்கம் 06.01.2016 வரை)

### மேடம்

அரசியல்வாதிகளால் சில எதிர் பார்க்காத ஆதாயங்கள் அடைவீர்கள். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் சிறந்ததாகும். குழந்தைகளால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகளால் மருத்துவச்செலவுகள் வந்துசேரும். வடக்குத்திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர்ந்து அவற்றில் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். நீண்டதூரப் பயணங்களின் மூலம் சந்திக்கவேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

### இடபம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகக் கவனம் தேவை. தேவை இல்லாமல் பழைய பிரச்சினைகள மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. சம்பந்தம் இல்லாத நபர்களால் காணாமற் போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யஎண்ணுவீர்கள். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். செய்தொழிலில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தவிர்க்கவும். வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும்.

### மிதுனம்

வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. திடீர் அதிர்ஸ்டமாகிய ரேஸ் லோட்டரிமூலம் பணம் கிடைக்கும் என்று கருதி ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய வீடு நிலம்வாங்க எதிர்பார்த்திருந்த கடன்கேட்ட பணம் கை வந்துசேரும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்துமுடிப்பீர் கள். காதல் சம்பந்தமான விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். பொருளா- தார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவி வழிச்சொந்தபந்தங்களால் மாற்றம் உண்டாகி மன நிறைவை அடைவீர்கள்.

### கடகம்

வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக்கட்டுவதன்மூலம் பொருட்செலவு கள் வரவாய்ப்புகள் உள்ளன. பிள்ளைகளால் பொருள் வரவுஉண்டாகுவதுடன் அவர்களாலேயே காரணமற்ற பொருட்செலவுகளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப்பழகவும். கணவன் - மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபம் தவிர்த்தல் நல்லது. உற்றார் உறவினர்களால் மனச்சஞ்சலம் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்கள் போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்ப்புகள் வந்துசேரும். தேவாலயத் திருப்பணிகளில் கலந்துகொண்டு தொண்டாற்றுவதன்மூலம் மன நிறைவு ஏற்படும்.

### சிங்கம்

வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். கோர்ட் வழக்கு சம்பந்தமாகிய விசயங்களில் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுதொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். கணவன் - மனைவி உறவுகளில் பிரச்சினைகள் வந்துநீங்கும். உடம்பில் தலை மற்றும் முகம் ஆகிய உபாதை கள் வந்துதீரும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும். உத்தி யோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும்.

### கன்னி

தூரத்து உறவினர்களின் வரவால் எதிர் பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன்வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த மனச்சந்தோசம் ஏற்படும். நீண்டதூரப் பயணங்களின்போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சிலகாரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். விவ சாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்கு பலித மாகும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றிகள் பெறுவீர்கள். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ள காலமாகும். உடம்பில் காய்ச்சல், உஷ்ணம் ஆகிய உபாதை கள் வந்துபோகும்.

### துலாம்

மிகுந்த பிரயாசையின்மேல் பொருளா தாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளித்துக்கொள்வீர்கள். பிள்ளைகளின் சுப காரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். கண்களில் கவனம் தேவை. வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். ரேஸ், லோட்டரி போன்ற விசயத்தில் பணம், பொருள்களை ஏமாறாமல் இருக்கவும். தென்திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நல்ல முடிவு- கள் கிடைக்கும்.

### விருச்சிகம்

தந்தை - மகன் உறவில் இருந்துவந்த பிரச்சினைகள் தீரும். திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் மிகுந்த கவன- முடன் இருக்கவும். நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன்வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட் செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும், பொருட்செலவுகளும் உண்டாகலாம். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

புதியதாகக் கடன்வாங்க செய்த முயற்சிகளில் வெற்றிபெறச் சற்றுக் காலதாமதம் ஆகலாம். காணாமற்போன பொருட்கள் காவல் துறையினர்களால் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சூதாட்டமாகிய ரேஸ், லோட்டரி போன்ற விசயத்தில் பணம், பொருள் ஏமாற்றம் அடைய நேரிடும். நீண்டகாலமாக இருந்துவந்த பிணிகளுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்றுவருதல் நல்லது. செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் கவனம் தேவை. உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏறபடலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும்.

### மகரம்

மகான்களின் தரிசனத்திற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள திட்டம் போடு வீர்கள். ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு மனமகிழ்ச்சி அடையவாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள்வரையில் இருந்து வந்த பிரச்சினைகள் மாறி மனநிம்மதி அடைய வாய்ப்பு உள்ள காலமாகும். இதுநாள்வரை யில் இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள்வரவு உண்டாகும். குல தெய்வ ஆலயவழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

### கும்பம்

விவசாயத்தில் புதிய முறைத் திட்டங்களின்மூலம் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கைவந்துசேரும். இரும்பு, இயந்திரம், இரசாயனம் போன்ற துறையைச் சார்ந்தவர்கள். பலசரக்கு, எண்ணெய் வகைகள், பழைய இரும்பு பொருட்கள் ஆகிய வியாபாரம் செய்வோர்கள், இன்சினியரிங் துறையை சார்ந்தவர்கள் நற்பலன் அடைவார்கள். யாத்திரையில் மிகவும் கவனமுடன் பயணம் செய்துவருதல் நல்லது. குழந்தைகளுக்காக திடீர் மருத்துவச்செலவுகள் ஏற்படும். விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள் பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிக வும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும்.

### மீனம்

புதிய நண்பர்கள் சேர்க்கையால் எதிர்பாராத தனலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. எதிர்பாராமல் மஹான்களின் நல்லாசிகள் கிடைத்து அதனால் மனத்திருப்தி அடையலாம். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். உடம்பில் எலும்பு, நரம்பு சம்பந்தம் ஆகிய பிணி கள் வந்துபோகும். வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். வெளி நாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும். இரசாயனம், பழைய பேப்பர் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை விற்பனை செய்வோர்கள் இலாபம் அடைவார்கள்.




நைஜீரியா நாட்டில் உள்ள கலபார் நகரத்தில் கலாசார விழா இடம்பெற்றபோது பாரம்பரிய குழு நடனம் ஆடிய பெண் கலைஞர்களையே காண்கின்றீர்கள்.




பிரபஞ்ச அழகு இராணி போட்டி அமெரிக்காவில் லாஸ் வேகஸ் நகரத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.




சோவியத் தலைவர் யோசப் ஸ்ராலினின் 136 ஆவது ஆண்டு பிறந்தநாள் நினைவை முன்னிட்டு இவரின் நினைவு தூபிக்கு ரஷ்ய கமியூனிஸ்டுகள் மரியாதை செலுத்தினார்கள்.









இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.